OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 16 MAY 1910 MADRAS.

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| புஸ்தகம் I. Vol I. | சௌம்ய௵ பங்குனிமாதம் March 1910 | சஞ்சிகை 7 No. 7 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

புதுச்சட்ட நிரூபணச் சபைப் புகழ்ச்சி.

சென்றமீ புதுச்சட்ட நிரூபணச்சபை முதன்முதற் கூடி, 'பத்திரிகைகள்' விஷயமாய்ச் சட்டம் ஒன்று பிறப்பித்ததில், அதை யொட்டி ராஜப்பிரதிநிதியவர்கள் அச்சபையின் யோக்கியதையை இவ்வாறு வருணித்தார் :—" இந்தச்சட்டம் பிறந்ததற்குக் காரணங்களை முந்தியே மெம்பர்கள் கேட்டிருப்பதால், மறுபடி அவைகளைக்குறித்து நானொன்றும் பேசவரவில்லை. ஆனால் இன்றையதினம் இவ்வளவு சீராக நடந்த நடவடிக்கை எதைக்குறிப்பிடுகிறதென்றுமட்டும் நான் சொல்லவேண்டும். இந்தியாவிலுள்ள மகா ஜனங்களில் எல்லாவருக்கத்தவரையும் பிரதிநிதிகள் மூலமாய் இப்பெருஞ்சபையில் நாம் இம்மாதிரிச்சட்டம் வேண்டுமோவென்று கேட்டதில், அவர்களனைவரும் ஏகோபித்து இந்தச் சட்டம் அவசியமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பத்திரிகைகளுக்கு நிர்ப்பந்தம் அதிகப்படுகிறதென்று அவர்களுக்குத் தெரியும். என்றாலும் தேசக்ஷேமத்தை யபேக்ஷித்து இம்மாதிரி யொருசட்டமிருக்கத்தான் வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கண்டதில், இவ்விஷயத்தில் கனம் மெம்பர்களுக்கும் அம்மாதிரியே அபிப்பிராயமிருப்பது மெச்சத்தக்கதே. இதில் ஒற்றுமையிருப்பதனால் இச்சபை விஷயத்தில் நான் மனதிலெண்ணியிருந்தது நிறைவேறிற்று. அதாவது, இந்திய மகா ஜனங்களை இதுவரையிருந்ததைவிட அதிகமாய்ச் சேர்த்து மந்திராலோசனை செய்வதினால், ராஜாங்கத்திற்கு வலுமை யதிகமாகுமே தவிரக் குறையாதென்று நான் நினைத்ததாம். ஆதலாலினிமேலும் நடக்கும் காரியங்களில்,தேசத்தில் ஆங்காங்கு ஆகவேண்டியவைகளைக் கிரமமாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துத் துரைத்தனம் ஆற்றொழுக்காக நடக்கும்படிப் பிரதிநிதிகள் செய்வார்களென்று நம்புகிறேன். இதுதான் இதுவரை

கவர்ன்மெண்டாருக்கு இல்லாமலிருந்தது. இக் குறைவுக்கு இனியிடமிராதென்று நம்புகிறேன்,'' என்றார்கள்.

பார்லிமெண்டு கூடுதல்.

சென்ற மாசம் 21-தேதி புதுப்பார்லிமெண்டு கூடிற்று. முதன் மந்திரியாகிய கனம் ஆஸ்கித்துரையவர்களுடைய கோட்பாடுகளை விளக்கும் 'ஸ்ரீ முகம்' வழக்கப்படி வாசிக்கப்பட்டது. இந்தியா கவர்ன்மெண்டைப்பொறுத்தமட்டில், சட்டநிரூபணச்சபை கூடியதையும், அதனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கிடைத்த பலத்தையும், பெருமையையும் அதில் விளக்கியிருந்தது. எதிர்க்கக்ஷியாரில், நமக்கு முன்னொருகாலத்தில் ராஜப்பிரதிநிதியாயிருந்த லான்ஸ்டௌன் பிரபுவும் இவ் விஷயமாய்ப் பேசினார். சட்ட நிரூபணச்சபையைப்பற்றி முதன் மந்திரியவர்கள் சொன்னது தனக்குச் சந்தோஷகரமேயென்றாலும், இந்தியாவில் சமீபகாலத்தில் நடந்துவந்து கொண்டிருக்கும் கொலைகள், ராஜத்துரோகம், கலகங்கள் இவை முற்றும் அடங்கிற்றென்பதைப் பற்றியொன்றும் சொல்லவில்லையென்றும், கலகத்தை யடக்கப் பிறந்த சட்டங்கள் சரியான முகூர்த்தத்தில் பிறந்தனவென்றும், ஆனால் அப்படிச் சட்டம் பிறந்த காலத்திலேயே, இதுவரை கோட்டத்திற் கிடத்தியிருந்த சிலரை விடுதலை செய்ததைப் பற்றி இங்கிலாந்தில் அபிப்பிராயபேதம் வலுத்திருக்கிறதென்றும் அவர் சொன்னார். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டாருக்குச் சகலமும் தெரியுமாதலால், அவ்விஷயத்தில் அவர்கள் செய்ததற்குத் தாம் ஆக்ஷேபமொன்றும் சொல்லுவதில்லையென்றும் அவர் கூறினார். சர்க்கார் பக்ஷமாக க்ரூ பிரபு இதற்குச் சமாதானம் சொல்லி, இந்தியா கவர்ன்மெண்டார் செய்தது மெத்தவும் சரியென்றும், இவர்களைக் கிடங்கிலடைத்ததற்கும், தற்காலம் மீட்டதற்கும் தக்க காரணங்கள் உண்டென்றும், அவையெல்லாம் இந்தியா கவரன்மெண்டார் தீர்க்கமாக ஆலோசித்துத்தான் செய்ததாகவும் சொன்னார்.

லிபரல் கக்ஷி மறுபடி உத்தியோகம் வகித்ததென்றாலும், பட்ஜெட் விஷயமாகவும், பட்டவர்த்தனர் சபை விமர்சன விஷயமாகவும் தகரார் சுளுவில் தீர்ந்தபாடில்லை. இனியிரண்டு மாதங்களாவதற்குமுன், இந்த ரகசியம் வெளியாகிவிடும்.

இந்திய மகம்மதீயரைக்குறித்து டைம்ஸ் பத்திரிகை.

சமீபத்தில் டில்லியில் இந்தியா வெங்குமுள்ள மகம்மதீயருடைய பிரதிநிதிகள் கூடிப் பேசிய வைபவத்தைப்பற்றி இங்கிலாந்தில் டைம்ஸ் பத்திரிகை இவ்வாறு கூறுகிறது. "இந்தியாவில் ஒற்றுமைவேண்டிக் காரியம் முதன்முதல் ஆரம்பித்தவர் ஹிந்துக்களே. வெகுநாள்வரை அதற்கு அவர்கள்மட்டுமே யுழைத்துவந்தார்கள். ஆனால் அது அவர்களுடன் நிற்கவில்லை. இப்பொழுது கொஞ்சகாலமாக மகம்மதீயரும் தங்களுக்குள் ஒற்றுமைவேண்டிப் பாடுபடுகிறார்கள். ஏனெனில் ஹிந்துக்களுக்குள்மட்டும் ஒற்றுமை பலத்துவந்து, தாங்கள் சிதறுண்டுகிடப்பதில், தங்களுக்கு உண்டாகக்கூடிய பலக்குறைவும் க்ஷீணமும் அவர்களுக்கு நன்றாக மனதிற் பதிந்துவிட்டது. ஆகவே டில்லியில் கூடிய மகாநாடு இதற்கு நல்ல சாக்ஷி. இதுவரை இந்திய மகம்மதீயருக்குள் இவ்வளவு ஒற்றுமை யிருந்ததேயில்லை. ஹிந்துக்களும், மகம்மதீயரும், தனித்தனியாகக் கக்ஷிகட்டியெதிர்த்துவருவது அவர்களுக்கும் க்ஷேமகரமல்ல, இந்தியாவுக்கும் க்ஷேமகரமல்லவென்பது மெய்யேயென்றாலும், மகம்மதீயரை எப்படியோ போகட்டுமென்று விட்டு ஒருகக்ஷியார்மட்டும் வலுத்துவருவதென்றால், அதுவும் இந்தியாவுக்கு க்ஷேமகரமல்லவென்பது நிச்சயம். ஆதலால் மகம்மதீயருக்குள் இன்னும் பெருங் குணங்கள் இருப்பதால்,

அவர்களுடைய மதம், ஆசாரம் முதலியன காலத்திற்கேற்க மாறவேண்டுமென்பதும், அதற்காக அவர்கள் ஒன்று சேரவேண்டுமென்பதும் எல்லோரும் ஒப்பக்கூடிய விஷயமாம்.

இச்சபையில் சத்திரபதி ஆகாகான் பஹதூர் அவர்களும், பிரிவீகவுன்சில் ஜட்ஜி மகாகனம் அமீர் அலி பஹதூர் அவர்களும், இவ்விஷயமாய் வெகு அழகாகப் பேசினர்கள். மகம்மதீயமதத்திலும், சதாசாரத்திலும் அவர்களிருவருக்கும் பக்தி வெகு அதிகம். என்றாலும் காலத்தை யனுசரித்து ஆகவேண்டிய காரியங்களை அவர்கள் மறந்தவர்களல்லர். இந்தியா கவர்ன்மெண்டு விமர்சனம் இத்தேசத்திற்கு வெகு க்ஷேமகரமென்றும், அவ்விஷயத்தில் ஹிந்துக்கள் முதலிய இதர இந்தியர்களுடன் மகம்மதீயரும் ஒன்று சேர்ந்து ஒரு முகமாய் உழைப்பது முதற்கடமையென்றும் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் துரைத்தனம் தொடங்கியது முதல் நாளதுவரை நடந்து வந்திருக்கும் நற்காரியங்களெல்லாம் அந்த ராஜாங்கம் க்ஷேமமாயிருந்தால் மட்டுமே இன்னும் தழைத்தோங்கிப் பலப்படுமாதலாலும், அவ்வாறு பலப்பட்டாலொழிய, இந்து மகம்மதீயரிருவருக்கும் க்ஷேமம் குறையுமாதலாலும், இருகக்ஷியவரும் அவ்விஷயத்தில் நன்றி, விசுவாசம்வைத்து நடந்து வரவேண்டுமென்பது இருவருடையவும் கோட்பாடு.

இதை யொழித்து வேறு விஷயங்களைப் பேசியதில், மகம்மதீயருக்குள் தனவான்களும், மிராசுதாரர்களும், வியாச்சியம், வியவகாரம் முதலிய வெறுங்காரியங்களிற் காலத்தையும் திரவியத்தையும் செலவழித்துப் பாபராகி வருவதையும், மகம்மதீயர் முன்னாட்களில், வியாபாரம், கைத்தொழில், முதலியவற்றில் தேறியிருந்தமாதிரி இப்போதில்லாமல், வர வர க்ஷீணித்து வருவதையும், வித்தை யென்பது மகம்மதீயருக்குள் பலக்காமலிருப்பதையும், சீக்கிரம் பரிகரிக்க வேண்டுமென்று, இவர்களிருவரும் வற்புறுத்தினார்கள். ஆகவே மகம்மதீயத் தனவான்களும், விவேகிகளும் இந்த லக்ஷியங்களை முன்னிட்டு உழைக்கவேண்டுமென்றும் இவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நாமும் அதை மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறோம்.''

**இருபதாம் நூற்றண்டு தமிழகராதி.**

பிரபலத் தமிழ்வித்துவானாகிய பி. ராமநாதன் அவர்களால் இயற்றப்பட்ட இவ்வகராதியைப் பார்த்தவர்கள் மெச்சக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம். சென்றமீ மகாபாரதத்தைக் குறித்துப் பேசுகையில், "தமிழிலாவது, சம்ஸ்கிருதத்திலாவது இனி யாகவேண்டிய பெருங்காரியங்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமே ஆகவேண்டி வந்துவிட்டன,'' வென்று நாம் எழுதினோமல்லவா? அதற்கு அத்தாக்ஷியாகக் காலஞ்சென்ற டாக்டர்போப் 'ஐயரவர்கள்,' இரண்டுவருஷத்திற்கு முன் பெரிய தமிழகராதி யொன்று ஆகவேண்டுமென்று ஆலோசித்ததில், அது இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் தான் நடக்கக் கூடுமென்றும், அதற்காகத்தான் பாடுபட்டுச் சேகரித்த சரக்கெல்லாம் அவ்விடத்தில் தானிருப்பதாகவும், சொல்லி மதிராசு கவரன்மெண்டைத் திரவியசகாயம் வேண்டினர். அப்படியே சகாயமும் கிடைத்தது. ஆதலால் அது விஷயமாய்ப் பிரயத்தனம் நடந்து கொண்டுதானிருப்பதாக நமக்கு ஞாபகம்.

சங்கதி இப்படியிருப்பதில், இத்தருணத்தில் தமிழர் ஒருவர் இப்பெரியகாரியத்தை யெடுத்து முடித்து விட்டாரென்று கேட்டு நமக்கு மெத்தவும் சந்தோஷம். எல்லா விஷயங்களும் இதிலடங்கி யிருக்கின்றன. எல்லாப் பதங்களுக்கும் பொருள் தக்க சாக்ஷியத்துடன் விளக்கியிருக்கிறது. இதுவரை அகராதி,

கிகண்டு இவைகளிற்கண்ட விஷயங்களல்லாமல் நூதனமாக 10,000 பதங்கள் சேர்ந்திருக்கின்றனவாம். இங்கிலீஷில், 'வெப்ஸ்டர்' எப்படியோ, சம்ஸ்கிருதத்தில், 'வாசஸ்பத்தியம்' எப்படியோ, அதுபோலவே இப்பேரகராதி தமிழுக்குமெனக் கேள்விப்படுகிறோம். முகவுரையில் மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியார் எழுதுகிறார், "இந்தியர்கள் மேனாட்டுக் கல்விகற்றுத் தேறியதுமட்டும் போதாது. கற்றதைத் தத்தம் தேசீயபாஷைகளில் தெளிவுறப்பேசவும், எழுதவும் தெரிந்துகொண்டால், அப்போதுதான் அக்கல்வியினால் அவர்களுக்கு நற்பயனுண்டானதாகச் சொல்லவேண்டும்," என்று. இதற்கு இவ்வகராதிபோன்ற 'இலக்கணக்கிரந்தங்கள்' முக்கிய சாதனமாதலால், இதையொட்டி 'அபிதான விளக்கங்களும்,' மற்றும் வேண்டிய சாதனங்களும் சீக்கிரம் கிட்டுமென்று நாம் நம்புகிறோம்.

**கிராமக்கோர்ட்டுகள்.**

மதுரை ஜில்லாவில் தற்காலம் கலெக்டராக இருக்கும் ஸ்ரீமான்-பட்டர்வொர்த்து துரையவர்கள், அவ்விடத்திலுள்ள சில கிராமங்களை ஒருவட்டமாக்கி, அதற்கு ஒரு கிராமக்கோர்ட்டு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அது ஜனங்களுக்குத் திருப்திகரமாயிருப்பதாகவும், மற்ற ஜில்லாக்களிலும் கலெக்டர்கள் அம்மாதிரி செய்தால் நலமென்றும் நமது விருத்ததிவான் பஹதூர் அவர்கள் எழுதுகிறார்கள். முந்தியொருமுறை இதைக் குறித்து நாமெழுதியதில், இக்கோர்ட்டுகள் விமரிசையாய் நடப்பதில்லை யென்று கலெக்டர்கள் ரிபோர்ட்டு செய்வதாகச் சொன்னோம். அதைத் தீரவிசாரித்ததில், இக்கோர்ட்டு நடத்தும் கிராம முன்சீபுகளை 'வில்லைபோட்டவன்' எவனும் அதிகாரம் செய்யும்படி யிருக்கும்வரை கோர்ட்டுகள் சீராக நடப்பது சிரமமென்று கண்டோம்.

ஆதலால் இக்கோர்ட்டுகள் கிரமமாக நடந்து ஜனங்களுக்குச் சுகமுண்டாக்கவேண்டுமானால், முதலாவது 'வி. மேக்கள்' சுதாவில் யோக்கியதையுள்ளவர்களா யிருக்கவேண்டும். அதாவது அவர்களுக்கு ஏதோ மரியாதையாய் ஜீவிக்கவேண்டிய வளவிற்குப் பூமி காணியோ, வேறு மூலியமோ இருக்கவேண்டும். சட்டம், உலக நடவடிக்கை, இவ்விஷயங்களில் வேண்டிய ஞானமிருக்கவேண்டும். அவர்களைச் சர்கியூட் செய்யும் ரிவினியூ முதலிய டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் மரியாதையுடன் நடத்தவேண்டும்.

இப்படியெல்லாம் இன்ன இடத்தில் நடக்குமென்று கலெக்டர்கள் எப்படியறிவது? ஜோசியம் கேட்பதா வென்று கேட்கலாம். ஒரு சில்லரைவிஷயம் சூசனைகாட்டுமென்று நமதபிப்பிராயம். 'கோஆபரேஷன்' முறையில் பாங்குகள் எங்கெந்த வட்டத்தில் வேரூன்றிச் செழிக்கின்றனவோ, அவைகளிலெல்லாம், கிராமக்கோர்ட்டுகள், கிராமப்போலீஸ், கிராமச் சுகசாதனங்கள், கிராமப் பள்ளிக்கூடங்கள், ஆகிய இவையனைத்தும் செழிக்குமென்பது நமக்கு நிச்சயம். ஆதலால் கோஆபரேடிவ் ரிஜிஸ்திரார் அவர்களைக்கேட்டுக் கலெக்டர்கள் பரீக்ஷைக்கோர்ட்டுகள் வைத்துப் பார்க்கவேண்டும். கலெக்டர்களுக்கும், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட ரிவினியூ உத்தியோகஸ்தருக்கும் தெரியாத அனேக கிராமரகசியங்கள் ஷெயாருக்குத் தெரியுமென்பது நமக்கு நம்பிக்கை. காரணம் பிரசித்தம்.

**சூரியகிரணத்தை மடக்குதல்.**

சுமார் 150௵-ங்களுக்குமுன் இங்கிலாந்தில் இருந்த கிரந்த கர்த்தா. ஒருவர் தமாஷுக்காக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் ஏதோ ஒரிடத்திலுள்ள புத்திமான்கள், தங்களுடைய யுக்தி விசேஷத்தினால் உலகத்திற்குப் பலவித நன்மைகளை யுத்தேசித்து ஏதேதோ பரீக்ஷைகள் செய்துவருவதாகச் சொல்

லியிருக்கிறார். சிலர் மலத்தை மறுபடி உணவாக்கவேண்டி ரசாயன முறைப்படி பரீக்ஷித்து வந்தாராம். சிலர் சூரிய கிரணங்களைப் பிடித்துப் புட்டிகளிலடைத்து உஷ்ணம் போகாமற்படி முத்திரை வைப்பதற்காக முயன்றாராம். இப்படி யடைத்து வைப்பதி லென்னபிரயோஜன மென்றதற்கு அவர், அவைகளைக் குளிர்ப் பிரதேசங்களுக்குக் கொண்டுபோய்த் திறந்துவிட்டு, வெள்ளரி முதலிய உஷ்ணதேசத்துச் சாமான்கள் விளைவிப்பதற்கு, என்றாராம்!

இப்படித் தமாஷ்செய்ததெல்லாம் போய்த் தற்காலம் இந்தியாவில் ஆல்மோராவில் பண்டித ஸ்ரீ கிருஷ்ண ஜோசியவர்கள், 'பானுதபம்' என்னும் யந்திரமொன்றை நிருமித்திருக்கிறார்கள். இதில் சில கண்ணாடிகளும், கயிறுகளும் சேர்ந்து, கடிகாரத்தில் காணுவனவாகிய சக்கரங்கள்போன்ற சக்கரங்களால் தாமாகவே சுற்றி எப்பொழுதும் சூரியனுடைய கதியை யனுசரித்து நிற்பதால், சூரிய கிரணங்களின் உஷ்ணமெல்லாம் வேண்டிய இடத்திலொருங்கு சேர்ந்து பெருந்தீயின் பலனைக் கொடுக்கின்றன. இத்தீயைக்கொண்டு சமையல் முதலிய காரியங்கள் மட்டுமேயன்றி, இரும்பு வகைரா லோகங்களையும் உருக்கியோ, நீராவியுண்டாக்கி அதன் மூலமாய் யந்திரங்களை இயக்கியோ, வேலை செய்யலாம். கண்ணாடிகளைப் பெருக்கினால் உஷ்ணமதிகரிக்கும்.

இந்தியாவில் இது வெகு உபகாரமாயிருக்கும் என்பதில் தடையில்லை. விறகு விலையதிகரித்துக்கொண்டே வருகிறது. சூரியனோ அனேகமாய் வருஷத்தில் எக்காலத்திலும் நம் மேல் பூரணதிருஷ்டிவைத்தே வருகிறார். விறகுவாங்கிக் காரியம் செய்து வரக்கூடியவர்கள் இனிச் சிறிது சிறிதாகக் குறைந்தே வருவதால், சூரியகிரணத்தை உபயோகித்துச்சமையல் முதலியகாரியங்களை நடத்துவது வெகு நல்லயோசனை. பண்டிதர் தீர்க்காயுசாக விருந்து தாமாரம்பித்த தருமகாரியத்தைப் பக்குவப்படுத்தி உலகத்திற் கெல்லாம் உபகாரியாகப் புகழ்ச்சி யடையவேண்டு மென்பது நமது பிரார்த்தனை.

ஜாலவிளக்குகளும் வித்தியாப்பியாசமும்.

சென்ற மாசம் மதுரைவக்கீல் ஸ்ரீமான்-நாரணையரவர்கள் மதிராசில் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு ஜாலவிளக்கும்படங்களும் வைத்துக் குழந்தைகளுக்கு உபயோகமாகும்படி அனேக விஷயங்களை விளக்கிப் பிரசங்கம் செய்தார். தவிர முடிவில் இம்மாதிரிப் பிரசங்கங்கள் ஆயிரக்கணக்காகவும், எல்லா இடங்களிலும் நடக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார். இதை நாம் வெகு சந்தோஷத்துடன் ஆமோதிக்கிறோம். கோயம்முத்தூரிலும், வேறு பிரதான பட்டணங்களிலும் நாலு வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசத்தையும், ஜப்பானியரையும் பற்றி ஸ்ரீமான்-ஷார்ப் துரை இம்மாதிரிப் படங்கள் கொண்டு விளக்கியதில் எவ்வளவு ஜனங்கள் கூடினார்களென்றும், எவ்வளவு சிரத்தையாகக் கேட்டும், பார்த்தும் வந்தார்களென்றும், அதனால் எவ்வளவு பிரயோஜன முண்டாயிற்றென்றும் நமக்கு நன்றாய்த்தெரியும்.

ஆனால் இப்போதிருக்கிறபடி இந்த விளக்குகளுக்கு உதவும் படங்கள் மேனாட்டு வைபவங்களைப்பற்றியனவே ஆதலால், கல்வி விசேஷமில்லாத நமது ஸ்திரீ ஜனங்களுக்கும், குடித்தனக்காரர் முதலியோருக்கும் இவைகளால் அதிகமாகப் பிரயோஜனமில்லை. இதைவிட்டு இந்தியாவிலுள்ள மலை, செடி, நதி, புற்பூண்டுகள், பசுபக்ஷிகள், மனிதவர்க்கங்கள், கோயில் கோபுரம், முதலியவற்றைப் படம் பிடித்து, ஏதோ ஒரு கோர்வையாக வைத்துக்கொண்டு, ஆங்காங்குப் பிரசங்கித்துவந்தால் எத்தனையோ அனுகூலமும் புண்ணியமுமுண்டு. தவிரப் பழங்காவியங்களான ராமாயண முதலியவற்றையும், சிந்தாமணி, சிலப்பதிகார முதலியவற்

றையும் சித்திரப்படங்களுதவியைக்கொண்டு சாமான்னியருக்குக் காட்டிவந்தால், எவ்வளவு பலன் கிடைக்குமென்பதை யாரும் அறியலாம். சீதையம்மாள் அசோகவனத்தில் இருக்கையில் ராவணன் வரவைக்கண்டு நடுங்கி ஒன்றுந் தோன்றாமல் தன் உடம்பைக் கைகளால் மறைத்துக்கொண்டு பேசும் சந்தர்ப்பத்தைப் படத்தின் மூலமாய் விளக்கி, வால்மீகி பகவானுடைய வர்ணனையும் சேர்த்துவிட்டால், காவிய ரஸம் எவ்வளவு தூரம் சாமான்னியரைக்கூடத் திருப்தி படுத்துமென்பதை அனுபவத்தினாலறிய வேண்டும். இத்தியாதிகாரியங்களைப் பட்டணங்களில் அனேக இடங்களிலும், கிராமங்களில் அப்போதப்போதும் நடத்தி வருவதற்குச் சௌகரியமென்று கிட்டுமோ, அன்றுதான் நம்மவர்களுக்குக் கலைவாணியருள் பூரணமாகக் கிடைக்கும். இம்மாதிரிப் படங்கள் நமது பொட்டக்கிராப் கம்பனியார்கள் ஏன் இன்னும் பிடிக்கவில்லையென்பது தான் நமக்கு விளங்கவில்லை. நல்ல காசும் கிடைக்கும், புண்ணியமு முண்டு. யாராகிலும் எடுத்துச் செய்வார்களா ?

**ஸ்ரீமான் கிருஷ்ண கோபால குப்தர்.**

இந்தியா செக்ரடேரியவர்கள் சபையின் மெம்பராகிய இந்தப் பங்காளக் கனவான் சென்றமாசம் கொச்சி சமஸ்தானத்திற்கு விருந்தாகிப் போயிருந்தார். அவ்விடத்தில் சத்திரபதி ராஜாவும், பிரஜைகளும், எல்லோரும் இவருக்கு உபசாரம் செய்து ஆசிகள் வழங்கினார்கள். ராஜா சொன்னார் :—'' ஸ்ரீமான் குப்தருக்கு நாம் வீணாகச்சிரமம் கொடுத்தோம். அவர் தென்னிந்தியாவையும் இதர பிரதேசங்களையும் பார்க்கவேண்டுமென்று வந்ததில், சாவகாசம் அதிகமில்லாததுகொண்டு, தேசசஞ்சாரம் அவசரமாகச் செய்துவருகிறார். ஆதலால் இவ்விடத்தில் நமது வேண்டுகோளுக்கிசைந்து வந்ததுபற்றி நமக்குப் பெருமையும் சந்தோஷமும் வெகு அதிகம். இவருடைய குணங்களை வருணிக்க இது சமயமன்று. ஆனால் தற்காலம் நமது செக்ரடேரியாகிய மார்லிப்பிரபு இந்தியாவுக்குச் செய்த அனேக நன்மைகளில், நம்மவராகிய இவரைத்தமது சபைக்கு மெம்பராக்கிக்கொண்டது பெரிய விசேஷமென்று நாமும் இதர இந்திய மகுடவர்த்தனரும் கொண்டாடுகிறோம். ஆதலால் இவர் இந்த ராச்சியங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மறுபடி க்ஷேமமாக இங்கிலாந்து போய்ச்சேர்ந்து, தாம் வகித்திருக்கும் அலுவலில் இன்னும் பல வருஷங்களிருந்து, இத்தேசத்திற்கு நன்மையையும், தமக்குப் புகழையும் தேடிக்கொள்ளும்படி ஈசுவரன் அனுக்கிரகிக்க வேண்டுமென்பது நமதபிப்பிராயம்,'' என்றார்.

இதற்குப்பதில் உபசாரஞ் சொல்லுவதற்கெழுந்த ஸ்ரீமான் குப்தர் கூறியது:—''கொச்சிராச்சியத்தில் நேற்று நான் கால் வைத்தது முதல் இந்த க்ஷணம்வரை இச்சமஸ்தானத்துப் பிரஜைகள் செய்த உபசாரங்களையும், இப்போது சத்திரபதி ராஜா அவர்கள் மொழிந்த ஆசீர்வசனத்தையும், இட்டவிருந்தையும் நான் இனி எக்காலத்திலும் மறப்பதற்காகாது. பலவிதத்திலும் மனோகரமான இந்த ராச்சியத்தில் நான் கண்ட காக்ஷிகளையும், இந்தச் சமஸ்தானத்துப் பிரஜைகளாகிய மகாஜனங்களுடைய ரூபம், நற்குணம் இவைகளையும், நான் என்மனதிற்பதியக் கொண்டிருக்கிறேன். மலையாள சீமையில் அனேக வழக்கங்கள் பிராசீனமாயும் விசித்திரமாயுமிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் ஹிந்து மகாஜனங்களுக்குள் எங்குப்பார்த்தபோதிலும், ஸ்திரீ ஜனங்களாகிய ஸ்ரீமதிகளுக்கு இத்தேசத்தில் கிடைத்திருக்கும் பெருமையும், பதவியும், வேறெங்குமில்லையென்பது நிசம். இந்தக் குப்தமான விஷயத்தை அதிகம் விளக்குவது சரியன்று. ஏனெனில் என்மனதிலுள்ளதை யெல்லாம் வெளிப்

பணமாயச்சொல்லி விடுவேனேயாகில், இவ்வளவு சௌபாக்கியம்பெறுத வேறு பிராந்தத்தவராகிய ஸ்ரீமதிகளுக்கு வயிற்றெரிச்சலுண்டாகிவிடும்!

சத்திரபதி அவர்கள் சொல்லியதெல்லாம் எனக்குப் பொருந்துமென நினைப்பேனுகில், நான் பெருத்த முட்டாளாக வேண்டும். என்றாலும், ஏதோ சக்தியானுசாரம் நான் செய்த அற்ப காரியத்தை இவ்வளவு பெரிதாகப் பாவித்து, எனது குறைகளை மறந்து, நான் சென்றவிடமெல்லாம் எனக்கு இவ்வளவு தூரம் சீரும் சிறப்பும் நடப்பதைப் பார்க்குமிடத்து, இந்திய ஜனங்களைப்போல் நன்றியும் விசுவாசமு முள்ளவர்கள் வேறு யாருமில்லையென்பது நிச்சயம். பொதுக் காரியங்களில் உழைப்பவருக்கு, அதனால் மகா ஜனங்களெல்லா வகுப்பினருக்கும் உண்டாகும் திருப்தியைவிட மேலான வெகுமானம் இல்லை. ஆதலால் உங்களெல்லோருக்கும் நான் வந்தனம் செய்கிறேன். சத்திரபதியவர்கள் எவ்வகையாய்ப் பார்த்தாலும் தருமதுரையும், பிரபுவுமாதலால், அவரும்,அவரது அபூர்வராச்சியமும், எல்லாவளமுங் கூடிப் பல்லாண்டு வாழக்கடவதாக," என்றார்.

இம்மாதிரி நம்மவர்களுக்கு நாம் மரியாதை செய்வது விசேஷமாக நமக்குக் காணுவதாலும், அதனால் இனி நமக்காகக் கூடிய நற்காரியங்கள் பலவாதலாலும், இதை யிஷ்டர் கவனித்தல் வேண்டும்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள நம்மவர்களுக்கு நற்குறி.

தென் ஆப்பிரிக்காவில் குடியேறி யிருக்கும் நம்மவர்களுக்கு முந்தி யிருந்த தசையையும், இப்போது சில வருஷங்களாகக் காலனி கவர்ன்மெண்டார் அவர்கள் விஷயத்தில் செய்துவரும் அநீதங்களையும் பற்றி முந்தி யொருமாதத்தில் குறிப்பிட்டோம். அதைப் பரிகரிப்பதற்காக இந்தியாவில் காங்கிரஸ் மகா சபையிலும், வேறிடங்களிலும் நடந்துவரும் பிரயத்தனங்களையும் சற்று விவரித்தோம். இவ்விஷயத்தில் சர்க்காருக்கும் நமக்கும் ஒரே கக்ஷியாதலால், புதுச்சட்ட நிரூபணச் சபையில் சென்ற மாசம் கனம் ஸ்ரீமான்-கோகலே அவர்கள் பிரேரேபித்து, வேறு அனேகர் ஆமோதித்துச் சர்க்காரும் ஒப்புக்கொண்டு இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது:-"நெட்டாலுக்கு இந்தியாவிலிருந்து கூலியாட்களைச் சேர்த்து, இதுவரை நடந்து வந்ததுபோல் நிர்ப்பந்தித்து, அனுப்புவது கூடாதென்று தடுக்க ராஜப்பிரதிநிதியவர்களுக்கு அதிகார மிருக்கிறது," என்று. இதையனுசரித்துச் சீக்கிரம் ஒரு சட்டமும் பிறக்குமென்று தெரிவதால், அதைக்கேட்டு நாமெல்லோரும் சந்தோஷிக்க வேண்டும். முந்தி நாம் சொல்லியபடி நெட்டால் முதலிய தேசங்கள் இப்போதடைந் திருக்கும் உன்னத தசைக்கு வருவதற்கு நமது கூலியாட்களே முக்கிய காரணம். அந்த நன்றி சிறிது மில்லாமலும், நாமும் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியவர்களுடைய தருமப் பிரஜைகளென்பதைக் கவனியாமலும், கால்நடைகளை நடத்துவதுபோல தேகத்தில் சக்தியிருக்கும்வரை வேலை வாங்கிவிட்டுச் சக்திகுறைந்தால் கூலிகளை நமது தேசத்திற்குத் திரும்பவும் அனுப்புவது பெருத்த அனியாயமாதலால், இனியிதற்குப் பரிகாரம் ஒன்றுமில்லாவிட்டால் நம்மவர்கள் அவ்விடம் போக வேண்டியதில்லை யென்பது மெத்தவும் சரியன்றோ. நம்மவர்களுக்கு இந்தியா விஸ்தாரமாயிருப்பதில், இங்கேயே யிருந்துகொண்டு கஷ்டமோ, சுகமோ, படட்டும். நெட்டால் கவர்ன்மெண்டாருக்கும், மற்றுள்ள தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டுகளுக்கும், நம்மவர்களுதவி யில்லாமலே காரியம் சீராக நடப்பதானால், தாராளமாய்ச் செய்துகொள்ளட்டும். நாம் அவர்களைப் பலவந்தப்படுத்துவதில்லை. இனி நாம் மறுபடி போவதானால் வேண்டிய பந்தோபஸ்து செய்து கொண்டுதான்

போகவேண்டும். சட்டம் பிறப்பதாகச் சங்கதி தெரிந்தால், தானே வழிக்கு வருவார்களென்று நாம் நிச்சயமாயிருக்கலாம். ஏதோ தெய்வகிருபையால், இந்த விஷயத்தில்மட்டும் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரும், பிரிட்டிஷ் பிரஜைகளும், இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியப் பிரஜைகளிலுள்ள சகல ஜாதியாரும், ஒன்றுசேர்ந்து, எல்லோரும் பிடிவாதமாகக் காலனிகளை நமது வழிக்கு வரும்படிக்கும், பாபபுண்ணியத்திற்குப் பயப்படும்படிக்கும், செய்வதென்று தீர்மானித்திருப்பது ஒரு பெரிய நற்குறியென்பது பிரத்தியக்ஷமா யிருக்கிறது.

திருவல்லிக்கேணி, பெரிய சாலையிலிருக்கும் ஸ்ரீமான்-ஜெ. எஸ். ராவ் அவர்கள் இவ்விஷயமாய்ப் பின்வருமாறு மெயிலில் எழுதுகிறார்:—ஐம்பது வருஷத்திற்குமுன் நமது ஆசாரங்களை விசாரித்தால் இந்து ஸ்திரீகளுக்குக் கல்வியும், சுவாதந்திரியமும் வெகு குறைச்சலாயிருந்தது விளங்கும். ஸ்திரீகளுக்கு இரண்டாம் கட்டுத்தான் பிரபஞ்சமாயிருந்தது. தவிரத் தம்மைச்சுற்றி நடக்கும் சமாசாரமின்னதென்று தெரியாது. இங்கிலீஷ் முதலியது படிப்பேனென்றாவது, பள்ளிக்கூடம் போவேனென்றாவது சொல்லியவர்களையும், பிரசங்க முதலியன நடக்கும் சபைகளுக்குப் போவேனென்றவரையும், பஹிஷ்காரம் போட்டுவிடுவார்களென்கிற பயம் வலுத்திருந்தது. இது சாஸ்திரமுமல்ல, அநுபவமுமல்ல. துராசாரமேதான். ஏனெனில் நமது சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்கு விலங்கிட்டே வைத்திருக்கும்படிக்கும், அவர்களுக்குக் கல்வி கூடாதென்றும் எங்காவது சொல்லியிருப்பதாகக் காணவில்லை.

**இந்து ஸ்திரீகளுக்கு விஹாரஸ்தலம்.**

ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் அவர்கள் சொல்லுகிறபடி, பழையநாளில் நமது ஸ்திரீகள் வெகு விவேகிகளாக இருந்ததுமட்டுமேயன்றி, சாஸ்திரம் படித்த பண்டிதருடன் வாதாடிச் சபைகளில் சம்மானம் பெற்றதாகவும் சாக்ஷியங்களிருப்பதனால், இப்படி யிரண்டாங் கட்டைக் காத்துக்கொண்டு, சட்டி சுறண்டியே எல்லோரும் காலத்தைக் கழிக்கவில்லை. இப்பொழுதோ நாம் மேனாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் கைப்பற்றி வந்திருப்பதால், இவ்விஷயத்திலும் ஏதோ நடக்கவேண்டியபடி செய்வதில் அசாஸ்திரீயமாக வொன்றும் காணவில்லை. பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். சிலர் பெரிய பரீக்ஷைதேறியுமிருக்கிறார்கள். பெரிய சபைகளில், ஆசார விவகாரங்களைக் குறித்து அனேகர் பிரசங்கம் செய்தும் வருகிறார்கள். அனேக இடங்களில் ஸ்திரீகளுக்கென்று சங்கங்களேற்பட்டு நடந்து வருகின்றன. ஆனால், இவை யெல்லாம் ஏதோ கொஞ்சம் பெயருக்குக் கிடைத்திருக்கும் பாக்கியமே தவிர, பெரும்பாலார்க்கில்லை. இப்படியிருப்பது நன்றாகக் காணவில்லையாதலால், பெரும்பாலார்க்குதவும் பொருட்டும், ஏதோ கொஞ்சம் பாக்கிய மிருப்பவருக்கு அது பெருகும் பொருட்டும், ஒரு கிளப், என்றால், விவஹாரச்சங்கம் ஏற்பட வேண்டிய தவசியம். இதுவரை ஒரே சங்கம் தான் இந்தப்படி யேற்பட்டிருப்பது. அதிலும் மதவிஷயமான பிரஸ்தாபம் மட்டும் நடந்துவருவது. ஆதலால் அது போதாது. நல்ல மாதிரியாக விஹாரச் சங்கமொன்று ஏற்பட்டு, அதில் நமது ஸ்ரீமான்களும், ஸ்ரீமதிகளும் சாயரக்ஷையில் போய், தேகப்பயிற்சி, படிப்பு, வியாசங்கள், இம்மூலியமாய் மனத்தை விருத்திசெய்து, நல்லறிவு, நல்லொழுக்கம், லோக வியவகாரங்கள் இவ்வகைகளைக்கற்று முன்னுக்கு வரவேண்டும். நாங்கள் எங்களுக் கிசைந்தவரை செய்வதாக உத்தேசித் திருக்கிறோம்,'' என்று. இப்படி யெல்லோரும் கலப்பதில் ஸ்ரீமதிகளுக்குத் துர்லக்ஷணங்கள் ஏதாகிலும் பிடிபடலாமென்று அனேகர் பயப்படலாம். பெண்

REGISTERED 16 MAY 1910 MADRAS.

கல்வி விஷயத்திலும் இப்படித்தான் முட்டாள் ஜனங்கள் ஆக்ஷேபித்தார்கள். இப்பொழுதோ அதை யொருவரும் ஆக்ஷேபிப்பதில்லை. அப்படியே ஒவ்வொரு விஷயத்திலும். ஆனால் இந்த நண்பர் எழுதுகிறபடி, மேனாட்டுச் சம்பிரதாயத்தைத் திடீரென்று கைப்பற்றுவது நல்லதல்ல. இப்பொழுதிருக்கிற ரீதிக்கு, மதிராசு முதலிய பெரிய பட்டணங்களிலும் இம்மாதிரி 'மிசிரவிஹார ஸ்தலங்கள்' ஏற்படுவது சாத்தியமென்று காணவில்லை. ஏனெனில் ராயரவர்கள் சொல்லியதை ஆக்ஷேபித்து ஒரு ஸ்ரீமதி உடனே பதில் எழுதியிருக்கிறார். ஆதலால், ஆரம்பத்தில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சேருகிறவர்களெல்லோரும் தற்காலம் ஸ்ரீமதிகளாகவே யிருந்து 'கிளப்புக்கு' நற்பெயர் கொண்டுவர வேண்டும். காலக்கிரமத்தில் எல்லா மங்களங்களும் தானே வரும்.

**தீண்டாதவர் விஷயம்.**

சென்ற மாசம் 17-ம் தேதி தூத்துக்குடியில் பஞ்சமர் விஷயமாய் ஒரு சபை கூடிற்று. அதில் ஸ்ரீமான்-ஜெ. பீ. பாண்டியன் என்னும் இஷ்டர், இவ்விஷயமாய் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய இடங்களில் தனக்குக் கிடைத்த மரியாதைகளை விவரித்துப் பிறகு இந்நாட்டிலுள்ளவர்கள் பஞ்சமருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்களை விளக்கிப் பேசினார். தான் இப்போது பஞ்சமருக்கென்று குடிகிணறுகள் வெட்டுவதில் கண்ணாயிருப்பதால், திருநெல்வேலி ஜில்லாவில் அநேக இடங்களில் கிணறுகள் வெட்டிவருவதாயும் அதற்கு அமெரிக்காவிலிருந்தும், டிஸ்திரிக்ட்டு ஜட்ஜி, கவர்னரவர்கள், ஆகிய இவர்களிடமிருந்தெல்லாம் திரவிய சகாயம் கிடைப்பதாகவும் கூறி, இம்மாதிரியாக வேண்டிய காரியங்களுக்கெல்லாம் நமது நாட்டார் முயலவேண்டுமென்று சொல்லி முடித்தார்.

சபா நாயகராகவிருந்த ஸ்ரீமான்-வி. கே. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் இவ்விஷயத்தில் வேண்டியமட்டில் பேசியும், எழுதியும் இருப்பவராதலால், சமயத்திற்கு வேண்டியதை வெகு அழுத்தமாகவும், திருத்தமாகவும் பேசினார். "நமது பஞ்சமர் விஷயத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் இப்போது எல்லோருக்கும் தெரியும். அதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டு வேலையும் நடந்து வருகிறது. மங்களூரில் ஒரு பெரிய சபை கூடிப் பிரசங்கம் நடந்தது. மதிராசிலும், சேலத்திலும் அப்படியே நடந்தன. திருநெல்வேலியில் இன்னும் ஜனங்களுக்கு வேண்டிய மட்டில் உற்சாகம் ஜனிக்கவில்லை. ஆனால் தெய்வாதீனம், இதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு உழைக்கும் இஷ்டராகிய டாக்டர் வி. பி. ராமராயரவர்கள் அவ்விடம் வந்திருப்பதால், சேலத்துப் பதிவுபோல அவர் அவ்விடத்திலும் நடத்துவாரென்பதில் தடையில்லை.

சுமார் 5½ கோடி ஜனங்கள் 'பறந்து பறந்து பாடுபட்டாலும், படுக்கப்பாயில்லை. ஓடியோடிப்பாடுபட்டாலும், உண்ணச்சோறில்லை,' யென்கிற ஸ்திதியிலிருக்கிறார்கள். நமது வேளாண்மை செழிக்க இவர்களே காரணம். ஆனால், "ஆகபோகத்திற்கு அவனாசிலிங்கம், ஆணை சத்தியத்திற்கு, ஆகாசராயன்," *

* இந்தப் பழமொழி கோயமுத்தூருக்கடுத்த அவனாசியென்னும் சிவஸ்தலத்தைப்பற்றியது. அவ்வூரிலும், சுற்றிலுமுள்ள ஜனங்கள் பிரார்த்தனைசெய்துகொண்டு வியாதி முதலிய இடையூறுகள் விலகினால், அதற்கு வேண்டி அவனாசி ஈசுவரனுக்குப் பஞ்சாமிருத அபிஷேகம், மகா நைவேத்தியம் முதலியவைகளைச் சம்பிரமமாக நடத்துவது வெகுநாளைய வழக்கம். அதைவிட்டு யார்பேரிலாகிலும் கோபம் வந்து அவர்கள் நாசமாய்ப் போகவேண்டுமென்றாலோ, அச்சனங்கள் மிளகாயை அரைத்து நீரில் கரைத்துக் கொண்டுபோய், இன்னார் நாசமாய்ப் போகட்டுமென்று சொல்லிக்கொண்டு, கிராமதேவதையாகிய ஆகாசராயனுடைய விக்கிரகத்தின்மேல் அபிஷேகம் செய்துவிடுவதாக வதந்தி! ஆதலால் பஞ்சாமிருதம் முதலியன ஈசுவரனுக்கும், மிளகாய்த்தண்ணீர் மட்டும் ஆகாசராயனுக்கும், மாமூலாகக் கிடைப்பது விசித்திரமென்பதுபற்றி,

என்கிற நியாயப்படி பலன்மட்டும் இவர்களுக்குக் கைவசமில்லை. இவர்களை இந்த ஸ்திதியில் வைத்துக்கொண்டு, திரான்ஸ்வால் முதலிய இடங்களில் நம்மவருக்கு நடக்கும் அநியாயங்களைக் குறித்துப்பேசுவதற்கு நமக்கு என்ன வாயிருக்கிறது? இவர்கள் தலைமுறை தலைமுறையாக இங்கேயேயிருந்தும், இவர்களுக்கு இந்தியா திரான்ஸ்வால்போல் அந்நிய தேசமாகியிருப்பது, 'உயர் குலத்தவர்', குற்றமேயாதலின், இனியாகிலும் அவ்வுயர் குலத்தவர் தமது கடமையை யறிந்து வேண்டியதைச் செய்வாராக,' என்றார். எல்லோரும் இதைக் கவனிததுப் படித்தல் வேண்டும்.

ஒரு டிஸ்டிரிக்ட்டுக்கோர்ட்டு ஜட்ஜி சிவில் வியாச்சியங்களில் தப்பு சாக்ஷியம் சொல்லி வழக்கை ஆபாசஞ் செய்து விடுவதையே விரதமாகக் கொண்ட ஒரு சாக்ஷிக்காரன்மேல் வெகு நாளாகக் கண்ணாயிருந்தார். ஒருகேசில் 'யானைக்கும் அடிச்சறுக்கி,' இந்தச் சாக்ஷிக்காரன் ஏதோ மறந்தாற்போல் ஒரு சங்கதி நடவாததை நடந்ததாகச் சொல்லிவந்தான். இன்றைக்கு இவன் அகப்பட்டானென்று ஜட்ஜி குதூகலத்துடனிருக்கக் கோர்ட்டு உத்தியோகஸ்தனொருவன் அந்தக் குறிப்பையறிந்து, சாக்ஷிக்காரனைப் பார்த்துப் "பல்லைக்கடித்து, நெல்லைக் கொரித்தான்" மகா நிபுணனாகிய அச்சாக்ஷிக்காரன் உடனே இந்த ஜாடையை யறிந்துகொண்டு, தன் கதையை முடித்துவிட்டு, 'இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்," என்று பெருமூச்சுவிட்டுச சொன்னானாம். தப்பித்துக்கொண்டதை ஜட்ஜி கண்டதும், கோபத்தை அடக்கமாட்டாமல், "இன்றையதினம் உன்னை ஏழுவருஷத்திற்கு நிச்சயித்திருந்தேன். நழுவிவிட்டாய். ஆனால் இனியொருமுறைமட்டும் இந்தக்கோர்ட்டு வழிவந்தாயோ, பார்த்துக்கொள்ளுகிறோம்," என்றாராம். சாக்ஷிக்காரன் பதறாமல், "துரைகளே, என்மேல் கோபஞ் செய்யக்கூடாது. நானுவரவேண்டுமென்றாசைப் படுகிறேன். அந்தராணிமுத்திரையல்லவா என்னை 'வருத்துகிறது' ஏதோ தெ:ந்ததை உள்ளபடி சோல்லுகிறேனே யென்ற அடிக்கடி என்னை இந்த வழக்குக்காரர்கள் கோர்ட்டுக்கு இழுக்கிறார்கள். அவர்களை இனிமேல் என்னைச் சாக்ஷிப்பாடக்கூடாதென்று துரைகள் உத்தரவளித்து விட்டால் பின்னிட்டு நானேன் வருகிறேன்," என்றானாம்,

## ஸ்ரீ காலடி க்ஷேத்திரவைபவம்

குறிப்பு.—இதில், ஸ்ரீபகவத் பாதசுவாமிகளென்றும், ஸ்ரீபாஷியகார சுவாமிகளென்றும், ஆங்காங்குக் கூறியிருப்பது, ஸ்ரீஜகத் குரு ஆதிசங்கர ஆசாரிய சுவாமிகளை யென்றறிதல் வேண்டும். எடிட்டர்.

'விஹாரிணி' முதல் நெம்பரில், ஸ்ரீபுத்த பகவானைப்பற்றிய கதையில் இவ்வாறு எழுதினோம். "வேத முதலிய இந்துமதக் கிரந்தங்களுக்குக் கர்த்தர்களாயிருந்த மகரிஷிகளுக்காவது, அவர்களை யனுசரித்திருந்த மகாராஜாக்களுக்காவது, பணக்காரரான வேறு ஜனங்களுக்காவது, ஜீவதசைகழிந்த பின், தாங்களிருந்ததற்கடையாளம் ஏதாகிலும் இருக்கவேண்டுமென்று ஆசையிருந்ததுமில்லை. அவர்களிடத்தில் பக்தி வைத்திருந்தவர்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனப்படவுமில்லை. ஆரிய ஆசாரத்தைப் பழையபடி அனுஷ்டிப்பவர் இக்காலத்திலும் அப்படியேதான் நடத்துவது, உத்தரக்கிரியையும், வார்சுதாராகிய புத்திர பௌத்திராதிகள் நடத்தும் சிராத்தமும் தான் பெரியோர் விஷயத்தில் நமக்குள்ளிருக்கும் ஞாபகக்குறி," என்று. மொத்தத்தில் இது வாஸ்தவம். இது மதவிஷயத்திலும், மதாசாரியர் விஷயத்திலும் மட்டுமேயல்ல. இந்திய ராஜாக்கள், ராஜாங்கங்கள் விஷயத்திலும், இப்படி ஞாபகசின்னங்கள் என்பதேயில்லாமல் தான் போயிருக்கிறது,

ஆதலால் மற்ற மகாத்துமாக்கள் விஷயத்திலெப்படியோ அப்படிப்போலவே, ஜகத்குருவாகிய ஸ்ரீ சங்கரபகவத் பாத சுவாமிகள் விஷயத்திலுமாகிவிட்டது அதிசயமல்ல. சுவாமிகளிருந்ததும், 32 வயதுக்குள், சூத்திர பாஷ்யம் முதலிய கிரந்தங்களையெழுதி வைதிக தருமத்தை உத்தாரஞ் செய்ததும், துர்மதம், துராசாரமிவைகளை யோட்டியதும், மொத்தத்தில் நாளதுவரை பிரத்தியக்ஷ



ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் தேய்வாராதனை செய்தல்

மாயிருப்பதால், அவ்விஷயத்தில் மட்டும் சந்தேகம் ஒருவருக்கும் இல்லை. ஆனால் மகாத்துமாக்களுக்கு ஜீவன சரிதமென்று நடந்தவைகளை நடந்தபடி யெழுதிவைப்பது நமக்குள் பதிவாக இல்லாமற் போகவே, சுவாமிகள் பிறந்த இடம், இருந்த காலம், அக்காலத்தில் மகா ஜனங்களுக்குள் மதவிஷயமாயிருந்த விசேஷ லக்ஷணங்கள், இவைகளைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாதென்றே சொல்லவேண்டும்.

உதாரணமாகச் சுவாமிகள் கி.பி. 700-800-ம் வருஷங்களிலிருந்து உபதேசம் செய்தவரென்று ஒரு கக்ஷியார் வாதிக்கிறார்கள். சுமார் 500-600-ம் வருஷங்களில் தானிருந்திருக்கவேண்டுமென்று வேறு சிலர் சாதிக்கிறார்கள். இன்னும் அனேகர் கி. மு. 100-வருஷம் சுமாரில் தான் சுவாமிகளிருந்திருக்க வேண்டுமென்று பிடிவாதமாயிருக்கிறார்கள். அப்படியே பிறப்பிடமும் சந்தேகாஸ்பதமாக விருக்கிறது. சிலர் காஞ்சீபுரத்தில் சுவாமிகள் பிறந்ததாகவும், சிலர் சிதம்பரத்திலென்றும், முரட்டுவாதம் செய்கிறார்கள். ஆனால் நம்மவரில் பெரும்பாலார், சுவாமிகள் மலையாள சீமையில், இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்த 'ஸ்ரீகாலடி' என்னும் கிராமத்தில் பிறந்ததாகவும், சுவாமிகளுடைய தாயார் அதற்குச் சமீபத்திலுள்ள 'பாழூர்ப்பனை யில்லம்' என்னும் நம்பூத்திரிக் குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும் நெடுநாளாக நம்பிவந்திருக்கிறார்கள்.

சுவாமிகளைப் பரமேசுவர அம்சமென்று வெகு காலத்திற்கு முன்னமே அவரது சிஷ்ய கோடிகள் தீர்மானித்துவிட்டதால், அவர்களது பிறப்பு, வளர்ப்பு முதலிய சாமான்னிய வியவகாரங்களில் ஒருவருக்கும் சிரத்தையிருந்ததில்லை. ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஒரு சங்கதியும் நிஷ்கரிஷையாகச் சொல்வதற்கில்லை. என்றாலும் இந்தக்காலடி ஐதிகத்தைத் தவிர்த்து வேறொன்றும் காணவில்லையாதலால், இதையே நிஷ்கரிஷையாக அனேக காலமாய்ப் பக்தர் நம்பி வருகிறார்கள்.

நாம் மேற்கூறியபடி சுவாமிகளுடைய சிஷ்யர்களில் பழைய சம்பிரதாயத்தை மேற்கொண்டவருக்கு, அவரது ஜீவன சரித்திரமும், வேறு அடையாளங்களும் இன்னும் அவசியமில்லை யென்றாலும், நவீனமாகிய 'தீயாஸபி' முதலிய சங்கங்களில் சேர்ந்தவர்களும், மேனாட்டுக் கல்வியில் தேர்ச்சி அதிகமுள்ளவர்களுமான சில சிஷ்ய ஜனங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இவ்விஷயத்தில் சிரத்தை யதிகரித்து வந்திருக்கிறது. அதற்குப் பலகாரணங்களுண்டு. ஸ்ரீபுத்த பகவானுடைய தந்தங்கள், எலும்புகள், இவைகளை வைத்து அந்த மதஸ்தர்கள் கோயில் கட்டி க்ஷேத்திரங்களாக்கி வருவதையும், இதர மதஸ்தர்களும் அவ்வாறே செய்து வருவதையும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். பத்திரிகை, ரயில், தந்தி முதலிய சாதனங்களால் போக்கு வரவும், இதர தேசவர்த்தமானங்களும் நமக்குத் தெரிகின்றன. ஆதலால் மற்ற மகான்களுக்கு நடப்பது ஜகத் குருவாகிய ஸ்ரீ பகவத் பாத சுவாமிகளுக்குமட்டும் இல்லாமல் ஏன் போகவேண்டுமென்கிற எண்ணம் நம்மில் சிலருக்குச் சில வருஷங்களாகப் பலப்பட்டு வந்தது. ஆகவே அவர்களில் மைசூர் சமஸ்தானம் 'ஒண்ணும்' ஜட்ஜியாக விருந்து பென்ஷன் வாங்கிவரும் ஸ்ரீமான்-ஏ. ராமசந்திர அய்யரவர்களும், மைசூர், திருவாங்கூர் இரண்டு சமஸ்தானங்களிலும் திவான்ஜியாக விருந்த ஸ்ரீமான்-வி. பி. மாதவராயரவர்களும், இன்னும் இரண்டொருவரும் ஆலோசித்து, ஸ்ரீ காலடியில் முன்னமே சுவாமிகளுடைய தாயாருக்குப் பிருந்தாவனமிருந்ததால், அவ்விடத்தில் ஒரு க்ஷேத்திரம் பலப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள். பிறகு இதை ஸ்ரீ சிருங்ககிரி


மடம் பரம்பரையில் தற்காலம் எழுந்தருளி அந்தப் பீடத்தை அலங்கரித்துவரும் ஸ்ரீ சிவாபிநவ நாசிம்மபாரதீ சுவாமிகளுக்கு விக்ஞாபனம் செய்ததில், அவர்களும் அப்படியே நடக்கலாமென்று ஆமோதித்ததன் பேரில் சில வருஷங்களுக்குமுன் காரியம் ஆரம்பமாயிற்று.

மேற்சொல்லிய ஸ்ரீமான்-மாதவராயர் திருவாங்கூர் திவானாக இருக்கையில், இது விஷயமாய்ப் பிரயத்தனம் நடந்ததில், சத்திரபதி மகாராஜா அவர்களும் வெகு ஆதரவுடன், மேற்சொல்லிய பிருந்தா வனத்தையும், அதற்குச் சேர்ந்த சுமார் 30-ஏகரா பூமியையும், வில்லங்கங்களொழித்து ஸ்ரீ சிருங்ககிரி மடத்திற்கு அதீனமாக்கினார்கள். பிறகு அதில் பழைய நாளில் சுவாமிகள் பிறந்த இல்லம் இன்னவிடத்தில் தானிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்து, அவ்விடத்தில் இரண்டு சிறு தேவாலயங்களை நிர்மாணம் செய்வதென்று தீர்மானமாயிற்று. ஒன்று ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய சன்னிதியாகவும், மற்றொன்று அவருக்கு இஷ்டதேவதையாகிய, ஸ்ரீ சாரதாம்பிகையின் சன்னிதியாகவும் இருக்கவேண்டுமென்று நிச்சயமாயிற்று.

ஒவ்வொரு நம்பூத்திரி இல்லத்திலும் தென்கிழ்புறம் மூலையில் தகன கட்டமும், அதற்கு வடகிழக்கில் பிரசவ அறையுமிருப்பது வெகு நாளைய வழக்கம். 'தகன கட்டம்' என்பது நம்மவருக்கு விளங்காது. ஏனெனில், மலையாளத்தில் பூர்வா பூர்வமாயிருந்துவரும் நம்பூத்திரிப் பிராம்மணரொழிய வேறுவகைப் பிராம்மணர் ஒருவகையாரிலும் இந்த வழக்கமில்லை. ஆதலால் இதைச் சற்று விளக்குவோம். நம்பூத்திரிக் குடும்பம் வாழும் வீட்டிற்கு 'இல்லம்' என்று பெயர். இதில், அந்தக் குடும்பத்தவருக்கும், அதிதியாக வருபவருக்கும் வேண்டிய சகல சௌகரியங்களும் அடங்கும். ஸ்நானம், சௌசம், முதலியவற்றிற்குக் குளங்களும், காய்கறி முதலியவற்றிற்குத் தோட்டமும், சமயல், சாப்பாடு, பூஜை, படுக்கை முதலியவற்றிற்குப் பிரத்தியேகம் அறைகளும் இருக்கும். இவைகளன்றி, அக்குடும்பத்தவரில் இறந்துபோகிறவர்களை அவ்விடத்திலேயே மேற்சொல்லியபடி, தோட்டத்தில் தென்கிழக்கில் ஒரு மூலையில் தகனம் செய்து விடுவதற்கும் இடமிருக்கும். இது பிராம்மணரில் நம்பூத்திரிகள் இல்லத்திற்குமட்டும் உரிய லக்ஷணமாம்.

ஆதலால் ஆசாரிய சுவாமிகளுடைய தாயாரையும் இவ்வாறே, அவரது இல்லத்தின் தென்கிழக்கு மூலையில்தான் தகனம் செய்திருக்க வேண்டுமென்பது நிச்சயம். அந்த இடம் பிருந்தாவன மூலமாய் இப்போது நிஷ்கரிஷையாகத் தெரிவதால், அதற்கு வடகிழக்கு மூலையில் தான் சுவாமிகள் பிறந்த அறையிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்து, அவ்விடத்தில் சுவாமிகள் கோயிலை நிர்மாணித்திருக்கிறார்கள். ஆதலால் சுவாமிகள் சன்னிதி அவர்கள் அவதாரஞ்செய்த ஸ்தலத்திலேயே யிருப்பதாகக் கட்டியவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஏதோ சற்றேறக்குறைய இருந்தபோதிலும் தோஷமில்லை.

சுவாமிகளுடைய ஜீவனசரித்திரம் பின்னால் சிறிது சிறிதாக 'விஹாரிணியில்' காணும். அதில் அவர்களுடைய தாயாரது உத்தரக்கிரியை விஷயத்தில் நடந்த சில அதிசயங்கள் விவரமாகும். மொத்தத்தில் இங்கு நாமறியவேண்டியது இது. அந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமிகளுக்கும், அவர்களுடைய பந்துவர்க்கங்களுககும் விரோதம் முற்றிவிட்டதாலும், வேறு காரணங்களாலும், சுவாமிகள் அதைவிட்டு விலகிவந்த நாள்முதல் நாளது வரை அவருடைய பரம்பரையில் யாரும் மறுபடி கேரளத்தில் விஜயம் செய்யவேயில்லையென்று ஒரு ஐதிகம். ஆகிலும் இது சரியாகக்



ஸ்ரீ ஆதிசங்கர சுவாமிகளது மாதாவின் தகன ஸ்தலம்

காணவில்லை. இரண்டொருவராவது திருவனந்தபுரம் போயிருப்பதற்குச் சாக்ஷியமுண்டு. ஆனால், மொத்தத்தில் காலடிக் கிராமத்திற்கு யாரும் இதுவரை போகவில்லையென்பது அனேகமாய் நிச்சயந்தான்.

சென்ற இரண்டு வருஷங்களாக மேற்கண்ட கோயில் வேலை நடந்து வந்தது. அதை யனுசரித்து வேறு அனேக காரியங்களும் நடந்து வந்தன. கடைசியாகத் தற்காலம் ஸ்ரீ குருபரம்பரையில் விளங்கும் மேற்கூறிய ஸ்ரீசிவாபிநவ நரசிம்மபாரதீ சுவாமிகளது சந்தோஷத்தையனுசரித்து நாளது சௌமியளு மாசிமீ 10-தேதிசோமவாரம் கூடிய சுபதினத்தில் ஷ சன்னிதிகளில், ஸ்ரீ பகவத் பாதாசாரிய சுவாமிகளுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தையும், சாரதாம்பிகையின் விக்கிரகத்தையும் முறையே பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகமும் நடக்கும்படி முகூர்த்தம் ஏற்பாடாகி, அதற்காக இந்தியாவிலுள்ள முக்கிய சிஷ்யர்களுக்கெல்லாம் ஸ்ரீமுகம் போயிற்று. பிறகு சில மாதங்களாக, இம்முகூர்த்தத்திற்கு வரக்கூடியவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களேற்பாடாகி வந்தது.

ஸ்ரீ காலடிக்குப்போகக் கொச்சி சோரனூர் ரயிலில், அங்கமாலி ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அங்கிருந்து சுமார் $4\frac{1}{2}$-மைல் தூரத்தில் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது. மலையாளத்தில் அனேக ஸ்தலங்கள் வெகு மனோக்கியமாகவும், ரமணீயமாகவு மிருக்கின்றன. என்றாலும், ஆல்வாய் நதியோரத்திலுள்ள காலடிபோன்ற சில இடங்கள், எவ்விதத்திலும் சிறந்தவைகள். மலை, செடி, நிலம், நீர் முதலிய எவ்வகை லக்ஷணங்களும் வெகு நன்றாயமைந்து, தேகத்திற்கும், மனதிற்கும் ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்கு இம்மாதிரி ஸ்தலங்களைவிடச் சிறந்தவை எங்குமில்லை யென்னலாம்.

இந்தப்பூமி வெகுகாலமாக ஒரு நம்பூத்திரி வசமிருந்தது. ஆதலால் அதைக் கவர்ன்மெண்டார் மடத்திற்குச் சுவாதீனப்படுத்த வேண்டியதாயிற்று. வெகு காலமாகக் கேட்பாரற்றிருந்ததால், பலா, மா, முதலிய மரம், மூங்கில், செடி, செத்தை நிறைந்திருந்தது. இவைகளை வெட்டிச் சீராக்க 15000-ரூபாயும், கும்பாபிஷேகத்திற்காக வரும் ஜனங்களுக்கு விடுதியுண்டாக்க ரூ. 30000-மும் செலவழிந்தது. இவ்விடுதிகள் ஒரே ஒழுக்கமாக இருபுறமுமிருக்க, நடுவில் விசாலமாக ரோட்டுகள் அமைந்து, பார்க்க வெகு நேர்த்தியாகவிருந்தது. தெருக்கள் கோணலின்றியிருந்ததில், புதுச்சேரியைவிட நன்றென்று பார்த்தவர்கள் சொன்னார்கள். இது தவிர ஜமீன்தாரர் முதலியோருக்குப் பிரத்தியேகமாய்ப் பங்களாக்கள் அமைந்திருந்தன. வாஷிங்டன் விளக்குகள் வேண்டியமட்டில் கொளுத்தியதனால் இரவில் அனேக சந்திரர்கள் பிரகாசிப்பதுபோலிருந்தது. குப்பை, செத்தை யொன்றுமில்லாமல், தெருக்களையும், பிறவடை முதலியவைகளையும் வைத்திருந்ததில், அனேகம் முனிசிபாலிட்டிகள் இதைப் பார்த்துத் தொழில் தெரிந்துகொள்ளலாம். ஸ்நானம், சாப்பாடு, வாசம் உறக்கம், முதலிய சகல விஷயங்களிலும் இவ்வாறு சுசியாயிருப்பதற்கு வேண்டியபடி மானேஜர்கள் ஏற்பாடு செய்திருந்ததால், வந்தவர்களுக்கு வியாதி, பீடையென்பதே விசேஷமாயில்லையென்னலாம். கடைகளும், தபால், தந்தி முதலிய ஆபீசுகளும், ஜனங்களுக்கு எல்லாவிதத்திலும் உபகாரமாகியிருந்தன. கிணறுகள் வேண்டிய இடங்களிலெல்லாம் வெட்டியிருந்தன. அல்லாமல், குளங்கள் கட்டி, இஞ்சின் வைத்து ஆற்றுத் தண்ணீரை அவற்றிற்குக் கொண்டுவந்து நிரப்பியதில், ஜனங்களுக்குத் தண்ணீர் விஷயமாகச் சிரமமேயில்லை. போலீஸ் பந்தோபஸ்தினால் திருட்டு முதலிய அக்கிரமங்

களுக்கு இடமேயில்லை. வந்தவர்களுக்கு ஆகாராதி விஷயங்களில் ஒருகுறைவுமுண்டாகவில்லை. ஆயிரக்கணக்காக வந்து கூடியும், எல்லா ஜனங்களும் திருப்தராகித் திரும்பியது மானேஜர்களுக்கெல்லாம் வெகு சுகிர்தம். இப்படி நடந்ததாகப் பழையநாளில் ராமாயணம், பாரதம், இவைகளில் தான் கேட்டிருக்கிறோம்.

அங்கமாலியிலிருந்து காலடிகொண்டு சேர்க்க ஜட்கா, மோடார், முதலிய சாதனங்களும், வந்தவர்களுக்கு இவ்விஷயத்திலும், வேறு வகையிலும் சகாயம் செய்யத் திருநெல்வேலியிலிருந்து இங்கிலீஷ் படித்துத் தேறிய சில குமாரர்களும், ஏற்பட்டிருந்ததால், யாத்திரிகருக்கு ஒருகுறைவு மிருக்கவில்லை. காலடி போனவுடன் பதார்த்தங்கள் ராசிராசியாகக் குவிந்திருந்ததையும், கேட்டவருக்கு இஷ்டம் போல் விநியோகமானதையும் பார்த்தயாருக்கும் பிரமிப்புண்டாகும். இதை மேற்போட்டுக்கொண்டு இரவும்பகலுமாக உழைத்த ஸ்ரீமான்கள் ஸ்ரீகண்டசாஸ்திரிகள் வகைக்கு எல்லாச் சுகிர்தமு முண்டாகவேண்டும். முகூர்த்தத்திற்கு நாலைந்து தினத்திற்கு முன் ஸ்ரீசிருங்ககிரி சுவாமிகள் வந்து சேர்ந்தார்கள். நாலுதிக்கிலிருந்தும் லௌகிகர்களும், வைதிகர்களும் ஆயிரக்கணக்காக வந்து கூடினார்கள். வேதகோஷங்கள் முழங்கின. தவிரப் பஞ்சாங்க விஷயத்தில் அனேக பேதங்களிருப்பதை ஒழிக்க ஒரு ஜோதிஷ சபையும் இங்குக் கூடிற்று. அதை யனுசரித்துச் சாஸ்திர விசாரமும் நடந்துவருகிறது.

பிரதிஷ்டை விஷயத்தில் சாஸ்திரோக்தமாக எல்லாக்கிரியைகளும் சம்பிரமமாய் எட்டு நாள் நடந்தன. விக்கிரகங்கள் தேவிக்கோட்டையிலிருந்து வார்த்து வந்தவைகள். கோவில்களிரண்டும் மைசூர் ராச்சியத்தில் பழையகாலத்தி லரசாண்ட 'ஹொய்ஸல' ராஜாக்களின் கட்டடலக்ஷணங்கள் பொருந்தியவை யென்று அந்தச் சாஸ்திரந் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்த ஆலயங்களில், குறித்த முகூர்த்தத்தில், சிஷ்யகோடிகள் நாலு திக்கிலுமிருந்து வந்து, வெய்யில், மழை பாராமல், கைகூப்பி ஜயகோஷமுழக்க, மேற்கண்ட விக்கிரகங்களிரண்டும் பிரதிஷ்டையாகிக் கும்பாபிஷேகமும் முற்றுப்பெற்றது. பிறகு எல்லா வருக்கத்தவருக்கும் போஜனம் நடந்தது. சாயங்காலம் ஒரு பெரிய சபை கூடிற்று. அதில் ஸ்ரீமதாசாரியசுவாமிகள் அக்கிராசனம் வகித்து எழுந்தருளினார்கள்.

உடனே பல சங்கங்களிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள், தத்தம்சங்கத்தவருடைய விக்ஞாபனப் பத்திரிகைகளைப் படித்துச் சுவாமிகளுக்கு நமஸ்கரித்தார்கள். அவைகளில், மேல்கோட்டை உபயவேதாந்த சபையில், வடகலை, தென்கலை யிரண்டிலும்சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் படித்தது மெத்தவும் சிலாகிக்கத்தக்கது. இதனால் ஸ்ரீவைஷ்ணவருக்கும் ஸ்மார்த்தருக்கும் இதுவரை அனாவசியமாக வர்த்தித்து வந்த பரஸ்பர மாச்சரியங் குறைந்து வருவதும், ஆசாரிய சுவாமிகள் தமது அபூர்வ சுபகுணங்களால், தமது சிஷ்ய ஜனங்களுக்குமட்டுமேயன்றி, இதர மதஸ்தருக்கும் பூஜ்யராகி விளங்குவதும், பிரத்தியக்ஷமாயிற்று. பிறகு தார்வாரிலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் வந்த விக்ஞாபன பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன. இவைகளன்றி ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலிருந்தும் வேதாந்திகள் அனேகர் அனுப்பிய பத்திரிகைகளும் வாசிக்கப்பட்டன. கடைசியாக இச்சந்தர்ப்பத்திற்கென்று வெகு சிரமப்பட்டு, ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீவிலாஸ அச்சுக்கூடத் தலைவராகிய ஸ்ரீமான்-பாலசுப்பிரமணிய அய்யரவர்கள், ஸ்ரீபகவத்பாத சுவாமிகள் கிருதமான பாஷ்யம் முதலிய சகல கிரந்தங்களையும், ஒருங்கு சேர்த்து, நல்லகாகிதத்தில் தேவநாகரியில் அச்சிட்ட புஸ்தகத் தொகுதி

REGISTERED 18 MAY 1910 MADRAS.

கள் 20-ம் தக்க ஆவரணத்துடன் சுவாமிகளுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

பத்திரிகைகள் எல்லாம் படித்தானவுடன் ஸ்ரீமான்-மாதவராயரவர்கள் சபையிலிருந்த மகா ஜனங்களுக்குப் பிரதிநிதியாகச் சுவாமிகளுக்கு இவ்வாறு விக்ஞாபனம் செய்தார்:—

"மஹா சுவாமிகளே, இன்றையதினம் இவ்விடத்தில் ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய ஞாபக சின்னமாகச் சுவாமிகள் கையால் நடந்த பிரதிஷ்டையை யனுசரித்து, இந்தச் சுபமுகூர்த்தத்தில், ஹிந்து மகா ஜனங்களுக்குப் பிரதிநிதியாக அடியேன் ஏதோ இரண்டொரு விஷயங்களை விக்ஞாபனம் செய்கிறேன். இந்தப் பிரயத்தனம் ஆரம்பித்தது முதல் நடந்ததையெல்லாம் விவரித்தால் பெருகும். ஆனால் அது அனுவசியம். ஸ்ரீபகவான் பாஷ்யகார சுவாமிகளுடைய பிறப்பிடமாகிய இந்தஸ்தலத்தில் இன்று நிறைவுபெற்று நிற்கும் ஆலயங்களுடைய திவ்ய லக்ஷணங்களும், அவைகளைச் சுற்றிலுமுள்ள நதி, மலை, வன முதலிய மனோகரமான காக்ஷிகளும், ஆல்வாய் நதிவைபவமும், இந்தச் சுபமுகூர்த்தத்தில் வந்திருந்து தரிசிக்க வேண்டுமென்கிற ஆக்கிரகத்துடன் நானுதிக்கிலுமிருந்து வந்திருக்கும் புண்ணியவான்களுடையவும், புண்ணியவதிகளுடையவும், சங்கமும், இந்தக் காரியம் சாஸ்திரோக்தமாக நடந்தேறிய சம்பிரமமும், சுவாமிகளுடைய இஷ்டத்தை நன்கு விளக்குகின்றன. ஆனால் இந்தக் காரியத்திற்கு இவ்விடத்தில் இன்று நடந்ததுமட்டுமே முக்கிய பலனல்ல. கலகங்களும், குழப்பங்களும் ஆங்காங்குத் தலையெடுத்து சற்ஜனருக்கு விசாரத்தையுண்டுபண்ணும் இக்காலத்தில், இங்கு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, வேற்றுமை சிறிதுமின்றி, இந்தக்காரியத்தை ஒரே மனதாக நடத்தியதைப் பார்க்கையில், இந்தியாவில் பல பிராந்தங்களிலுமுள்ள, நானுவருக்கத்தவரான ஜனங்களுக்குள் நற்குணங்கள் இன்னுமிருக்கின்றனவென்று நிச்சயப்படுகிறது. தவிர, அவர்களுக்குள் அந்நியோந்நிய சகாயம் அதிகரிப்பதற்கும், இதைப் பெரிய சூசனையாகக்கொள்ளலாம்.

இந்தக் கால விசேஷத்தை யோசிக்கும்போது, நமது சனாதன தருமத்திற்கும், ஆசாரத்திற்கும், இதற்கு முந்தி அனேக சந்தர்ப்பங்களில் அபாயம் நேரிட்டதுபோல, இப்பொழுதும் ஒருபெருத்த அபாயம் நேரிட்டிருப்பதாகச் சொல்லலாம். ஏனெனில், புராதனமாகிய நமது வைதிகமார்க்கம் இப்பொழுது பல வாறாகச் சிதறுண்டுபோய், ஜனங்கள் அவரவர் இஷ்டதேவதைகளை இஷ்டம்போல் உபாசிப்பதும், இஷ்டம்போல் ஆசாரங்களை யனுஷ்டிப்பது மாயிருக்கிறார்கள். அதனால் இத்தனை மதபேதங்களுக்கும் வேதமே பிரமாணமாகுமாவென்று கூட நாம் சந்தேகிக்கவேண்டிவருகிறது. முன்னொருக்கால் இப்படிச் சிதறுண்டு, பரஸ்பரவிரோத மதிகரித்து வரும் சமயத்தில், எல்லோருக்கும் மதவிஷயத்தில் மயக்கம் உண்டாகவே, அந்த மயக்கத்தைத் தெளிவித்து ஜனங்களுக்குள் சதாசாரம் பிரபலிக்கும்படி செய்வதற் கென்றே ஸ்ரீ பகவான் பாஷியகார சுவாமிகள் அவதரித்தார். (சைவம், வைஷ்ணவம், முதலிய முக்கிய மதங்களுக்குள் பொதுவாகப் பற்று ஒன்றுமில்லாமலும், காபாலிகம் முதலிய மதபேதங்களுக்குள் துராசாரங்கள் பிரபலித்தும், இருந்ததில், இவற்றிற்கெல்லாம் பொதுவாக) அபேதோபசனை யென்கிற ஓர் சிறிய வேதாந்த ரகசியத்தினால், விரோதத்தைச் சமனப்படுத்தி, துராசாரங்களைக் கண்டித்து, வைதிக தருமத்தைச் சுவாமியவர்கள் நிலைநிறுத்தியதில், அவர்களுடைய வேதாந்த ரகசியம் இக்காலத்தில் இந்துக்களிலுள்ள மதபேதங்களுக்குமட்டுமேயன்றி, உலகத்திலுள்ள சகல மதங்களுக்கும் மூலாதார

மாகலாமென்று நம்ப இடமுண்டாயிருக்கிறது. (ஆதலால் சுவாமியவர்களுக்குத்தான் ஜகத்குருவென்கிற பட்டம் தகும்.)

முந்தி எப்பொழுதெல்லாம் நமது தருமத்திற்கு லோபம் வந்ததோ, அப்பொழுதெல்லாம் மகானுபாவர்கள் மூலமாகப் பரிகாரமும் ஆகியிருப்பதால், தற்காலம் இந்தப் பரதகண்டத்தில் உண்டாகி வருகிற சண்டை சச்சரவுகளுக்கும் பரிகாரமாகியே, இன்றையதினம் இப்பெருங் காரியம், ஸ்ரீபாஷியகார பரம்பரையில் சம்பன்னராகி விளங்கும் சுவாமிகள் முகாமையாக நடந்தேறியது. சில்லரை விஷயங்களில் சச்சரவுகளை யொழித்து, முக்கிய அம்சங்களில் விவேகிகளை ஒருமனப்படுத்தி, பரஸ்பரசினேகத்தை மகாஜனங்களுக்குள் பிரபலிக்கச் செய்ததே ஸ்ரீ பாஷ்யகார சுவாமிகளுடைய ஸ்மிருதியாதலால், அது என்றும் நிலைபெறுமென்பதும், தழைத்தோங்குமென்பதும் நிச்சயம்.

இவ்வாறு புகழ்பெற்ற சுவாமிகளுடைய காலத்திற்குப் பிறகும் வைதிகமதம் பலவாறாகப் பிரிந்துதான் போயிருக்கிறது. ஆனால் அவற்றைப்பற்றி நாமிங்கே பேசவேண்டுவதில்லை. மொத்தத்தில் ஆசாரிய சுவாமிகளால் மதவிஷயத்தில் இந்நாட்டு மகாஜனங்களுக்குள் ஏற்பட்ட விசால புத்தி நாளது வரை குன்றாமலிருப்பதுடன், நாளுக்கு நாள் வர்த்தித்தே வருகிறது. அந்தப் பரம்பரையில் இப்பொழுது பிரசன்னராயிருக்கிற சுவாமிகள் போன்ற மகாத்துமாக்கள் இருந்து நமக்குச் சன்மார்க்கத்தையும், குருபக்தியையும் உபதேசித்து வருமளவும் இவ்விஷயத்தில் ஒரு குறைவுமில்லையென்பது நிச்சயம். ஏனெனில் சுவாமிகளுக்கு வித்தை, விநயம் முதலிய சுபலக்ஷணங்களால் விளங்கும், மகத்துவம் மட்டுமேயல்லாது, பலவகைப்பட்ட இதர மதஸ்தரையும் ஒன்று சேர்த்து, அவர்களுக்குள்ள விரோதங்களைத் தணியச்செய்து, சினேகப்பற்றுகளை அதிகரித்து, பொதுக்காரியங்களில் ஒரு மனத்தவராக்கும் அபூர்வ சக்தியுமிருப்பது கொண்டுதான் இப்பெருங்காரியம் இவ்வளவு சீராக நடந்தது. பல தேசங்களிலிருந்தும் வந்திருக்கும் இம்மகாஜனங்களெல்லோரும் இவ்விஷயத்தில் ஒன்று கூடி, ஒரே மனதாக இந்த மகோற்சவத்தை நடத்தியதும், அவரவர் தத்தமக்கேற்ற காரியங்களிலமர்ந்து சிரத்தை, பக்தியுடன் காரியத்தை நிறைவேற்றியதும், சுவாமிகளிடத்தில் அவர்களுக்குள்ள பக்தி விசேஷத்தைப் பொருத்ததென்றே விளங்கும். ஏனெனில் இந்நாட்டிலுள்ள ஜனங்கள் சாமான்னியமாய் எதற்கும் ஒன்று சேருவதில்லை. அப்படிச் சேர்ப்பதும் வெகு பிரயாசம்.

தவிரச் சுவாமிகள் சமீபகாலத்தில் தக்ஷிண தேசத்தில் ஆங்காங்கு விஜயம் செய்து வந்ததில், இந்து மதஸ்தர்களெல்லோரும் சுவாமிகளுக்கு ஒரே விதமாக மரியாதை செய்துவந்ததையும், (இச்சபையில் மைசூர் உபயவேதாந்த சபைப்பிரதிநிதிகள் வந்துகூடி விக்ஞாபனப் பத்திரிகை வாசித்ததையும்,) இதுபோன்ற வேறு சூசனைகளையும் பார்க்குமிடத்து, சுவாமிகளைப்போல், பெரிய மடத்திற்கு அதீனமும், சுதாவில் வித்தை, குணம் முதலிய சுபலக்ஷணங்களும் கூடிய மகான்களிருப்பதனால்தான், நமது ஜனங்களுக்குள் சனாதன தரும விஷயத்தில் பக்தி யதிகரித்து வருகிறதென்பது நிச்சயமாகிறது. ஆதலால் இங்குக் கூடியிருப்பவர்களாகிய மகாஜனங்களுடைய நமஸ்காரத்தையும், சிரமத்தைப் பாராட்டாமல் இக்காரியத்தைச் சுவாமிகள் வகித்துச் சீராக நடத்தியதற்காக அவர்கள் விஷயத்தில் மகாஜனங்களுக்கிருக்கும் நன்றி விசுவாசத்தையும் நான் விக்ஞாபனம் செய்துவிட்டு உட்காருகிறேன்," என்றார்.

பிறகு சுவாமிகள் இவைகளுக்கெல்லாம் கிரமப்படி பிரதியுபசாரஞ் சொன்னார்கள். சுமார்

ஒருமணிநேரம் அவர்கள் வாக்கிலிருந்துதமிழ்ப் பாஷையில் வந்த உபந்நியாசத்தை அனைவரும் சிரத்தையுடன் கேட்டு ஆனந்தித்தார்கள். ஜனங்களுக்குள் ஒற்றுமையும் சினேகமும் இருக்க வேண்டுமென்பது ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய முக்கிய உபதேசமாதலால், அதை அவர்கள் கவனித்து நடக்க வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தமது தருமத்தைப் பரிபாலனம் செய்யவேண்டியது பெரிய நியமமாதலால் தம்மாலானவரை தாம் தமக்கேற்பட்ட தருமத்தைப் பரிபாலனம் செய்ய முயன்று வருவதாகவும் சுவாமிகள் பிரசாதித்தார்கள். தவிர, சனாதன தருமத்திற்குப் பழைய நாளில் சில சமயங்களில் இதர துரைத்தனங்களால் இடையூறுகள் உண்டாயிருந்தன வென்றும், இப்பொழுதோ, சர்க்கார் எவ்விதத்திலும் ஜனங்களுடைய க்ஷேமத்தையே கோரி நடந்து வருவதால், அவரவர் அவரவருக்கு ஏற்பட்ட சாஸ்திர சம்மதமான காரியங்களைச் சிரத்தையுடன் செய்து, மகாஜனக்ஷேமத்தை நாடி யுழைத்து, இம்மை மறுமை யிரண்டிலும் சுகமடையும்படி பார்க்க வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

பிறகு இக்காரியத்திற்கு முக்கியஸ்தராகிச் சகல பாரத்தையும் வகித்து நடத்திய ஸ்ரீமான் ராமசந்திர அய்யரவர்களுக்கு, ரத்தினங்களிழைத்த ருத்திராக்ஷ கண்டியொன்றை யிட்டு, சால்வைகள் கொடுத்து, 'குரு பக்த கேசரி' யெனப்பட்டப்பெயரும் கொடுத்துக் கோஷித்தார்கள். வேறு இரண்டொரு முக்கியஸ்தருக்கும் தக்க மரியாதைகள் நடந்தன.

இனிமேல் இந்த ஆலயங்களைப் பரிபாலனம் செய்யவேண்டிய கிரமங்களுக்கும், இவ்விடத்தில் வித்தியாபியாசத்திற்கும், சாஸ்திர அபிவிர்த்திக்கும் தக்க ஏற்பாடுகள் ஏதாகிலும் நடக்கலாமென்று காணுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே அக்கிரகாரங் கட்டுவதற்கும், பூஜை முதலியன கிரமமாக நடப்பதற்கும், பக்தர்கள் திரவிய சகாயம் செய்துவிட்டார்கள். பாடசாலையும், வருஷந்தோறும் சங்கமும், ஸ்ரீ ஆசாரிய ஜயந்தியும் நடக்கும். திருவாங்கூர் சமஸ்தானத்திய உதவியுமிருக்கும். ஆதலால் மனுஷிய யத்தனத்தில் இந்த ஞாபகசின்னம் வெகு காலத்திற்குச் சிஷ்ய கோடிகளுக்குள் குருபக்தியும், நல்லறிவும், நன்னடக்கையும் அதிகரிப்பதற்குச் சாதனமாக வேண்டுமென்று நாமெல்லோரும் ஸ்ரீபகவத்பாத ஆசாரிய சுவாமிகளைப் பிரார்த்திப்போமாக.

ஒரு தம்பிரானுக்கும் அவ்வூர் முன்சீபுக்கும் வெகு நாளாக விரோதம். முன்சீபு அவனை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டுமென்றிருந்தார். கடைசியில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு கேசில் தம்பிரான் சாக்ஷியாக வந்தான். அவனுக்கு இரண்டு கண்ணுங்குருடு. ஆதலால் ஒரு பையன் கோலையொரு தலைப்பில் பிடித்துக்கொண்டு வழிகாட்டிவரத் தம்பிரான் கோர்ட்டுக்குள் வந்தான். உடனே முன்சீபு ஏதோ ஒரு வியாஜியத்தைக்கொண்டு தன் கோர்ட்டு நடக்கவொட்டாமல் சந்தடி செய்வதாகப் புகார் உண்டாக்கிக்கொண்டு தம்பிரானை வாயில்வந்தபடி திட்டினர். சற்றுநேரம் கேட்டுவிட்டுத் தம்பிரான் வழிகாட்டிவந்த பயலைக்கூவி, "அடேமுட்டாள் பயலே, அந்தப் பயலே, இந்தப் பயலே, நான் உன்னைக்கோர்ட்டுக்கல்லவா கூட்டிப்போகச் சொன்னேன். அந்தப்படுபாவி பார்ப்பார பயல் பொல்லாத வனாச்சுதே. அவனுக்கு இரக்க மென்பது கிடையாதே. சண்டாளன், வேலைக்குப்போகாவிட்டால் பெரிய அமுல் நடத்திவிடுவானே. ஆதலால் சீக்கிரம், போவோம் வா, இங்கெங்கேயோ கடைத்தெருவில் குடிகார பயல்களிருக்கு மிடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறாய். உதைப்பேன், சீக்கிரம்வா," என்றான். இதைக்கேட்டதும் முன்சீபு ஒருவர்தவிர மற்றெல்லோருக்கும் முகத்தில் மந்தஹாசம் கண்டது. முன்சீபுக்கு மட்டும் மேல் நடவடிக்கையொன்றும் தோன்றாமல், முகம் வாடிற்றாம்.

## திருக்குறள்—விஷய விமர்சனம்

ஸ்ரீமான் பண்டித வேங்கடரமண அய்யரவர்கள்

சிலமாதங்களுக்குமுன் பத்திராதிபருடைய நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் 'பிள்ளைத் தமிழைக்' குறித்து ஏதோ தெரிந்ததை யெழுதியதில், அதைச்சிலர் ஒருவாறாகக் 'கொள்ளாம்' என்றமையால், மறுபடி அவ்வாறு ஏதாகிலும் எழுதிவரலாமென்று கொண்டு, விஷயமின்னதென்று நிஷ்கரிஷையாக வேண்டி யோசித்தேன். தமிழுக்குச் சிறப்பாயுள்ள இலக்கணங்களையோ, இலக்கியங்களையோ பரிசீலனை செய்வது தான் தற்காலம் ஆகவேண்டிய காரியமென்பது என்னுடைய கருத்து. ஆகவே, தமிழுக்குச் சிறந்துள்ள இலக்கணங்களில், தொல்காப்பியம், பொருளதிகாரம், போன்ற அபூர்வ விஷயங்களையாவது, திருக்குறள்போன்ற இலக்கியரத்தினங்களையாவது எடுத்து, ஏதோ தெரிந்ததைப் பிரஸ்தாபித்து விடுவது நலமென்று கண்டது. எவ்வகையிலும் நற்பயன் சித்திப்பது உறுதியெனக் கொண்டுதான் நானிப் பெருங்காரியம் தொடங்குவது. ஏனெனில், நான் எழுதிவருவதில் தோஷங்காணுபவர்கள், என்னைவிடச் சிறந்த வித்துவான்கள் (தோஷக்கியர்கள்.) ஆதலாலவர்களுடைய வித்தை எனக்கும் ஒருசமயம் பிரயோஜனப்படும். என்னைவிடத் தாழ்ந்த கல்விமான்களோ இதில் தோஷம் காணமாட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லுவது ஏதாகிலும் நற்பயனைக் கொடுத்தாலும் கொடுக்கும். எனக்குச் சமானமானவர்களுக்கோ, நான் சொல்லுவதெல்லாம் சரியெனப்படுமாதலால், அவர்கள் விஷயத்தில் எனக்குச் சிந்தையே இல்லை. இலக்கண நூல்களைவிட இலக்கிய நூல்கள் ஆராய்ச்சிக்குச் சுலபமாவனவென்பது பிரத்தியக்ஷம். தவிர மாதாந்தர சஞ்சிகையில் காணும் விஷயங்கள், கேவலம் நாலு வித்துவான்களுக்கு மட்டுமே ரஸிக்கக்கூடிய 'முன்னென்னும் சொல்வழக்கு,' போன்றவையன்று. ஆதலால் வெகு பெரிய இலக்கண ரகசியங்களை விளக்க எனக்குப் போதுமான திறமிருப்பதாக வைத்துக்கொண்டாலும், விசேஷமாக எனது பிரயாசம் வியர்த்தமாகிவிடும் என்று காணுவதால், இலக்கணத்தை யொழித்து, இலக்கியங்களிலேயே சற்று விஹாரணம் செய்யலாமென்பது எனது சங்கற்பம்.

முதன் முதல் எடுத்தது பிள்ளைத்தமிழ். அது சாதாரணமாதலால், நீர் அதையெடுத்தது சரிதான். தெய்வப்புலமை நாயனாருடைய திருக்குறளையும் அவ்வாறு நாலு வார்த்தையில் ஒழித்துவிடப் பார்ப்பது உமக்குச் சரியாவென வித்துவான்கள் ஆக்ஷேபிக்கலாம்.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்,"

என இடைக்காடர் வருணித்து அதைச் சரியெனப் பின்னிட்டு வந்தவரெல்லோரும் ஒப்பியிருக்க, அதை மறந்து மாதாந்தரச் சஞ்சிகையில் இரண்டொரு பக்கத்தில் குறளைப் பற்றியறிய வேண்டுவதையெல்லாம் அறிவித்து விடுவேனென்று புகுதல் மதியீனம்தான். ஆனால் திருக்குறளுக்குள்ள முற்காலத் தற்காலத்தசையைச் சற்று விசாரித்தால், நான் எடுத்தது முற்றும் மதியீனமன்றெனத் தெளிவாகுமென்று நம்புகிறேன்.

திருக்குறள் எக்காலத்தில் உண்டாயிற்றென்றுவது, நாயனார் எங்கு வாழ்ந்தவர், எக்காலத்திருந்தவர், என்றுவது இனி நிஷ்கரிஷைப் படுத்துவது அனேகமாய்க் கூடாத காரியமென்றே சொல்லிவிடலாம். திருமயிலைப்பதியின்கணுள்ள சில சாக்ஷியங்களையும், ஐதிகங்களையுங்கொண்டு, அங்கு வாழ்ந்தவரென்னலாமென்றால், அங்கு அக்காலத்தில் கல்வி பெருகிச் சங்க முதலியன சிறந்து நின்றதாக ஒருவாற்றானும் புலப்படவில்லை. ஆதலால் அவ்விஷயத்தில் ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை.

சரி, இடம் போனதுபோகட்டும், ஜாதி, குலம் முதலிய விஷயமோவென்றால், இன்னும் விபரீதம். முதற்குறளில், கடவுள் வாழ்த்து முறையாக 'ஆதி பகவன்,' என்றது கொண்டு, நாயனருடைய தாய்க்கு 'ஆதி' என்றும், தகப்பனுக்குப் 'பகவன்' என்றும் பெயரிருந்திருக்கலாமென ஒரு வதந்தியுண்டு. இதைக் கொண்டு நாம் பிடிவாதமாகச் சொல்லுவதற்கொன்றுமில்லை. வேறு சாக்ஷியங்களால் இது நிச்சயமாக ஏற்படுமானல், இதையும் சேர்த்துக் கொள்ளலாம். இதைப்பற்றிப் பேசுவோர், நாயனரது மாதாபிதாக்களை யிரு குலத்தவராக்க ஆக்கிரகப்படுபவராம். இது அதிசயமன்று. இந்நாட்டில் மட்டுமேயல்லாது வேறு நாடுகளிலும், பெரியோருடைய வரன்முறைக்கு இவ்வாறு ஒருபுதுமை கற்பிக்காவிட்டால், அப்பெரியோருக்குப் பெருமையில்லை யென்பது ஒரு பாலார் கோட்பாடுபோலும். ஆகவே, ஸ்ரீவியாசபகவானைப் பிராம்மணனுக்கும், வலைச்சிக்கும் பிறந்தவராகவும், வேறு அனேகரைத் தெய்விகமாய் உண்டானவராகவும் பேசிவருதல் சாமான்னியம். ஜனன விஷயத்தில் எப்படியோ அப்படியே மரணவிஷயத்திலும் ஏதேனும் அதிசயம் கற்பிப்பது நமக்குள் சகஜமாகிவர்திருக்கும் லக்ஷணமாம்.

'வள்ளுவர்,' என்ற பெயரைக்கொண்டு நாம் இவரை அச்சாதியவரென்றே ஊகிக்கலாம். இப்போது வள்ளுவரென்று சிலர் ஆங்காங்கிருப்பவருக்கும் ஏதோ ஞானமிருப்பதாலும்,

"வள்ளுவரைக் கேட்டோம், அவர், எடுத்துச் சொன்னரிதை விடுத்துச்சொன்னர்......,"

என்று நந்தன் சரித்திர முதலியவற்றிலுள்ள பிரயோகங்களிலும், இவர் அச்சாதியவரென்னலாம். அதனல் அவருக்கு ஒருகுறையுமில்லை. ஏனென்னில் அவரது புகழுடம்புக்கு யாராலும் குறைவுண்டாக்க முடியாது. ஆனல் இவர் வள்ளுவராயின், திருக்குறளில் காணும் மனுதருமநூல் முதலிய வடமொழி மேற்கோள் இவருக்கெப்படி முற்றும் கைவசமாயிருக்கக்கூடுமென்பது விளங்குவதில்லை. குறட்பாவில் நிகரற்றுப் பாடிய பெருமையைத் தெய்வப் புலமையென்று யாருமங்கீகரிப்பார்கள்: என்றாலும் திருக்குறளில் காணும் விஷயவிசேஷங்களெல்லாம் யாருக்கும் தானக வருவன வல்லவாதலால், அவை எப்படி நாயனருக்குக் கிட்டியன வென்பதுதான் நமக்கு விளங்காத விஷயம்.

ஆதலால் நாயனருடைய பிறப்பிடம், ஜாதி முதலிய தொன்றும் நமக்குத் தெரியாததுடன், அவர் கல்வி கற்ற பெருமையும், குறட்பாவில் அவருக்கு முற்பட்டிருந்த அனுபவமும், அவரது நண்பர், அவர்காலத்தில் இக்குறட்பாவைச் சிலாகிக்கவல்ல 'மூப்பர்,' இத்தியாதி விஷயங்களைக்குறித்து நாமொன்றும் அறிவது சாத்தியமன்று. என்றாலும் இரண்டு அம்சங்கள் மட்டும் ஏதோ தேவர் வாக்கைக்கொண்டே ஒருவாறு ஊகிக்கலாம். அவையாவன, அவர் நூலியற்றிய காலமும், அவரது மதக்கொள்கையுமாம்.

நூலியற்றிய காலமென்றால், வருஷம், மாசம், தேதியல்ல. அது இனி முடியாத காரியமென்பதில் நமக்குச் சந்தேகம் சிறிதுமில்லை. ஆனல் மொத்தத்தில் இன்னகாரியங்களாகிய பிறகு தான் இவர் 'திருக்குறள்' உண்டாக்கி, அதைப் புலவர் ஏற்குமாறு செய்தது சாத்தியமென்று நாம் அறிந்துகொள்வது சுலபம். இதையறிவதற்குத் தக்க சாக்ஷியங்கள் வேறேதேனுமுண்டாமெனில், விசேஷமே. இல்லையெனக்காணுவதால், அவர் எடுத்துக்கொண்டவிஷயங்களையும், விவரிக்கும் முறையையும் சற்று நிதானித்துப் பார்ப்பதில் ஏதாகிலும் அவர் வாக்கு மூலமாகவே அறிவது சாத்தியமோவெனப் பரீக்ஷிக்கவேண்டும்.

நாயனர் எடுத்து விளக்கிய விஷயங்கள் மூன்று. அவையாவன, தருமம், அர்த்தம், காமம், என்ருல், முறையே அறம், பொருள், இன்பம் என்று தமிழர் கூறுவனவாம். இவற்ரேடு 'மோக்ஷம்' என்னும் 'வீட்டையும்' சேர்த்துக் கொண்டால், 'புருஷார்த்தம்' என்று வடமொழியில் சாமான்னியமாய் வழங்கும் நான்கு சாதனங்களுமாம். மனிதன் ஜன்மமெடுத்ததற்கு இந்நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதே முக்கிய லக்ஷியமென்பது முன்னேர் கூற்றல்லாது, நாளதுவரை நாம் செய்துவரும் சங்கற்பங்களிலுங் காணும்.

இவற்றுள் அறமாவது, மனது, வாக்கு, சரீரம் ஆகிய மூன்று கரணங்களாலும் நாம் செய்பவேண்டிய கருமங்கள். உதாரணமாக, 'கடவுள் வாழ்த்து' முதலியன மனத்தினல் விசேஷித்தாகவேண்டிய கருமமாகவும், 'பொய்யாமை' முதலியன வாக்கை விசேஷித்ததாகவும், 'கொல்லாமை' முதலியன சரீரத்தை விசேஷித்ததாகவும் காணும். எக்காலத்தும் இம்மூன்று கரணங்களாலேயே மனிதன் மணம் பெறுவதும், நாசமடைவதும் அனுபவமாதலால், அவற்றைக்கொண்டு, இன்னவைகளைச் செய், இன்னவைகளை யகற்று, என்று அறத்துப்பாலில் கூறியிருக்கிறது.

இனியிதிற் கூறிய தருமங்களைக் கிரமப்படி நடத்தவேண்டு மென்ருல், அதற்கு முக்கிய சாதனம் 'பொருளே' யானதுபற்றி, அதை அறத்தின் வழிபற்றிக்கூறினர். 'தனத்தின் மூலமாய்த் தருமம், அவ்வழியாய்ச் சுகம்,' என்பது பெரியோர் வாக்கியமாகவும், 'வெறுங்கோணியை நில நிறுத்தலரிது,' என மேனட்டுப் பழமொழியாகவு மிருப்பது கொண்டென்க. சம்பாத்தியம் நல்வழியிலென்பதே நாயனர் துணிவு. எவ்வகையானுஞ் சம்பாதிப்பதே முதல் தருமமென்பது நாகரிகம் வலுத்து முதிர்ந்த பின்னேற்பட்ட நியாயம். இந்நியாயத்தைக் கைப்பற்றிய லௌகிகப் பெரியோருக்கு நாயனர் சொல் ஏற்காது. அவர் ஏதோ ஏட்டுச்சுரைக்காய் நியாயமாக உளறுவதாகத் தோன்றும்.

இம்மாதிரி நன்னெறிப்பற்றிப் பொருளீட்டுதற்குப் பல துணைக்கருவிகள் வேண்டியிருப்பது பிரத்தியக்ஷம். செல்வம் சகடக்கால்போல் வருவது ஒருவாறு நிஜமென்ருலும், செல்வத்திற்குச் சாமான்னியமாய்க் 'கல்வி, ஒழுக்கம்,' முதலிய "அகக்கருவிகளும்," 'அரசு, சட்டம்' முதலிய "புறக்கருவிகளும்," வேண்டியனவாயும், இன்றியமையாதனவாயுமிருப்பது இக்காலத்தில் எல்லோருக்கும் பிரத்தியக்ஷமாகி வருகிறது. பீ. ஏ. பரீக்ஷையில் 'வைசிகம்' என்னும் செல்வநூலைக் கற்போர், 'அரசியல்' பொருளீட்டுதற்கு எத்தனை தூரம் இன்றியமையாச் சாதனமென்பதை நன்கறிவர். ஏனையோரும் இந்த ரகசியத்தை எளிதில் அறியலாம். நமதுடைமை, நமதகம், நமது பெண்டிர், நம்மக்கள், என்று ஒவ்வொருவனுக்கும் நிச்சயமும், நமக்குப்பின் நமது மக்களே நாம் தேடியவற்றைப் பெற்றுச் சுகிப்பவர், என்கிற நியமமுமில்லாவிட்டால், நம்மில் எத்தனை பெயருக்குப் பொருளீட்டுவதிலும், அதற்காகத் திரைகடலோடுவதிலும், உற்சாகமிருக்கும்? ஆப்பிரிக்காவில் நீக்கிரவர் குழந்தைகளை அடிமை வியாபாரிகள் வேட்டையாடிப் பிடிப்பதுபோலவும், வெள்ளாளனுழுது பயிரிடப் பிண்டாரி அதை அறுத்துப் போவதுபோலவும், இருந்தால் நம்மில் யார் உழைக்கப் பிரியப்படுவார்கள்? ஆதலால் செல்வத்திற்கு வேண்டிய துணைக்கருவிகளாகிய கல்வி முதலியவற்றில், அரசியல் முதற்பதவி பெறுவது சித்தம். அது கொண்டே நாயனரும், பொருட்பாலில் அரசையும், அவ்வரசு சீராக நடக்க வேண்டியதில் ஏற்பட்ட அமைச்சு முதலிய அங்கங்களையும், எக்காலத்திற்கும் ஏற்குமாறு வெகு நேர்த்தியாகக் கூறியிருக்கிருர்.

அறமும், பொருளும் சித்திக்குமிடத்து, 'இன்பம்,' என்ருல், அன்புடை மனேவியுடன் இனிது வாழ்ந்திருத்தல் உத்தம பலனுதலின், அதையிதற்குப்பின் அமைக்கப்பெற்றுளோம்.

புருஷார்த்தம் நான்காதலின், நாலாவதாகிய மோக்ஷத்தைக் குறித்து நாயனுரேன் சொல்லவில்லை யென்பதற்குப்பலர் பலவிதமாக நியாயங் கூறுவர். சிலர், இதனுல் நாயனுர் துறவறத்தை யிகழ்ந்து இல்லறத்தையே மேம்படுத்தினு ரென்றும், சிலர் இன்னெரு நியாயங் கற்பித்தும் பேசுவதுண்டு. ஆனுல் இப்படியவரவர் மனேதருமங்களை அன்னியர் கருத்தோடு இயைத்துப் பேசுவது பதராகும். இப்படியே வடமொழியிலும், ஸ்ரீகாளிதாச கவி ரகுவம்சத்தில் பத்தொன்பது சருக்கம் தான் பாடியிருக்கவேண்டு மெனக்கூறியும், வால்மீகி 24000-சுலோகங்கள் தான் செய்திருக்கவேண்டு மெனக்கூறியும், வீண் பேச்சுப் பேசுவதுண்டு. அதை நாம் தள்ளிவிட்டு, 'இருப்பதை யியக்கல் வேண்டும்,' என்னும் நியாயத்திற்கிணங்க, நாயனுர் சொல்லியதை மட்டும் கவனிப்போமாக.

இதுவரை சொல்லியதால் 'திருக்குறள்' ஒரு பெரிய தருமசாஸ்திரமென்பது விளங்கும். ஆதலால், இதற்கு முதனுல்களெவை யெனத் தெளிதல்வேண்டும். விஷய அமைப்பு, விவரணம், வருணனை முதலியவற்றை ஆராய்ந்து நோக்குங்கால், வடமொழியில், மனுதரும சாஸ்திரம், சுக்கிரநீதி, வேதங்களில் முக்கியமாக உபநிஷத்து பாகங்கள், ராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், ஸ்ரீ பாகவதம் முதலிய இரண்டொரு முக்கிய புராணங்கள், இவையனைத்தும் தென்னுட்டிற் பிரபலித்து, வித்துவான்களுக்கும், சாமான்னியருக்கும் செம்மையாகப் பரிசயமான பிற்பட்டுத் தான் உண்டாகிய கிரந்தமென்பது பிரத்தியக்ஷம்.

தவிரப் புத்த, ஜைனமதங்களாகிய வைதிக மதப்பிரிவுகளும் இத்தென்னுட்டில்தழைத்து, ஓங்கிப் பெருகியபின்னரே திருக்குறள் அமைக்கப்பெற்றதென்பதை, எல்லா மதஸ்தரும் தமது, தமது, என்று ஏற்குமாறு அமைந்திருப்பது கொண்டு நன்கறியலாகும். அல்லாமலும், வைதிக விஷயமாகப் பேசியதில் கரும மார்க்கத்தை வெகுவாய்க் கண்டித்து, ஞான மார்க்கத்தையும், பக்திமார்க்கத்தையுமே சிறப்பித்திருப்பது கொண்டும், ஒருவாறு கால நிர்ணயங் கண்டறியலாம். தவிரக் குறள் முற்றுமாராய்ந்ததிலும், ஐந்தாறு புராண விஷயங்கள் சூசனேயாகக் காணுவதொழிய வேறு காணுமையாலும், முரட்டு வழிகளை முரட்டாட்டமாகக் காண்பிவிக்கும் சமயநூல்களேற்படு முன்னரே தான் நாயனுரிருந்து செழித்திருக்கவேண்டும். "அடியளந்தான்ரு அயதெல்லாமொருங்கு," "இந்திரனே சாலுங்கரி," "அன்புடையாரென்புமுரியர் பிறர்க்கு," என்பனபோன்ற சில சூசனேகளால், ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய முக்கிய நூல்கள் பிரபலித்திருந்ததும், ஏனைய புராணுதிகள் பிரபலிக்காததும் விளங்கும்.

இவ்வாறு நாயனுர் எடுத்த விஷயங்கள் வேதசாஸ்திரங்களை யொட்டியவாயினும், அவற்றை விளக்கியிருக்கும் நடையும், குறட்பாவின் மகத்துவமும், வருணனை விசித்திரமும், நாயனுருக்கென்றேயேற்பட்ட அபூர்வ லக்ஷணங்களாம். ஆதலாலவரை 'உத்தமக்கவிகளினுத்தமர்' என்று வெகு காலமாகப் புலவர் கொண்டாடிவருவதும், பூஜிப்பதும் சரியானதேயாம். தமிழுக்குள்ள சக்தியிவ்வளவென்று இலக்கிய மூலமாய்த் தெளிவாக்கவே இவர் திருவவதாரஞ் செய்தனரெனல் தகும், தகும். சொற்சுருக்கமும், புதைபொருளும் இனிவிசேஷித்து இதினிற் சிறந்து காண்பதரிதரிது. "ஒரு மாத்திரை லகுவானுல் அதைப் புத்திரோற்சவத்திற்குச் சமமாக இலக்கணவித்துவான்கள்

கொண்டாடுகிறார்கள்,” என்ற நியாயம் இலக்கணச் சூத்திரங்களுக்கு அமைந்தாலும், அமையாவிட்டாலும், திருக்குறளுக்கு வெகு நன்றாயமையும். படாடோபத்திற்காகப் பதங்களை யுபயோகித்தும், கிரோட்டக யமகவந்தாதி பாடியும் வந்திருக்கும் பிற்காலத்திய வித்துவான்களுடைய தமிழ்ப்புலமைக்கும், நாயனார் புலமைக்கும் வெகுதூரம். சிறுபதங்களாகவும், அதிலும் அரும்பதங்களை யுபயோகிக்காமலும், விசேஷமாகச்சந்தி முதலிய இடறுகளில்லாமலும், தமிழைக் கேட்கக்கேட்க ஆனந்தம் பொங்கும் படிக்கும், எல்லா மதஸ்தர்களும், எல்லாநாட்டாரும், நன்று நன்றென்னும்படிக்கும், எழுதிய வள்ளுவரைத் தேவரென்று உச்சிமேற்கொண்டது அதிசயமேயன்று.

(இன்னும்வரும்).

ஒரு நாள் ஒரு நதிக்கரையில் இரண்டு காட்டாள்கள் நின்றுகொண்டிருந்தார்கள். நதியில் வெள்ளம் பிரவகித்துப்போய்க் கொண்டிருந்தது. அதிலகப்பட்ட கரடி யொன்று மேலுங்கீழுமாக உருண்டு போய்க்கொண்டிருந்தது. அதை யேதோ கம்பிளி மூட்டையென்றும், அதற்குள் ஏதாகிலும் நல்ல சாமான் இருக்கவேண்டுமென்றும் இவர்கள் எண்ணியபடியால், ஒருவன் உள்ளே குதித்து நீந்திப்போய் அதைப்பிடித்தான். தனக்குப்பற்றேதாகிலும் கிடையாதாவென்று கரடி தபசு பண்ணிக்கொண்டிருந்ததால், ஆள் அகப்பட்டதும் அவனைக்கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொண்டது. உடனே அவன் அதைத் தப்பித்துக்கொள்ளப் பார்த்து முடியாமல், அதுவும்தானும், மேலுங்கீழுமாய்ப் போராடுவதைக் கரையிலிருப்பவன் கண்டு, ‘தம்பீ, கம்பிளிமூட்டை கிடக்கட்டும், நீ கரைவந்து சேர்,’ என, அவன், ‘அண்ணா கம்பிளிமூட்டையை நான் விட்டுவிட்டேன். ஆனால் கம்பிளிமூட்டை என்னை விடமாட்டேன் என்கிறது. என்ன செய்வேன்!’ என்று சொல்லி இறந்தானும். நமது பாபமூட்டைகளும் இவ்வாறே யெனத்தெளிதல் வேண்டும்.

# மேனாட்டாரும், கீழ்நாட்டாரும்.

## வித்தியாவிஷயம்

ஸ்ரீமான். கே. ஏ. துரைசாமி அய்யரவர்கள், பி. ஏ. எல். டி.

இந்த விஷயத்தைக்குறித்து முதலெழுதிய வியாஸத்தில் சில சரித்திர சாராம்சமாகிய தத்துவங்கள் கூறியுள்ளனவல்லாமலும், நாம் முயற்சியுடையோராவோமாகில், நாமும் நம திருப்பிடமாகிய இந்த ராச்சியமும் க்ஷேமத்தையடையுமென்பது கூறப்பெற்றது.

எக்காலத்திலும் பலிஷ்டர்களாகி யிருப்பவர்களுக்குத் தாழ்ந்தே பலவீனர்கள் நடக்கவேண்டுமென்பதிற்கையமில்லை. ஆனால் அத்தகையபலமோ, தேகபலம், புத்திபலமென இருவகைப்படும். சில காலங்களில் தேகபலத்தாற் சிற்சில ஜனங்கள் முன்னுக்கு வரவும், பின்னும் சில காலங்களில் புத்தி பலத்தால் காரியம் இயலவே, அதுபற்றி முன்னுக்கு வரவும், உலக நடவடிக்கையில் இம்மாதிரி மாறிக்கொண்டே யிருந்திருக்கின்றன. ஆதலால் இவ்விருதன்மையான பலமும் சேர்ந்திருக்கின்றவர்களே உலகத்தில் நிச்சயமாக ஜயமடைவதை நாம் காணுவதில் ஆச்சரியம் யாதொன்றும் காணவில்லை. அவற்றை நாம் அடையாமலிருக்கும்வரை நமக்கு எவ்விதமான நற்பதவியும் சாசுவதமாகக் கிட்டாதென்பது திண்ணம். ஆதலின் இந்த உயர்வு கிடைப்பதற்கு ஆங்காங்குக் காணப்படுகின்ற சாதனங்களையெல்லாம் ஒன்று சேர்த்தெடுத்து, நமது தேசத்திற்குத் தக்கவண்ணம் அவற்றை மாறுபடுத்தி, அவற்றிற்கிணங்க நடந்து, நாம் விருத்தியை யடையவேண்டுமென்று மனதிலுதயமாவது யாவரும் அங்கீகரிக்கத் தக்கதாயுள்ளது.

விஷயமோ அதிகம் பெரியது. எல்லாச் சமாசாரத்தையும் தெரிந்தெடுக்க முடியாதா

தலாற் சிலவற்றை மாத்திரம் இங்குச்சுருக்கிச் சொல்லலாகிறது.

தற்காலத்தில் சாமான்னியமாக மேனாட்டார் எங்கும் வியாபித்துத் தங்களுடைய நாகரீகத்தை ஏனையோர் கொண்டாடும்படியாகவும், தங்களுடைய ராஜதந்திரங்களைக்கற்று,தங்களைப் போலவே நடித்து, மேனாட்டாராக வேண்டுமென்கிற அவாக்கொண்டு அனேகர் நடக்கும்படியாகவும், மேன்மையை அடைந்திருப்பதற்கும், இந்து தேசியராகிய நாம் முன்னிருந்த உன்னதமான பதவியினின்றும் தாழ்வடைந்து, பலவிதக் குறைவுகளும் நம்மிடத்தில் காணப்படுவதற்கும், காரணங்கள் பலவுளவாயினும், அவற்றுள் முக்கியமாகக் காணப்படுவது வித்யாப்பியாசத்திலுள்ள வித்தியாசங்களே என்று தோன்றுகிறது.

காட்டுமிராண்டிகள் நிலைமைக்கு மேலேயிருக்கிற ஒவ்வொரு தேசத்திலும் எழுதப் படிக்கச் சனங்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் அநேகம் பேதகதிகள் காணுகின்றன. இவை அந்தந்தத் தேசாசாரங்களுக்கும் ஜனங்களுடைய மாதிரிகளுக்கும் ஒத்திருக்கின்றனவானாலும், காலக்கிரமத்தில் வரும் வித்தியாசங்களை யனுசரித்து மாறுபடாமல் நிரம்பவும் துர்ப்பலத்தை யடைந்திருக்கின்றன. காலத்திற்குத் தகுந்தபடி, வேனிற்காலத்தில் இலேசான பஞ்சுத் துணிகளையும், குளிர்காலத்தில் சிங்காநல்லூர், பல்லாரிக் கம்பளிகளையும், உபயோகப்படுத்துவது எப்படி யுக்தமோ, அப்படியே வித்யாவிஷயங்களிலும் மாறுபாடுகள் இதுவரை இல்லாமலிருந்ததால் தான் அநேகம் கெடுதல்கள் சம்பவிக்க இடமுண்டாயிற்று.

நமது ராச்சியத்தில் கல்விச்செல்வமே எல்லாச்செல்வத்திலும் சிறந்தது என்று கொண்டாடப்பட்டு, நம்முன்னோர், 'ஆத்தும ஞானமில்லார் மூடர்,' என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய சௌகரியங்கள் பலவும் ஏற்படுத்திபிருந்தார்கள். தருமத்திலெல்லாம் இதுவே சிரேஷ்டமான தருமமென்று அவர் புத்திக்குத் தோன்றியதால், அறிவின்மையாகிய அந்தகாரத்தைப்போக்கி, மின்போன்ற நுண்ணறிவை உட்புகட்டி, ஆத்துமகோடிகளெல்லாம் எங்கும் தழைத்து ஓங்கி வளரவேண்டும் என்றும், உண்மையான அறிவு பரவவேண்டுமென்றும் கருத்துக் கொண்டார்கள். ஆதலால் தான் ஒவ்வொரு குருவும் தம்மாலியன்றமட்டும் சிஷ்யர்களுக்கு அன்னமிட்டுப், பிரதியுபகாரம் எதிர்பாராமல் வித்தையையுதவி, அவர்களைக் கரையேற்றிக்கொண்டு வந்தார். பின்னிட்டு அவர்களுடைய தரித்திரதசையால் அது சாத்தியப்படாமலாகவே, இக்காலத்தில் சில இடத்தில் நாட்டுக் கோட்டைத் தனிகர்களாலும், வேறு சில பிரபுக்களாலும், பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு, தருமத்திற்கு அன்னம் ஆதாவுடன் அளிக்கப்பெற்று, சில வித்தியார்த்திகள் வித்தையைத் தேடிவருகிறார்கள்.

இவ்விதமாய் நமது நாட்டில் அநேககாலமாய் வித்தை ஒரேவழியை அனுசரித்து ஆத்துமஞானத்தையே முக்கிய கருத்தாய்க்கொண்டு, பரம்பொருளைத் தேடும் வழியில் நின்றுவிட்டது. அவ்வழியோ மெத்த கஷ்டமானது. சாதாரண புத்தியுள்ளாருக்கு எட்டாதது. ஆனால் தொன்றுதொட்டு வந்த வழியாதலால், அதையே கைப்பற்றி, அற்ப அறிஞரும் அவ்வழியிற்றானே பயின்று, பூவுடன் நாரும் மணம் பெற்றாற்போல் சருவசம்பன்னரும் தெய்வபாவத்தை யடைந்தவருமான குருக்களிடம் வசித்து, 'காற்குருடன், அரைக்குருடன்,' என்னும் நியாயத்தில் தெரிந்தும் தெரியாமலும் உளறிக்குளறி உண்மையான வித்தையின் யோக்கியதையைக் குறைத்துவிட்டார்கள். இப்பொழுதோ, கழுதைக்குத்

தெரியுமா கற்பூரவாசனை?, என்று யாரும் இகழும்படியாகச் சிலர் தாம்படித்ததொன்றும், அறிந்ததொன்றும், சொல்வது வேறொன்றுமாய், உண்மையை யறியாமலும், தாறுமாறுமாய்ப்பிதற்றி அவ்விஷயத்தில் உற்சாகமிருப்பவருக்கும்கூட, "இவர் வெகுதூரம் படித்தவர் என்பதாகப் பேர்வாங்கி இருக்கிறார். இவரைக் கேட்டால் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழிக்கிறாரே," என்று நினைத்துத் தயங்கும்படியான நிலைமையா யிருக்கிறது. நாளுக்குநாள் தகுந்த குருக்கள் இல்லாமையாலும், சிரத்தைக் குறைவாலும், வித்தையின் மகிமை குறைந்துவருகிறது. ஸ்கூல் மாணாக்கர்களில் சிலர் இதுவரை சம்ஸ்கிருதத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டு, அதை எடுத்துப் படித்து, அவர் மூலியமாய்க் கொஞ்சம் க்ஷேமத்தை அடைந்துகொண்டுவந்த ஞான மார்க்கம், புதிதாய்ப் படிப்பு விஷயங்களில் வந்திருக்கிற சீர்திருத்தங்களால் சம்ஸ்கிருதமும் கைவிடப்படவே, இருந்தஇடமும் தெரியாமற் போய்விடுமோ என்று பயப்படும்படியாயிருக்கிறது. ஆகையால் அறிஞர்கள்சேர்ந்து இம்மார்க்கம் மாக்ஷிமை குன்றாது தழைத்தோங்கும் வண்ணம் உழைக்கவேண்டியது அத்தியாவசியம்.

ஆகாராதிகளில் வைத்தியர்கள் பலவிதமானவற்றை உட்கொள்வது தேகத்திற்கு ஆரோக்கியம் என்று கூறுகின்றார்கள். சர்க்கரைப் பதார்த்தங்களும், நெய் முதலிய கொழுப்புப் பதார்த்தங்களும், பருப்பு முதலிய 'நைட்ரோஜன்' என்னும் வாயு அதிகரித்துள்ள பதார்த்தங்களும், எல்லாம் கொஞ்சங்கொஞ்சம் சரீரத்திற்கு வேண்டியிருப்பதுபோல, நமது ஜனங்கள் க்ஷேமத்தை யடைவதற்கு நாம் அநேகவித வித்தைகளையும் சம்பாதிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இதுவரை சொல்லிவந்த ஞானவித்தை அவற்றில் ஒன்று என்பதை மறந்துவிட்டுத்தான் இப்பொழுது தவிக்கிறோமென்று தோன்றுகிறது. இது சில குணங்களிற் சிறந்தவருக்கு மாத்திரமே உபயோகப்படுமேயல்லாது, எல்லாருக்கும் எட்டாதாதலால், அநேகர் 'கிட்டாதாயின் வெட்டென'மறந்துவிடுகிறார்கள்: ஆதலால் உலக நடவடிக்கைகளுக்கு வேண்டிய எல்லாவிதத் தொழில்களுக்கும் பாடசாலைகள் ஏற்படுத்தி, ஓரொன்றிலும் மாணாக்கர் பயின்று தேர்ந்து, ஜீவனோபாயத்தைத் தேடக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

ஐரோப்பாவிலும் சுமார் 500-வருஷங்களுக்குமுன் ஜனங்களுக்குள் படிப்பு இவ்வாறே நிரம்பவும் குறைவடைந்தேதானிருந்தது. அக்காலத்தில் பிரபுக்களுடைய பிள்ளைகள் என்ன சொல்லுவது வழக்கமாயிருந்ததென்றால்,"கோவில் பூசாரியும், மத உபதேசிகளும்தான் படிக்கவேண்டும். குமாஸ்தாக்களுக்குத்தான் எழுதத் தெரியவேண்டும். நமக்குக் குதிரை சவாரி செய்யவும், யுத்தப்பயிற்சிகளில் உற்சாகமுள்ளவரா யிருப்பது மல்லவோ, முக்கியம்" என்று. அங்ஙனமிருந்தவர் தாம் இப்பொழுது உலகமெங்கும் கொண்டாடும்படியாகப் பிரகாசத்தை யடைந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு இது லகுவாய்க் கிடைத்துவிட்டதென்று நாம் நினைக்கத்தகாது. அவர்களும் போகவழி தெரியாமல் தத்தளித்துத் தள்ளாடி, அநேககாலம் சாமான்னியமாக உபயோகத்திலில்லாத லாடின், கிரீக் பாஷைகளைப் படிப்பதிலும், அவற்றில் செய்யுட்களுண்டாக்குவதிலும், வியாஸங்களை எழுதுவதிலும், பாலியத்தைச் செலவுசெய்து உலகப் பிரயோசனத்திற்கு வேண்டிய தொழில்களில் பிரயத்தனமின்றி யிருந்தார்கள். 'ஆக்ஸ்போர்ட்' யூநிவர்ஸிடி சுமார் 800-வருஷத்திற்குமுன் னேற்பட்டது. என்றாலும் மேற்சொல்லிய ஏற்பாடுதான் அங்கேமுக்கியமாய் வெகுகாலமாக நடந்துகொண்டுவந்தது. (நமது சம்ஸ்கிருதப் பள்

ளிக்கூடங்களில் இன்றைக்கும் இம்மாதிரி வழக்கமாயிருப்பது நாமறிந்த விஷயமே). இப்பொழுதுதான் கொஞ்சநாளாய் அவர்கள் விழித்துக்கொண்டார்கள்போலும், தற்காலத்திற்கு வேண்டிய 'ஸைன்ஸ்' படிப்புகளும், அந்நியதேசபாஷைகளாயிருந்தபோதிலும் அடிக்கடி உபயோகப்படுவதான ப்ரெஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளும் இக்காலத்தில் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. ஆதலால் மேனாட்டிலும், தட்டுக்கெட்டுத்தான் 'ததிகணதோம்' அவர்களுக்குக் கிட்டியது.

கைத்தொழில்கள் விசேஷமாய் நடந்துகொண்டிருக்குமிடங்களில் அதற்கனுகூலமான படிப்புகளை அபிவிருத்தி செய்வதற்காகத் தற்கால அவசியப் படிப்புகளடங்கின சில யூனிவர்ஸிடிகள் (மான்செஸ்டர், பர்மிங்ஹாம் முதலிய பட்டணங்களில்) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தவிரவும் படிப்புகளில் அநேகம் பிரிவுகள் விளங்குகின்றன. அவை யெல்லாவற்றிற்கும் தமிழில் பதங்கள் கண்டுபிடிப்பது கஷ்டமாதலாலும், தவிரவும் இங்கிலீஷ் பெயர்களே உபயோகத்தில் வந்து கொண்டிருக்கின்றனவாதலாலும், அவற்றின் சிலவற்றைமாத்திரம் தாழே கூறுவாம். பஷைகள் (அநேகவிதம்), சரித்திரம் (பூர்வீகம், மத்தியகாலம், தற்காலம்), தத்துவசாஸ்திரம், வானசாஸ்திரம், சமுத்திரயான சாஸ்திரம், அநேகவித ஸைன்ஸுகள், கைத்தொழில்கள் (அச்சிடுதல், பயிண்டு செய்தல், தட்டான், கொல்லன், தச்சன், முதலியவருடைய தொழில்கள்), வைத்தியம், வியவஸாயம், சிற்பித்தொழில், படங்கள் எழுதும் தொழில், நீராவி யந்திரங்கள், மின்சாரயந்திரங்கள், இன்னும் இதுபோன்ற அநேக வித்தைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஆதலால், அவனவன் புத்திக்குத் தகுந்தபடி ஏதேனுமொன்றைத் தெரிந்தெடுத்து, ஒரேதொழிலில் எல்லாரும் சென்று, 'உன்னைவிடத் தாழ்ந்த சம்பளத்திற்கு நான் போகிறேன்' என்று போட்டிபோட்டுக்கொள்ளாமலும், மரியாதைக் குறைவில்லாமலும், சொந்தத்தில் வேலை செய்தோ, ஒரு யஜமானன் கீழோ, சுலபமாய்ச் 'சரீரயாத்திரை'க்கு வேண்டிய பொருளைத் தேடிக்கொள்ளலாம்.

இவ்விதம் மேற்கூறிய அநேக வித்தைகளும் மேன்மேலும் அபிவிருத்தியை யடையவேண்டிய உபாயங்கள் அநேகம் மேனாட்டார் செய்திருக்கிறார்கள். மனிதனுக்குச் சுபாவமாய்த் தன்னை மற்றவர் கெட்டிக்காரன் என்று நினைக்கிறார்கள் என்றால், அதில் ஒரு விசேஷ பிரியமுண்டாகிறது. இம்மாதிரி உற்சாகப்படுத்திவிட்டால் தலைகால் தெரியாமல் வேலை செய்துவிடுவான். அதை அனுசரித்தே அந்தந்த வித்தைகளுக்குச் சங்கங்கள் ஏற்படுத்தி, காரிய நிர்வாகிகளெல்லாம் தெரிந்தெடுத்து, சமர்த்தர்களைச் சங்கத்திற்கு மெம்பர்களாக எடுத்தும், அவர்களுக்குச் சம்மானங்கள், சர்டிபிகேட்டுகள், பட்டம் முதலியன கொடுத்தும், உன்னதஸ்திதியை நாடிக்கொண்டிருக்கிறார்கள். பொது நன்மைக்காகப் பாடுபடும் தயாளுக்களுக்குக் கவர்ன்மெண்டார் 'ராவ்பஹதூர்', 'ராவ்ஸாஹிப்' முதலிய பட்டங்கள் கொடுப்பதைக் காண்க. மைசூர், திருவாங்கூர், பரோடா முதலிய ஸமஸ்தானங்களில் வேதம், சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலியவற்றில் தேர்ந்த பண்டிதர்களுக்குப் பரிசு அளிக்கிறார்களல்லவா?

தவிரவும், நம்மவரில் அன்னவஸ்திரத்திற்கிருப்பவர் நல்ல பாண்டித்தியத்தை யடைந்து, பிற்பாடும் வேறே தொழில்கள் அதிகமாய் வைத்துக் கொள்ளாமல், தாங்கள் படித்தவித்தைகளை மேன்மேலும் விருத்திக்குக்கொண்டு வருகிறார்களல்லவா? தங்கீழ் சிஷ்யவர்க்கங்களை வைத்துக்கொண்டும், அவர்களுக்குக்

தாம் உழைத்துப் பாடுபட்டும், வித்தைகளை நிலை நிறுத்திவருகிறார்களல்லவா? அதேமாதிரியாக, ஐரோப்பா, அமெரிக்காக்களிலும், பிரபுக்களாகிய சிலர் ராஜாங்கக் காரியங்களிலுழன்று சிரமத்தையடைந்து, விடாய் தீர்த்துக்கொள்ளுவதற்காக, தம் வேலைச்சாலைக்கோ, ஸைன்ஸ் லாபொரேடரிக்கோ, தோட்டத்திற்கோ சென்று, அங்கே வேறொருவிதமான தொழிலில் குதூகலித்து, பூர்வசிரமத்தை மறக்கிறார்கள். யூநிவர்ஸிடிகளிலேயே சில வித்துவான்களுக்கு, நம்மாணுக்கருள் வழங்குகிற 'உபகாரச்சம்பளம்' போன்ற, பெல்லோஷிப், என்னும் சம்பளத்தைக்கொடுத்து, வயிற்றுப்பிழைப்புக்குப் பணம் சம்பாதிக்கவேண்டுமே என்னும் ஏக்கம் தோன்றாமற் பாதுகாத்து, வித்தையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய வழியைத் தேடுகிறார்கள். இவர் போலியருடைய சிரமங்களால் தான் அநேக சாஸ்திரங்களிலும் 'புதுசு புதுசாய்' அநேக சங்கதிகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பற்பல நன்மைகள் கைகூடுகின்றன. அங்ஙனம் நம் ராச்சியத்திலும் சிரமமெடுத்துக் கொள்ளும் சிலருக்கு ஆதரவுகள் ஏற்படுமேயானால், நம் வழக்கங்களுக்கொப்ப, நமது சாஸ்திரங்களிலும் முயற்சியேற்பட்டு. இப்பொழுது மங்கிக்கிடக்கிற அநேக வித்தைகளும் முன்னிற்கும். சமீபத்தில் நமது யூனிவர்ஸிட்டியிலும், பெங்களூரில் 'தாதா' மண்டபத்திலும், இதையுத்தேசித்தே ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதுவரை வரைந்ததினின்றும் வித்தியாசமான அபிப்பிராயம் ஏற்பட யாதொரு இடையுமில்லாதிருத்தற் பொருட்டுக் கூறுவதியாதெனின், யாருக்கும் மற்றவரிடத்திலிருந்து கிரகிக்கத்தக்க விஷயங்களிருக்கலாம். மேனாட்டார் இவ்வுலக போகமே வீடென்றும், அதை எங்கும், எவ்விதத்தானும் தேடுவதே ஜன்மப்பிரயோஜனமென்றும் கருதாமல், ஆத்துமாவொன்றுண்டென்றும், பலனை அபேக்ஷிக்காமல் கர்மங்களைச் செய்யவேண்டுமென்றும், தெய்வமொன்றுண்டென்றும் திடமாய் நம்பி, விஷயங்களிலிருக்கும் மனதைச்சற்று மேனோக்கிச் செலுத்தல் தகுதியாகும். நாம் அவரிடத்திலறிய வேண்டியனவோ, ஊக்கமும், ஐகமத்தியமும், உடும்பு போலப்பிடித்த பிடியைவிடாமல் காரியங்களை முடிக்கும் சுபாவமும், இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய பலவித மார்க்கங்களில் முயற்சி செய்வதுமாவன. இம்மாதிரிப் பிரயத்தனம் செய்வதில் நம்மான்றோர் கைக்கொண்டிருக்கும் உண்மையான தருமங்களினின்றும் வழுவாமல், "எனக்குச் சத்தியமே மாதா; ஞானமே பிதா; தருமமே சகோதரன்; தயையே சிநேகிதன்; சாந்தகுணமே பத்தினி; பொறுமையே பிள்ளை; ஆகவே இந்த ஆறுகுணங்கள் தாம் என்னுடைய (முக்கிய) பந்துக்கள்," என்று கூறியுள்ள குணங்களெல்லாம் நம்மிடம் குடிகொண்டிருக்கும்படி நாம் நடந்து கொள்ளவேண்டுமென்றல்லவோ நம்மறிவின ரெதிர்பார்ப்பது?

ஒரு ஊரில் ஓர் அரைப்பயித்தியகாரன் இருந்தான். அவனை யார் எது கேட்டாலும், "உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலோ?" என்பான். ஒருநாள் அவன் வெகு நேர்த்தியாக க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நானத்திற்குப் போகையில், எதிரே ஒரு நல்ல சுமங்கிலி ஸ்நானம் செய்துவிட்டுப் பளபளவென்று மஞ்சளும் குங்குமமுமாய் வந்துகொண்டிருந்தாள். முந்தி எப்போது பார்த்தாலும் அவள் இவனை யேதாகிலும் கேட்பதுண்டு. அவன் ஏதாகிலும் பயித்தியகார ஜவாபு சொல்லுவான். சிரித்துக்கொண்டு போவது வழக்கம். அப்படியே அச்சந்தர்ப்பத்திலும் "ஏதடா, இன்றைக்குப் பட்டாபிஷேகம் வெகு சம்பிரமமாயிருக்கிறது?" என்றாள். "உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலாக்கும்," என்று அவன் பதிவுபோல் ஜவாபு சொல்லிப் போனான். சுமங்கலிக்குமட்டும் சிரிப்பு வரவில்லை,

## ஸ்ரீ நானகதேவர்

### எடிட்டர்

முந்தியொருமாதம் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகளைப்பற்றிப் பேசுங்கால், அவருடைய சித்தாந்தத்தையும்பற்றிக் கொஞ்சம் சொன்னேம். அதாவது, இந்து மகம்மதியர்களுக்குள் மதவிஷயமாக நடந்த சண்டை சச்சரவுகளைக்கண்டு மனம்புழுங்கி, 'ஐயோ, இப்படி அனுவசியமாகப் பகவான்பேரில் பழிபோட்டு மூடர்கள் அடித்துக் கொள்ளுகிருர்களே!' என்று வருந்தி, இருதிறத்தாருக்கும் ஒற்றுமையுண்டாவதற்கு உபாயம் தேடியவர்களில், கபீர்சுவாமிகள் முக்கியஸ்தர், என்று.

இப்படியிவரும், வேறு அனேக இந்து மகம்மதீய பக்தர்களும் உழைத்துவந்ததற்கு நல்ல பலன் காலக்கிரமத்தில் கிடைக்காமற் போகவில்லை. கோதாவரிக்கு வடக்கிலும் இமாசலத்திற்குத் தெற்கிலுமுள்ள, இந்துஸ்தான், மகாராஷ்டிரமென்னும் தேசங்களில், வைஷ்ணவரென்னும் மதஸ்தர்களில் பெரும்பாலார் நாளதுவரை அனேகமாய்க் கபீர் சுவாமிகளுடைய உபதேசத்தையே மேற்கொண்டு கடவுளை வழிபட்டுவருகிருர்கள். தவிர இந்து மகம்மதீயர்களுக்குள் ஒற்றுமை, வேண்டுமளவிற்குக் கிட்டாமற்போனலும், விரோதம் வெகுவாய்க் குறைந்துபோயிற்று. கபீர்சுவாமிகளுக்குப் பின்னிட்டுவந்த பக்தரனைவரும் அவர் அனுசரித்த மார்க்கத்தையே சரியெனக்கொண்டு, நாம சங்கீர்த்தனம் செய்து, ஜாதி முதலிய பந்தங்களால் உண்டாகும் உபத்திரவங்களைக் கூடிய மட்டில் குறைத்துக்கொண்டே வந்திருக்கிருர்கள். ஆனல் இவர்களில இந்து மகம்மதீயரை ஒன்ருக்கவேண்டுமென்று கபீரைப்போலவே ஆக்கிரகம் வலுத்தவர், அந்த சுவாமிகளுக்கு வயதில் சற்றுக்குறைந்தவராயும், அவர் காலத்திலேயே பஞ்சாப் தேசத்தில் உபதேசம் விசேஷமாகச் செய்து வந்தவருமான ஸ்ரீ நானக பாவா என்னும் பாகவத சிரோமணியாம்.

நானகபாவாவின் பெயர்கூடத் தமிழ் நாட்டில் அனேகருக்குந் தெரியாது. ஆனல் அவருடைய சிஷ்ய ஜனங்களாகிய 'சீக்கர்' என்பவரைப் பற்றி ஏதாகிலும் சில சங்கதிகள் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். யமுனைக்கு மேற்கிலும், ராஜஸ்தானத்திற்கு வடக்கிலும், காஸ்மீரத்திற்குத் தெற்கிலும், ஆப்கன் மலைகளுக்குக் கிழக்கிலுமுள்ள பிரதேசம்தான் சீக்கருக்கு முக்கிய இருப்பிடம். இந்தப் பிரதேசத்தில் சிந்துநதியும், அதன் உபநதிகளும் பாய்ந்துவந்தபோதிலும், இதை மொத்தத்தில் வளநாடு என்பதற்காகாது. ஜனங்கள் இடுப்பொடியக் கஷ்டப்பட்டால்தான் ஏதோ வேண்டிய தான்னியம் கிடைக்கும். இப்பொழுது நதிகளில் சிலவிடங்களில் வாய்க்கால்கள் எடுத்துப் பாசனமாகி வருகின்றன. ஆனல் எக்காலத்திலும் இப்படியே யிருக்கவில்லை.

இந்தப் பிரதேசத்தில் குடியேறியிருப்பவர், ராஜபுத்திரர், இதர இந்துக்கள், சீக்கர், மகம்மதீயர், ஆகிய நான்கு வகுப்பினராம். இவர்களுள், ராஜபுத்திரரும், இதர இந்துக்களும் மதவிஷயத்தி லொற்றுமைகொண்டவர். எக்காலத்திலும் அப்படியேதானிருந்து வந்திருக்கிருர்கள். ராஜபுத்திரருக்குக் குலப்பெருமை வெகு அதிகமாதலால், வேறு வகுப்பினருடன் கொண்டு கொடுத்து விசேஷமாகக் குலாவுதல் இல்லை. சூரியவம்சத்தவர், அவ்வம்சத்தவருடனும், சந்திரவம்சத்தவர் அவ்வம்சத்தவருடனுமே சம்பந்தம் செய்துகொண்டு வருகிருர்கள். அதனல் அவர்களுக்குள்ளிருக்கும் உபத்திரவம் வெகு அதிகம்.

மகம்மதீயர், அனேகமாய்த் தேசீய ஜாதியாராகவிருந்து, பிறகு மகம்மது மதத்தைக் கைப்பற்றியவராம். அனேகர், ஆப்கானியரிலும், பர்சியாக்காரரிலும், அரேபியாக்காரரிலும் முற்காலத்தில் வந்து குடியேறினவருடைய வம்சத்தவர். அவர்களுக்குள்ளும் குடும்பப் பெருமை அதிகம்.

சீக்கர் என்பவருக்கு அந்தப்பெயர் நானக பாவா உபதேசத்தை அவர்கள் பெற்றபின்பு தான் கிடைத்தது. அது 'சிஷ்யர்' என்னும் வடமொழிப்பதத்தின் திரிபு. நானக பாவாவும் அவருக்குப்பின் அந்தப் பரம்பரையில் வந்த பத்துப் பெயரும், குருக்கள் மாராதலால், அவர்களுடைய மதத்தை யனுசரிப்பவரனைவரும் சீக்கர் எனப்படுவார். ஆதலால் மதத்தைப்பற்றி இவர்களுக்கு இந்தப் பெயர் கிடைத்தது. குலத்தையும் மரபையும் பற்றிப் பேசுங்கால், இவர்களுக்கு மொத்தத்தில் "நற்குடியிற்பிறந்தோர்" என்று பொருள்படும் "ஜாத்துகள்," எனப் பெயர் வழங்கும்.

'ஜாதீயராகிய' இந்தச் சனங்கள் இந்துக்களாகவே நெடுநாளிருந்தார்கள். விசேஷமாக விவசாயம்தான் இவர்களுக்குத் தொழில். ஆனால் இவர்களிருந்த ராச்சியம் எப்போதும் கலகமும், சத்துருபயமும் கூடியது. பூர்வ காலந் துடங்கி, ஆரியர், சித்தியர், பாரசிகர், கிரேக்கர், முதலியோர் ஒவ்வொருவரும் இப்பிரதேசத்தை ஆக்கிரமித்துத்தான் இந்தியாவில் வந்தது. ஆகவே பலவகைப்பட்ட சத்துருக்களுடன் போராடிப்போராடி யிவர்களுக்குக் கைதேர்ந்திருக்கிறது. இவர்களுக்குள் ஆண், பெண் இருதிறத்தாருக்கும் தைரியம் வெகு அதிகம். 'ஜாத்னி'ப் பெண்ணுக்குத் திரௌபதியின் மனோதருமம் உறைந்திருப்பதாகச் சொல்லலாம். எப்படித்தன் தந்தையைத் தேர்க்காலில் கட்டியடித்த அருச்சுனனைத் திரௌபதி சுயம்வரஞ் செய்து கொண்டாளோ, அது போலவே தமது பெற்றோரையும், தம்முடற் பிறந்தாரையும் யுத்தத்தில் வென்ற வீரனைத்தான் 'ஜாத்னி' வெகு சந்தோஷத்துடன் மணப்பது.

இப்படி வெகுகாலமாகத் தேகபலத்திற்கும், மனோதைரியத்திற்கும் ஒரு குறைவுமில்லாமல் வளர்ந்துவரும் ஜாதீயருக்கு மதவிஷயத்தில் மட்டும் ஒரு பெருங்குறைவு இருந்தது. 'ஞானமார்க்கம்' என்னும் இந்துமதப்பிரிவு அவர்களுக்குள் பிரபலித்ததேயில்லை. கரும மார்க்கத்திற்கோ அவர்களை யாரும் அதிகாரிகளாக்கவேயில்லை. சூரியவமிச முதலிய குலப் பெருமை தங்கிய ராஜபுத்திரர் செய்யும் யாகாதிகளுக்கு 'இவ்விழி குலத்தாரை'யும் சேர்த்துக்கொள்ள அவர்களுக்கு ஒருக்காலும் மனம் வரவில்லை.

ஆனால் அந்த நியாயத்தினால் இந்துக்களிலனேகர் செய்ததுபோல, இவர்களும் மகம்மதீயராகிப் போகவில்லை. மகம்மதீய மதம் தழைத்ததில் ஒரு அனுகூலமட்டும் எல்லாருக்கும் கிடைத்தது. அதாவது பக்திமார்க்கம் பிரபலித்ததாம். இதை யினியொருமாசம் நன்கு விளக்குவோம். இச்சமயத்திற்கு வேண்டியதெல்லாம் இரண்டு அம்சங்களே. ஜாதீயருக்கும், ஜாத்னிகளுக்கும், சௌரிய தைரிய முதலிய நற்குணங்கள் இருந்தும், குலப்பெருமை பேசிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லாமல், மனக்குறையிருந்தது ஒன்று. மதவிஷயத்தில் ஒருவிதப் பிடிப்பும் இல்லாமல், ஹிந்துவுமல்ல, மகம்மதீயனுமல்லவென்று, சுவற்றின் மேல் பூனையாகவிருந்ததொன்று. இவ்வாறு கச் சுமார் 5-ம் நூற்றாண்டு முதல், 15-ம் நூற்றாண்டுவரை கழிந்து வந்தது.

இந்த மத்தியில் ஆப்கானி மகம்மதீயர் இந்தியாவில் வெகுநாளாக ராச்சியபாரம் தாங்கிவந்து, சளைத்துப்போய்ப் பிறகு மொகலாயர் பட்டம் வகித்து விட்டார்கள். அவர்களுள் முதல்வரான பேரர்சக்கிரவர்த்தியாகியபாசாண்டகாலத்திலும், அதற்குச்சற்றுமுன்னும் ஜாதீயருக்கு நற்கால முண்டாகியது. ஏனெனில் அவர்களுக்குச் சற்குரு அக்காலத்தில் தான் அவதரித்து, வளர்ந்து, உபதேசஞ் செய்து வந்தார். அவர் பெயர் ஸ்ரீ நானகதேவர் அல்லது, பாவா நானக், என்பது.

இந்தப் பெரிய பாகவத சிரோமணி, 'க்ஷத்திரி' என்னும் பதத்தின் திரிபாகிய, 'கத்திரி' என்னும் வகுப்பிற் சேர்ந்தவர். இவர் பிறந்த விடம், பஞ்சாபில் ராவி நதிக்கரையிலுள்ள தல வந்தி யென்னும் ஊர். இவர் தகப்பன் காலு என்னும் ஓர் சாமான்னிய மிராசுதாரர். இவருக்கும் இவரது தருமபத்தினிக்கும் அருமைப் பிள்ளையாக 1469-ம் வருஷத்தில் நானக பாவா பிறந்தார். பிறந்தவுடன் தேவதுந்துபி முழங்கிப் புஷ்பமாரியும் பெய்தது. ஏனெனில், உலகத்தில் பல ஜனங்களுக்கு உபகாரியாக யார் பிறந்தாலும் இப்படிச் சுபசகுனங்கள் காணுவது பதிவாதலால்தான்.

ஆறு அல்லது எட்டுப் பிராயமாகும் வரையொன்றும் விசேஷங் காணவில்லை. காலுவென்பவர், விவசாயத்திலேயே கருத்தாயிருந்தபடியால் குமாரனைப்பற்றி அதிகமாக விசாரணை வைத்துக்கொள்ளவில்லை. நமது நாட்டில், இக்காலத்தில் அவரைவிடச் சாவகாசமும், கல்வியும் உள்ளவர்களே தமது மக்கள்விஷயத்தில் வித்தியாப்பியாசம் எப்படி நடக்கிறதென்பதை விசாரிப்பதில்லையென்றால், அவருக்குக் கேட்பானேன்? ஒருமுறை மட்டும், நானகபாவாவை யவர் தகப்பனார் மாடு கன்றுகளைப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னதாகவும், அவைகளைக் காட்டில் மேயவிட்டு, வெய்யில் பொறுக்கமாட்டாமல் ஒரு மரத்தடியில் இந்தப் 'பாலகோபாலன்' தூங்கிவிட, அப்போது அவர்மேல் படிந்திருந்த நிழல் சூரியன் வெகுதூரம் கிடைமாறிப்போயும், நீங்காமலும், பாகவதர்மேல் வெய்யில் படாமலும், இருந்ததைப் பார்த்ததாகப் பின்னிட்டு வதந்தியுண்டாயிற்று. புத்தன் முதலிய மற்றனேகருக்கும் இப்படியுபசாரம் நடந்ததாகச் சொல்லிக்கொள்ளுவதுண்டு.

பிறகு அவர் ஜாதிமுறைப்படி எழுத்தும், கணக்கும் கற்றாரென்றாலும், கல்வியிலாவது, காரியத்திலாவது சிரத்தையில்லாமல், 'யாரோ செத்தார், எவரோ அழுதார்,' என்றபடி, ஏதோ எண்ணமிட்டுக்கொண்டே யிருந்தார். ஆனால், இவருடைய ரூபத்தையும், சாந்த குணத்தையும், மனோதருமத்தையும் நன்குணர்ந்த மகம்மதீய சந்நியாசி, சையத்ஹுஸேன் என்பவர், இவரை அப்போதைப்போது வரவழைத்து மகம்மதீய மதக்கிரந்தமாகிய குரான், அதைச்சேர்ந்த வேறு சில கிரந்தங்கள், ஆகிய இவற்றை நன்றாகப் பாடம் சொல்லிவந்தாராம். அதனால் இவருக்குத் தெய்வ பக்தி யதிகரித்து அவ்வழியாக இந்து மகம்மதீய மதக்கிரந்தங்களில் அனேகம் இவருக்குப் பரிசயமாயிற்று. இவ்வாறு பலவருஷங்கள் கழிந்தன.

பின்னிட்டு விவாகசமயம் வந்தவுடன், 'கிளிமொழிச்சி' யெனப்பொருள்படும் பெண்ணொருத்தியை இவருக்கு விவாகம் செய்துவைத்தார்கள். அவளுக்குக் காலக்கிரமத்தில், லக்ஷ்மிதாஸ், ஸ்ரீசந்தன், என்னும் இரண்டு புத்திரருண்டானார்கள். இப்படி யில்லறம் கூடிப் பிள்ளைகள் பெற்றுச் சமுசார வாழ்க்கையிலிருந்தும் பழையபடியே வேலையின்பேரிலும், சம்பாத்திய விஷயத்திலும் திருஷ்டியில்லாமல் வீண்காலம் கழிப்பதைக்கண்டு, கடைசியாக அவர் தகப்பனுக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்து ஒருநாள் இவரைக்கண்டபடி பேசிக்கோபித்துக்கொண்டார். ஆனால் அப்படிச் செய்ததிலும் காரியமில்லாமற் போனதுடன், குமாரனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்ததால், காலு வென்பவர் மனைவியுடன் யோசித்து, நானகபாவாவைச் சுலுத்தான் பூரில் தண்டு சரபாயிவேலையிலிருந்த தன் மைத்துனன் ஜெயராமனிடம் அனுப்பினார். பாவாஜீயும் அவ்விடம்சென்று அலுவலிலமர்ந்து பகற்பொழுதில் உத்தியோக விஷயமாய் உழைத்துவிட்டு, ராத்திரிசாப்பாடான பிறகு அவ்வூரில்

அக்காலத்தில் பிரபலித்திருந்த பஜனை கோஷ்டியில் சேர்ந்து ஹரிநாமசங்கீர்த்தனம் செய்துவந்தார்.

இந்தப் பஜனைக்கூடத்தில் எல்லா ஜாதியாரும் சேருவதுண்டு. அதில் நாளதுவரை வெகுவாகத் தாழ்ந்தகுலமாகிய 'தோம்' (என்றால், தொம்பராக இருக்கலாமா?) என்னும் குலத்தவனாகிய மர்த்தனன் என்பவன் இவருக்குச் சங்கீதை ஜதையாகப் பின்பாட்டோ, தாளமோ வேண்டியபடி உதவிவந்தான். இவன் தான் இவருக்கு முதற் சிஷ்யன்.

இவ்வாறு கொஞ்சகாலம் கழிந்து வந்தது. அலுவலை ஜாக்கிரதையாய்ப் பார்த்துவந்ததால், பணமும் ஏதோ சுமாராகச் சேர்ந்து வந்தது. நானகபாவாவும் இனிக் கிரகஸ்தனாகிவிடுவான், என்று காலு எண்ணினர். ஜெயராமன் முதலியோரும் சந்தோஷப் பட்டுக்கொண்டு, பஜனைப்பைத்தியம் சற்று அதிகமென்று கண்டாலும், தரக்கேடில்லை யென்று கொண்டு, காலக்கிரமத்தில் எல்லாம் சரியாய்ப் போகுமென்றிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் நானகபாவா நதிக்குச் சென்று அனுஷ்டானத்தை யுத்தேசித்து ஸ்நானத்திற்காக நதியிலிறங்கியவருக்கு, ஏதோ சடுதியில் கால்தவறி விழுந்து, நீரில் முழுகி அப்போதே முடிவுவந்து விடும்போலாயிற்று. பிறகு ஏதோ தெய்வாதீனம், தப்பிக் கரையேறினர். ஏறினவுடன், 'அடடா இதென்ன வாழ்க்கை? அரைநொடியில் நமதுகாரியம் முடிவாயிருக்குமே, இதற்குத்தானா இவ்வளவு முயன்று, சமுசாரம், பெண்டுபிள்ளை, தனம், தான்னியம், வீடுவாசல்களைத் தேடுவது. சீ, இது கெட்டது. நாம் இனி இந்த முட்டாள்காரியங்களைவிட்டு, பத்துப்பெயருக்கு உபகாரமாக ஹரிநாமத்தை எங்கும் பரவச்செய்வோம். அதற்கு நமக்கிப்போது யோக்கியதை போதாமலிருப்பதால், பெரியோரிருக்குமிடங்களெல்லாம் யாத்திரைசெய்து, ரகசியங்களையறிந்து கொள்வோம்', என்று தீர்மானித்துப் பக்கிரியாகித் தனக்குள்ள தெல்லாம் ஏழைகளுக்குத் தருமஞ் செய்துவிட்டு யாத்திரை புறப்பட்டார்.

இப்படி யாத்திரை செய்ததில், இந்தியாமுழுதும் போனர் என்றும், இலங்கையிலும் போய்ப் பார்த்தார், என்றும் சீக்கர் சொல்வார்கள். தென்னிந்தியாவுக்கு அவர் வந்தது பொய்யோ, நிசமோ, அறியோம். மகாராஷ்டிரம்வரை வந்தது நிசம். பிறகு மெக்காவுக்கு யாத்திரைபோய் 'கஜீயாகி' வந்ததும் நிசம். இந்த யாத்திரையில் வெகுகாலம் கழிந்திருக்க வேண்டும். போனவிடங்களிலெல்லாம் இவர் பெருமை ஏதோ ஒரு விதமாக விளங்கி வந்தது.

ஓரிடத்தில் சாயங்காலம் பிராம்மணர் சந்தி கழித்துக் கையால் நீரை யள்ளி அர்க்கியம் விட்டுக்கொண்டிருந்தார்கள். பாவாவும் அவ்விடஞ் சென்று குனிந்து நீரை யள்ளி, அவர்களுக்கெதிர்முகமாக நின்று இறைத்துக்கொண்டிருந்தார். அவர்கள் அதிசயித்து, 'ஓய், நீரென்ன பைத்தியக்காரனுயிருக்கிறீர்? ஏனிப்படி நீரை அர்த்தமில்லாமல் இறைக்கிறீர்?' என, பாவா, 'ஓ பிராம்மணர்களே, 60-மைலுக்கப்பால், சுலுத்தான்பூரில் என்னுடைய தோட்டத்திலுள்ள மரங்களுக்காக இறைக்கிறேன். நீங்கள் ஏன் நீரைக் கையாலெடுத்து விடுகிறீர்கள்?' என்றார். அவர்கள் நகைத்து, 'ஓய், இதென்ன முட்டாள்தனம்? 60-மைலுக்கப்புறமுள்ள மரங்களுக்கு இந்த நீர் எப்படிப்போய்ப் பாயும்? நாங்கள் தேவதைகளுக்காக வேண்டிச்செய்கிறோம்,'' என்றார்கள். அதற்கு அவர், "ஓ முட்டாள்களே, நீங்கள் இறைக்கும் நீர் தேவலோகம்வரை போவது நிசமானல், என் மரங்களுக்கு நீர் பாய்வது

நிச்சயம்,' என்று சொல்லி நகைத்து, அதன் மேலவர்களுக்கு ஹரிபக்தியைப் புகட்டிப்போனாராம்.

மற்றொருநாள் ஒரு மசீதியில் ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருக்க, ஒருகாஜி நமாசு படித்துக்கொண்டிருக்கையில், எல்லோரும் மகம்மதீய சம்பிரதாயப்படி முழந்தாளிட்டுக் கண்ணை மூடிக்கொண்டிருக்க, இவர் மட்டும் காலை நீட்டி மரியாதையற்றிருந்தார். காஜி இவரைக்கூவி, இப்படிச் செய்தல் தகுமாவென, அவர் நகைத்து, உமது ஆசையும் நேசமும் உமது வீட்டில் இப்போது தான் குட்டி போட்டிருக்கும் குதிரையின் பேரிலும், குட்டி யெங்கே கிணற்றில் விழுந்து விடுமோ வென்று அதன் பேரிலுமிருக்க, நீர் பேசலும், பிதற்றலுமட்டும் இங்கே நடக்கிறது. இதற்கும் மரியாதை வேண்டுமோ வென, அதுவாஸ்தவமானதால் காஜி அதிசயித்து இவர் ஏதோ மகாபுருஷனென்று உபசரித்தனுப்பினாராம்.

மற்றொருமுறை பேபருக்கு முன் டில்லிச் சக்கிரவர்த்தியாயிருந்த இப்ராஹீம் லோதியின் யானைகளிலொன்று நடுத்தெருவில் வந்து கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் விழுந்து இறந்துவிட, அதன்பாகன் பட்டபரிதாபத்தைச் சகியாமல், அவ்வழிபோய்க் கொண்டிருந்த பாவா அதைத்தொட்டு எழுந்திருக்கும்படி சொல்ல, அப்படியே அதுவும் எழுந்து போயிற்றும். கண்டவரெல்லாம் இவரை வியந்து கொண்டாடினார்கள்.

'சங்தேயளி' என்னும் ஊரில் இவர் போகிய காலத்தில், அவ்வூரிலிருந்தவர்கள், தான தரும புத்தியே இல்லாதவராயிருந்தது கொண்டு, பாவா வெகுண்டு, "உங்களுக்கு விநாச காலம் சமீபித்துவிட்டது," என்று சொல்லிப் போக, அப்படியே சில வருஷங்களுக்கெல்லாம், பேபர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, இவ்வூரை முற்றுகையிட்டுப் பிடித்து நிர்மூலஞ் செய்துவிட்டார்.

மெக்காவுக்குப் போனதும் இவர் 'காபா' என்னும் பெரிய கோவிலுட்சென்று, அவ்விடத்திலுள்ள ஓர் தாழ்வாரத்தில், 'கெப்ளா' என்னும் புண்ணிய அறைக்கு நேராகக் காலை நீட்டிப் படுத்திருக்க, கோவிலதிகாரியாகிய காஜி ருக்குன்தீன் என்பவர், அவ்வழியாகப் போய், இவரைப்பார்த்துக் கோபித்து, "ஓ முட்டாளே, இப்படி அக்கிரமம் ஏன் செய்கிறாய், இந்தத் திக்கில் 'கெப்ளா' இருப்பது தெரிந்தும், காலை நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குகிறாயா? எருமைக்குள்ள புத்தியாகிலும் வேண்டாமா?" என, பாவாவும் படுத்திருந்த படியே காலையசைக்காமல், கண்ணையும் திறவாமல், 'ஓ புண்ணியாத்துமாவாகிய காஜியே, கோபிக்கவேண்டாம். தெரியாமல் செய்துவிட்டேன். 'கெப்ளா' இல்லாததிக்கில் என் காலைப்பிடித்து இழுத்தெறி,' எனக் காஜியும் வெகுண்டு, அவ்வாறே காலைப்பிடித்துச் சுற்றி வேறு முகமாக அவரை இழுத்தாராம். இழுக்கையில், எந்த முகமாக அவர் காலைக்கொண்டு போனாலும், அம்முகமாகவே கெப்ளாவும் சுற்றி வந்ததாம்! அதைக்கண்டு, ருக்கும்தீன் பயந்து, இவர் யாரோ பெரிய பக்தனென்றும், அல்லாவுக்கு வேண்டியவரென்றும், தெரிந்து கொண்டு சலாம்வைத்து உபசரித்து உபதேசம் பெற்றுப்போனாராம்.

இமாசலத்தில் சித்தர்களென்று ஒரு கூட்டம் பைராகிகள், செப்பிடுவித்தைகள் செய்து கொண்டு, சிலர் விசித்திர ஆசனங்களிட்டும், சிலர் பூமியைத்தொடாமல் கிருஷ்ணாஜினத்துடன் நாலுமுழ உயரத்தில் அந்தரத்திலிருந்தும், தங்கள் தங்கள் யோகசக்தியைக் காண்பிக்க, அதைப்பார்த்துப் பாவா நகைத்து, 'ஓ மூடர்களே, இதனால் உங்களுக்கென்ன சித்திக்கும்? செப்பிடுவித்தை வயிறு வளர்க்கக்

கூட உதவாதகாரியமாதலால், இதையெல்லாம் விட்டுக்கிரகஸ்த மார்க்கமாய் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து நற்கதியடையுங்கள்,' என்று சொல்லி அவர்களுக்கு ஜபம் செய்து கடைத்தேறுவதற்காக ஜபமந்திரம் ஒன்று பஞ்சாபிபாஷையில் கோர்த்துக் கொடுத்தாராம். அதுவே நாளதுவரை சிக்கருக்குள் ஜபத்திற்கு உபயோகமாகி வருகிறது.

இன்னும் பலவிடங்களில், சமுத்திரத்தைத் தாண்டிப்போயும், கூடவிருந்த மர்த்தனனுக்கு அன்னம் கிட்டாதவிடத்தில், அன்னம் வரவழைத்துப் பசியாற்றியும், எதிர்ப்பட்ட பக்கிரிகள், சன்னியாசிகளுடன் தர்க்கம் செய்து, அவர்களைப் பாகவதர்களாக்கியும் வந்து, கடைசியாகத் திரும்பித் தமது தேசத்தில் வந்ததும், தமது மதத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

இவர் உபதேசத்தில் முக்கிய அம்சம் இது :—"ஹிந்துவும் இல்லை, மகம்மதீயனுமில்லை. எல்லோரும் சற்குருவை வழிபட்டு, அவரைப் பூர்ணபக்தியுடன் நம்பி, உலகம் யாவையும் உளவாக்கிய பரம புருஷனை வணங்கித் துதித்து நற்கதியடையவேண்டும்" என்பதுதான்.

பக்கிரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் அக்காலத்தில் எங்குச் சென்றாலும் உபசாரம் நடக்கும். ஏனெனில் அக்காலத்திய மகம்மதீயரொருவர் இவ்வாறெழுதுகிறார் :—"கடவுளிடத்தில் பக்கிரிகளுக்குப் பக்தியதிகம். கடவுளும் பக்த பராதீனனாதலால், பக்கிரிகளுடைய வேண்டுகோளின்படியே அவர் நடக்கிறார். அவர்களுடைய பிரார்த்தனையை எப்போதும் அவர் கவனிக்கிறார். அவர்கள் மனத்தில் எண்ணியபடியெல்லாம் அவருடைய சங்கற்பமுமிருக்கிறது. ஏனெனில் பக்கிரிகள் எல்லோருக்கும் நிரபராதிகளான பந்துக்கள். அவர்களுக்கு ஆசை வெகு சொற்பம். யாரையும் அவர் வெறுப்பதில்லை. கடிந்துகொள்வதுமில்லை. அவர்கள் இந்திரியங்களை அடக்கி ஆளுபவர்கள். நாலுவருணத்திலும் யார் காஷாயம் பூண்டுகொள்ளுகிறார்களோ, அவர்கள் இந்துவாகிலும், மகம்மதீயராகிலும், கிரகஸ்தனாகிலும், திருடனாகிலும், தட்டுவாணியாகிலும், யாராகிலும் நமக்கு அவர்கள் பூர்வோத்தரத்தைக் கொண்டாகவேண்டியது ஒன்றுமில்லை. நமது வீடு தேடிவந்தால், வந்தவருக்கு மரியாதைசெய்து அனுப்புவதுதான் நமது கடமை" யென்று. ஆதலால் நானகபாவா போனவிடமெல்லாம் மரியாதைபெற்று, ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து, சிஷ்யர்களைச்சேர்த்து உபதேசம் செய்துவந்தார். ஆனால் தனிகர்கள் எக்காலத்திலும் கருவமதிகரித்தவராதலால், பாவாவை முதன்முதல் நம்பி வழிபட்டவர்கள் அனேகமாய் இந்துக்களிலும், மகம்மதீயரிலும், ஏழைகளாயுள்ளவர்களே. சேர்ந்தவர்களெல்லாருக்கும் பக்தி யதிகரித்துப் பஜனைசெய்வது பிரபலமாகி, ஸ்ரீ நானகபாவாவின் கீர்த்தனைகளும் எங்கும் பரவிவந்தன. 1538-ம் ௵வரை இது இடையறாது நடந்துவந்தது.

---

ஒருநாள் சாயரக்ஷை வேளையில் ஒரு கிழவி செத்துப்போனவளை எடுத்துக்கொண்டு ஊர்த்தெருவழியாகப் போனார்கள். அவள் மகன் நெருப்புச்சட்டியை வழக்கப்படி எருமுட்டைபோட்டுப் புகையப் புகையக் கொண்டுபோனான். காற்று எதிர்முகமாக வீசியதால், புகை அவன் முகத்திலடித்தது. அடிக்கவே அவன் கண்களை மூடிக்கொண்டும், பல்லை யிளித்துக்கொண்டும் போவதை அங்கு ஓர் வீட்டில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ஆறுவயதுப் பெண்குழந்தை அருகிலிருந்த தன் தகப்பனைப் பார்த்து, 'அப்பா, நெருப்புக் கொண்டுபோகிறவன் ஏன் சிரிக்கிறான்?' என்ன, தகப்பனும், 'அம்மா, அவனுக்குத் தாயார் போய்விட்டாள். இனி ஒருவருஷத்திற்கு அப்பம் வடைக்குக் குறைச்சலில்லை யென்று சிரிக்கிறான்,' என்றார்.

## தென்னிந்தியப் பிராணிவர்க்கம்

பூச்சிப்புலவர்

நாம் முந்தி யெழுதியபடி, தென்னிந்தியாவில் நம்முடன் வாசஞ்செய்யும் பிராணிவர்க்கங்களைக் குறித்து மொத்தத்திலும், நாட்டிலும் காட்டிலும் நாம் செய்துவருங் காரியங்களுக்கு அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ, இருந்துவரும் பிராணிவர்க்கங்களைக் குறித்து விசேஷித்தும், சொல்லவேண்டு மென்பது நமது அபிப்பிராயம். ஆனால் இப்படிச் சொல்லுவதற்கு எது சரியான ஆரம்பமென்பதை முதலில் நிச்சயிக்கவேண்டும். ஒரு கிரமும் இல்லாமல், இந்த மாசம் தேளைப்பற்றியும், அடுத்தமுறை சிங்கத்தைப்பற்றியும், பேசுவதில் பிரயோஜனம் சிறிதுமில்லையாதலால், இந்தப் பிரஸ்தாபத்திற்குச் சரியான ஆரம்பம் இன்னதென்பதை விசாரித்தறிதல் வேண்டும்.

இதுதான் சரியான மார்க்கம். ஏனெனில், குழந்தைகள் செய்வதைக் கவனித்தாலும் இப்படித்தான் அவர்கள் விஷயங்களை அறிந்து கொள்ளுகிறார்களென்று விளங்கும். ஒரு குழந்தை சாமான்னியத் 'தேள்' இன்னதென்பதையறிந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். ஏதோ சந்தர்ப்பத்தில் அது 'எருமைத்தேள்' அல்லது 'நண்டுவாய்க்கிளி' யைக்காண்கிறது. உடனே அது ஓடி வந்து, 'அம்மா, வந்துபார், ஏதோ ஒன்று தேளைப்போல் ஊர்ந்து போகிறது!' என்கிறது.

இப்படித்தான் பெரியவர்களும். ஏதாகிலும் ஒரு பூச்சியையோ, பக்ஷிமிருகாதிகளையோ முதன் முதற் கண்டால், 'இது என்ன வாயிருக்கலாம்? எந்தவர்க்கத்தில் சேர்ந்தது? என்று சங்கிப்பதும், ஒருகாயைக் கண்டால், இது "பச்சையாயிருக்கிறது, பாவற்காயுமல்ல; பக்கமெல்லாம் முள்ளிருக்கிறது, பலாக்காயுமல்ல; உள்ளே வெளுத்திருக்கிறது, தேங்காயுமல்ல; உருக்கினால் நெய்வடிகிறது, நெய்யுமல்ல," என்றிப்படிப் பலவிதமாகத் தர்க்கித்துக் கடைசியாக 'ஆமணக்கு' என்று நிஷ்கரிஷை செய்வதும்தான் நமக்கு சகஜம், அல்லவா? இப்படிப்போலவே எல்லா விஷயத்திலுமென்றறியவேண்டும்!

பிராணிகளைக் காணுந்தோறும் இப்படியே பல நாட்டிலும் ஜனங்கள் சுவபாவமாகத்தொகுத்தும், பகுத்தும் வந்திருப்பதனால், பக்ஷி, மிருகம், மீன், பூச்சி, புழு என்று சாமான்னிய வர்க்கங்களும், 'ஜராயுஜம்' முதலிய சாஸ்திர சம்மதமான வர்க்கங்களும் நமக்குள் வெகு காலமாக ஏற்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு பகுத்து அறிவதனால்தான் நமக்கு அறிவு சுலபத்தில் விசாலமாகிறது. சேனையென்றிருந்தால், அதை ரதம், கஜம், துரகம், பதாதியெனப்பகுத்தும், வீரர்களைப் படையாட்களென்றும், அதிரதர், மகாரதர் என்றும், 'சேனை முதலியார்' என்றும், உபசேனாதிபதிகள், என்றும் எப்படி வகுத்து அவ்வவற்றின் போக்கை அறிகிறோமோ, அதுபோலவே, மிருகங்களையும் வகுத்துத் தாரதம்மிய மறிந்து பேசுவது நல்லது. ஆனால் இதுசுலபமன்று. பழையகாலத்தில் பிராணிகளைப் பரீக்ஷித்த புத்திமான்கள், ஏதோ மேல்பூச்சாகப் பார்த்து, இதைப் பசுவர்க்கத்திலும், அதைப் பக்ஷிவர்க்கத்திலும் சேர்த்துவிட்டார்கள். அப்படிச் செய்ததில் சாஸ்திரத்திற்கு அது ஒத்துவராமல், பலவிதமான தப்பெண்ணத்திற்கும், தப்புப் பேச்சுக்கும் இடமுண்டாயிற்று. வெளுத்ததெல்லாம் பாலென்பது மதியீனமல்லவா?

இப்படி யேற்பட்ட தப்புப் பகுப்புகளினால் அனேக உபத்திரவங்களுண்டாகவே, பலகாலம் சிரமப்பட்டுக் கடைசியாகச் சமீபத்தில் வித்துவான்கள் சரியான பகுப்பு லக்ஷணங்களை யேற்படுத்தினார்கள். ஆகவே, முன் நடந்தபடி


மேல்வடிவத்தையாவது, சிலங்களையாவது லக்ஷியம்வைத்துப் பகுப்பது தப்பென்றும், பிராணிகளுடைய தேகங்களுக்கு மூலாதாரமாயுள்ள எலும்புக்கூடு முதலியவற்றை லக்ஷியம்வைத்தே அவற்றைப் பகுக்கவேண்டு மென்றும் விதியேற்பட்டு நடந்துவருகிறது.

ஒரு உதாரணம் இதை நன்கு விளக்கும். ‘திமிங்கலம்’ என்னும் பெரிய நீர் வாழும் பிராணியை மச்சவர்க்கத்திலேயே வெகு காலமாகச் சேர்த்துப் பேசி வந்தோம். நம்மவர்களுள் இன்னும் அதற்கு ‘மகாமச்சம்’ என்றே பெயர் வழங்குகிறது. இதற்கென்ன காரணமென்று விசாரிக்குமிடத்து ரகசியம் வெளியாகிறது. ‘அதுவும் நீரிலேயே வாழ்கிறது. மீனுக்குள்ள லக்ஷணங்களெல்லாம் அதற்கும் இருக்கிறது,’ என்று வாய்ச்சுளுவாகப் பேச்சுப் புறப்படுகிறது.

ஆனால் காலக்கிரமத்தில் இந்த ஜந்துவின் பிறப்பு, உயிர்வாழ்க்கை முதலிய வற்றைக் கவனித்ததில், மீன்களைப்போல் எப்போதும் இது நீருக்குள்ளிருந்தே வாழ்வதில்லையென்றும், மீன்களைப்போல் முட்டையிடுவதில்லை யென்றும், ஆடுமாடுகளைப் போல குட்டிபோட்டு அவற்றிற்கு முலை கொடுத்து வளர்க்கிறதென்றும் வெளியாயிற்று. ஆதலால் இனி அதை ‘மச்சம்’ என்பது பிசகு. எலும்புக்கூட்டைப் பரிசோதித்தாலும் மச்சங்களுக்கும் ‘மகா மச்சத்திற்கும்’ உள்ள வேற்றுமை வெளியாகும். இப்படி இன்ன இனத்திற்குச் சேர்ந்ததென்பதையே முதலில் நிஷ்கரிஷை செய்துகொள்ளாமல் பிராணி வர்க்கங்களையெடுத்துப் பேசுவது உபயோகமற்றதென்று இப்போது நன்கு விளங்கும்.

மொத்தத்தில் பிராணிப் பிரபஞ்சத்தைக் குறித்துப் பேசுவோமானால், பிராணிகளெல்லாம் இருவகைப்படு மென்னலாம். அவையாவன, முதுகெலும்பு கூடியன, அது கூடாதன வென்பனவேயாம்.

இப்படி யிருப்பதனால் இனி நாம் ஏதோகிரமத்தில் ஆரம்பிக்கலாம். ‘ஜந்துக்களுக்குள் நர ஜன்மம்’ என்கிற நியாயத்தை யனுசரித்து உத்தம பக்ஷத்தையோ, அல்லது கீழிருந்து படிப்படியாக ஏறியோ வரலாம். அனேகமாய் மனிதனைப் பிராணியென்றும், ஜந்துவென்றும் சொல்லுவது இகழ்ச்சியேயாதலால், மனிதனொழிய மற்றுள்ள ஜந்துக்களைத்தான் நாம் விசாரிக்கவேண்டிய அவசரம். ஆகவே அடுத்தமுறை ‘விசாரிப்பு’க் கிரமத்தை யின்னதென்று விளக்கி, ‘விசாரத்தையும்’ ஆரம்பஞ் செய்கிறோம்.



## ககோளதத்துவம்—பாலபாடம்

ஸ்ரீமதி ஆர். எஸ். சுப்பலக்ஷிமி அம்மாள்

### 2-ம் அத்தியாயம்

### பூமி சுழல்வது

சென்ற மார்கழி மாதத்து சஞ்சிகையில் சொல்லிவந்த எட்டு சாட்சியங் களினாலும் இந்தப் பூமியானது உருண்டை யாயிருக்கிற தென்பது தெளிவாகும். ஆனால் அது முற்றிலும் பந்துபோல் இல்லாமல் மணிலாக் கிச்சிலிப்பழம் போல மேலும் கீழும் அமுங்கி வயிறு பெருத்து இருக்கிறது. அதாவது ஒரு ரப்பர்பந்தை நமது உள்ளங்கையில் வைத்து மற்றொரு உள்ளங்கையினால் அமுக்கினால் அது எப்படி ஆகுமோ அது போன்ற உருவமுள்ளது. இதற்குக் காரணம், ஒரு காலத்தில் இந்தப் பூமியானது நிலம், நீர், வாயுவென்கிற ரூப பேதமில்லாமல் உருகின கற்குழம்பாக இருந்ததாகவும், அது தன்னையே தான் பம்பரம்போல் சுற்றிக்கொள்வதனால், குயவன் திகிரிமேல் பந்துபோல் திரட்டிய ஒரு ஈரமான மண் மொத்தையை வைத்துச் சுழற்றினால், அது எப்படித்தலை அமுங்கி உடல் ஒரு சுற்றுப் பெருத்துக்கொள்ளுமோ, அதுபோல இந்த உருவத்தை யடைந்ததாகவும், பிறகு மேற்புறம் குளிர்ந்ததனால் நிலம், நீர், வாயுக்கள் உண்டானதாகவும் ஊகிக்கப்படுகிறது.

ஆகவே பூமியானது ஒரேவிதமாய்ச் சுழல்கிறதென்பது ஏற்படுகிறது. கிச்சிலிப்பழத்தை எடுத்து, ஒரு நீள ஊசியை அதன் காம்பினிடம் சொருகி, காம்பிற்கு எதிர்ப்புறமாகிய நுனி வழியாய் அதை வெளிவரும்படி செய்து, ஊசியைப் பிடித்துக்கொண்டு திருகினால் பழம் எப்படிச் சுற்றுமோ அதுபோலவே, ஊசியைப்போன்ற ஒரு இருசு பூமிக்கு வாஸ்தவத்தில் இல்லாவிட்டாலும், இருந்தால் எப்படியோ, அப்படியே பூமியும் சுழல்கிறது. இருசின் இரண்டு முனைகளும் உத்தர முனையென்றும் தக்ஷிண முனையென்றும் சொல்லப்படும். இந்த இரண்டு முனைகளிலிருந்தும் சம தூரத்தில் பூமியைச் சுற்றி ஒருகோடு வரைந்தால், எலுமிச்சம் பழத்தை இருதுண்டாக்கிப் பிறகுசேர்க்கும்போது வெட்டுவாயில் எப்படிப் பழத்தைச் சுற்றி ஒருகோடு போலிருக்குமோ அப்படி யிருக்குமல்லவா? அப்படிப்பட்ட பூமியின் கோட்டிற்கு ஈக்வேடர் என்று பெயர். இருசின் நீளம் $7899\frac{1}{2}$-மைல் என்றும் ஈக்வேடரின் குறுக்களவு $7926\frac{1}{2}$-மைலென்றும் கணிதமூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பூமியின் குறுக்கு அளவைவிட இருசு 27-மைல் குறைந்தது. ஆனால் இப்படி 27 மைல் குறைந்திருப்பதனால் பூமியானது கிச்சிலிப்பழம்போல் அவ்வளவு தலை அமுங்கினதாய்க் காணுவதில்லை. 8-அடி குறுக்களவுள்ள ஒரு பந்தின் மேலுங் கீழுமாய்ச் சேர்த்துக் காலே வீசம் அங்குலம் கனம் எடுத்துவிட்டால் அந்தப்பந்தின் உருவம் எப்படியாகுமோ அப்படியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் மொத்தத்திற்குப் பூமியானது சுமார் 8000 மைல் குறுக்களவுள்ள ஒரு பெரிய பந்துபோன்றது என்று சொல்லிவிடலாம். ஈக்வேடர் வழியாய் ஒரு ரோட் போடப்பட்டிருந்தால் மணிக்கு 3-மைல் ஓயாமல் நடக்கும் மனிதன் பூமியைச் சுற்றிவர ஒரு வருஷத்திற்கு மேலாகும்.

சூரியன் அஸ்தமித்ததும் நட்சத்திரங்கள் உதயமாவதையும், பிறகு கிரமமாக உச்சமாய், மறுபடி அஸ்தமனமாவதையும் கவனித்துப் பார்ப்போம். வடக்குமுதல் கிழக்கு வழியாய்த் தெற்குவரையில் உள்ள வெளியை கிழக்கு என்றும், தெற்குமுதல் மேற்குவழியாய் வடக்குவரையில் உள்ள வெளியை மேற்கு என்றும் வைத்துக்கொள்வோம். வடக்கில் பூமியும் வானமும் சேருமிடத்திற்குக் கொஞ்சம் மேலாக, அதாவது தலையைச் சற்று நிமிர்ந்து பார்க்கும்படியான உயரத்தில் துருவ

னென்னும் நக்ஷத்திரம் காணப்படும். அது அதிக பிரகாசமானதல்ல. தெரிந்தவர்களைக் கேட்டுக் காட்டச்சொல்லி இதை அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கப்புறம் சப்தரிஷிகள் என்னும் பிரகாசமுள்ள ஏழு நக்ஷத்திரங்கள் கூடிய ஒரு கூட்டமும் இருப்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் கூட்டத்தின் தலைப்புறம் முனை இரண்டு நக்ஷத்திரங்களையும் சேர்த்து ஒரு கோடுகிழித்தால் அந்தக்கோடு துருவ நக்ஷத்திரத்திற்கு வெகு சமீபத்தில் போகும். துருவனை இந்த மாதிரியாகத் தெரிந்துகொள்வது வெகு சுலபம். இதற்காகவே அந்த இரண்டு நக்ஷத்திரங்களுக்கும் துருவதரிசிகள் (துருவனைக் காட்டுகிறவை) என்றுபெயர்.

இரவில் எப்பொழுது எழுந்துவந்து பார்த்தாலும் துருவன் அனேகமாய் ஒரே நிலையிலிருக்கும். மற்ற நக்ஷத்திரங்கள் துருவனை மையமாய் வைத்துக்கொண்டு எப்பொழுதும் அதற்கு ஒரே தூரத்திலிருந்து கிழக்கில் பலவிடங்களில் உதயமாகிப் பிறகு அதற்குச் சரியாய் மேற்கில் அஸ்தமிக்கின்றதைக் காணலாம். வடகிழக்கில் உதயமாகிறவை சாய்வாய்க் கிளம்பி உச்சமாகும் சமயத்தில் கிழக்கு மேற்காய்ச் சென்று வடமேற்கில் சாய்வாய் அஸ்தமிக்கின்றன. கிழக்கில் உதயமாகிறவை கூடியமட்டும் கிழக்கு மேற்காகவே நகர்ந்து மேற்கில் அஸ்தமிக்கின்றன. துருவனைக் காட்டும்படியாய்ச் சாய்வாக ஒரு கொம்பைப் பூமியில் நட்டு அந்தக் கொம்பிலிருந்து ஒவ்வொரு நக்ஷத்திரங்களின் தூரங்களையும் அவைகளின் உதயமுதல் அஸ்தமனம் வரையில் கவனித்துக்கொண்டிருந்தால் இதனுண்மை தெளிவாகும். இதனால் ஒரு பெரிய ஓட்டின் உட்புறத்தில் நக்ஷத்திரங்கள் பதிக்கப்பட்டு அந்த ஓடு போன்ற அண்டத்தைத் துருவன் வழியாய் நுழைத்து ஒரு இருசைப் பிடித்துத் திருகினால் எப்படி அந்த ஓடுபுரளுமோ, அம்மாதிரியே நக்ஷத்திரங்கள் நகருவதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு நக்ஷத்திரத்திலிருந்து மற்றொன்றின் தூரம் ஒருக்காலும் வித்தியாசப்படுகிறதில்லை, ஆனால் நக்ஷத்திரங்கள் போலிருக்கும் கிரகங்களை இங்கு கவனிக்கக்கூடாது. துருவன் வழியாய் நுழையும் இருசு தெற்கில் அதற்கு எதிரில் நுழையுமிடம் நமக்குக்காணாது. ஏனெனில் எப்படி துருவனை நிமிர்ந்து பார்க்கவேண்டிவருகிறதோ அதுபோல் அதற்கு நேரெதிரிருப்பதை நாம் குனிந்து பார்க்கவேண்டி வருகிற நியாயத்தால், அது நமது கண்ணிற்குத் தெரியாதென்று அறிந்துகொள்ளவும்.

நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் பிரம்மாண்டமான வைகளென்றும், கணக்கிலடங்காத தூரங்க ளிருக்கின்றன வென்றும் முந்திச் சொன்னோம். ஆதலால் இவைகள் உதயமாவது, அஸ்தமனமாவது, என்றால், ஒன்று, இப்படிப்பட்ட நக்ஷத்திரங்கள் பூமியைச் சுற்றிவரவேணும். அல்லது இந்தப்பூமி தன்னையே தான் நாளுக் கொருதரம் சுற்றிக்கொள்ளவேணும். இவ்விரண்டில் எது சாத்தியமென்பதை யோசிப்போமானால் பூமியே தன்னிருசில் சுழலவேண்டியதென்றும், அந்த இருசின் உத்தரமுனைக்கு நேராக துருவனிருக்க வேணுமென்றும் புலப்படும். பூமியானது கிழக்குமுகமாய்ச் சுழல்வதால், நக்ஷத்திரங்கள் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி நகருவதுபோல் தோற்ற முண்டாகிறது. ஆனால் பூமிதான் சுழல்கிறது என்பதை நம்புவது வெகு கஷ்டமானதுதான். நாம் ரயில்பிரயாணம் செய்யும்பொழுது ரயில் மேற்கு நோக்கி ஓடினால், பக்கத்திலுள்ள செடிகள், மரங்கள் முதலியன கிழக்கு நோக்கி ஓடுவதுபோல் தோற்றமுண்டாகிற தல்லவா? சில சமயங்களில் பக்கத்துத் தாண்டவாளங்களில் ஒரு

வண்டித்தொடர் நகர்ந்தால், நாமிருக்கும் தொடர் நகருகிறதா அல்லது மற்றது நகருகிறதாவென்று வேறு ஆதாரமில்லாமல் சொல்லவே முடியாது. கப்பலிலாவது படகிலாவது போகும்பொழுது ரயிலிலுள்ள சப்தமும் குலுக்கலும் இல்லாததால், இம்மாதிரித் தோற்றங்களை விசேஷமாய்க் காணலாம். நாமிருக்கும் படகு ஓடுகையில் நிற்கும் மற்றொன்று ஓடுவதுபோலவே தோன்றும். கப்பலின் உட்புறம் இருக்கிறவனுக்குக் கப்பல் ஓடுகிறதா நிற்கிறதாவென்று சொல்லமுடியாது.

நமது பூமியானது குலுங்காமலும் சப்திக்காமலும் சுழல்வதானல், அது நமக்குத் தெரியாமலிருப்பது ஆச்சரியமல்லவா? அப்படிச்சுழல்வதால் பூமியின் சுற்றளவு சுமார் 25000-மைலாகவே, நாமிருக்குமிடம் ஒருமணிக்குள் 1000-மைலுக்குமேல் ஓடவேண்டும். அப்படி ஓடும்பொழுது, போர்வைபோல் பூமியைச் சுற்றி வியாபித்துக்கொண்டிருக்கும் வாயுவைவிட்டுப் பூமி மாத்திரம் சுழல்வதனல், ஒரு மணிக்கு 1000-மைல் ஓடக்கூடிய ஒரு பேய்க் காற்று ஆரம்பித்து, அது நம்மையெல்லாம் வாரிக் கொண்டுபோய் எங்கேயோ எறிந்துவிடும். ஒரு கல்லை மேலே எறிந்தால் அது கீழே விழ ஒரு நிமிஷமானலும் அதற்குள் பூமி கால் மைலுக்குமேல் ஓடிவிடுமாகையால் எறியப்பட்ட கல் கால் மைல் மேற்கிலல்லவோ விழவேண்டும். அப்படி விழுவதில்லையே. ஆதலால் பூமியோடு வாயுவும் கூடவே சுழல்வது நிச்சயம். ஓடுகிற ரயிலுக்குள்ளிருக்கும் வாயுவுமல்லவா ரயிலோடு ஓடுகிறது. இல்லாவிட்டால் ஓடுகிற ரயிலுக்குள் உட்கார்ந்து அம்மானையாட முடியுமா? அல்லது ஒருவன்மேலிருக்கும் ஈயானது அவனைவிட்டுச் சாவகாசமாய்ப் பறந்து மற்றொருவன்மேல் வந்துட்கார முடியுமா? அதே ஈயானது ரயிலை விட்டு வெளியில் வந்துவிட்டால் ரயிலுடன் ஓடமுடியாது. பின் தங்கிவிடும்.

ஏதேனும் ஓர் வஸ்து வேகமாயோடினல், அதன்மேலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் அந்த ஓட்டம் வந்துவிடுகின்றது. வேகமாய் ஓடுகிற ரயிலினுள்ளிருந்து ஒரு பழத்தோலையோ, வேறெதையோ நாம் வெளியே எறிந்தால், அது கொஞ்சதூரம் ரயிலோடும் மார்க்கம்போய்த்தான் பிறகு கீழேவிழும்.

பூமி சுழல்வதானலும் அதை நாமுணராமலிருப்பது சாத்தியமென்பதை நாம் இதுவரையில் விளக்கினேம். நிஜமாய்ச் சுழல்கிறதென்பதற்குச் சாக்ஷியங்களுண்டா வென்பதை இனி விசாரிப்போம்.

1. சூரியனைச் சுற்றிவரும் மற்ற கிரகங்கள் எல்லாம் சுழல்கின்றனவாதலால், இந்தப் பூமியாகிய கிரகமும் சுழலுகிறதென்று ஊகிக்க வேண்டும்

2. ஒரு செங்குத்தான கோபுரத்தின்மேலிருந்து ஒரு கனத்த கல்லைக் கீழே போட்டால், அது விழவேண்டிய நேருக்குக் கொஞ்சம் கிழக்காய் விழுகிறது. இதை வேண்டுவோர் பரிசோதித்துப் பார்க்கலாம். ஒரு வண்டிச் சக்கரம் சுழலும்பொழுது, அதன் கும்பத்தினருகிலிருக்கும் நீர்த்துளியை விட வட்டையினருகிலிருக்கும் நீர்த்துளிக்கு ஓட்டமதிகமாகையால், அது பறந்துபோவதைப் பார்த்திருக்கிறோம். அதுபோலவே பூமி சுழல்வதானல் கோபுரத்தின் அடியைவிட தலைக்கு அதிக வேகமிருக்கவேண்டும். கிழக்கு முகமாக அதிக வேகத்தை அடைந்திருக்கும் ஒரு கல் கீழே விழும்பொழுது பின்னும் கிழக்கில் விழுவது நியாயம்.

3. எல்லா சாக்ஷியங்களையும்விட பின் சொல்லப்போவது சருவ சிலாக்கியமானது. அதை நன்றாய்ப்பார்க்க வேணுமானல் பூமியின் உத்தரமுனைக்குப் போகவேண்டும். நாமெல்லாரும் அங்கு இருப்பதாக நினைத்துக் கொள்வோம். துருவநக்ஷத்திரம்போல உத்தரமுனை அசைவற்றது அந்த முனைக்கு எழு

அடி தூரத்திலிருக்கும் ஒருவஸ்து, 243-மணியில் 22-அடி தான் ஓடும். ஈக்வேடரிலிருப்பதோ அதேகாலத்தில் 25000-மைல் ஓடுமென்று மேலே நாம் விளக்கியிருக்கிறோம். உற்சவகாலத்தில் ஜனங்களை உட்காரவைத்துச் சுற்றும் ஒரு ராட்டணத்தின் மேலிருக்கும் இரண்டு பொம்மைகள் மெள்ளச் சுழல்வதையும், உள்ளே தொட்டில்களிலிருப்பவர்கள் அதைவிடக் கொஞ்சம் வேகமாய்ச் சுழல்வதையும் குதிரைகளிலிருப்பவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் பறப்பதையும் நாம் யோசித்துப்பார்த்தால் இது வெகு நன்ருய் விளங்கும். அந்த இடத்தில் இரண்டு கொம்புகளை நட்டுக் குறுக்காக மேலே ஒருகொம்பைக்கட்டி அதன்நடுவில் ஒரு தூக்குக் குண்டைக்கட்டித் தொங்கவிட்டு, ஒரு கொம்பினிடமிருந்து மற்றென்றினிடம் போகும்படியாய் அதை இழுத்துவிடுவதாய் நினைத்துக்கொள்வோம். இப்படியாடும் தூக்குக் குண்டுக்குப் பெண்டுலம் என்று பெயர். ஒரு சன்னமான கயிற்றின் நுனியில் பந்துபோன்ற இரும்பு குண்டு ஒன்றைக்கட்டித் தொங்கவிட்டு அதை ஆட்டிவிட்டால் ஒருமணிக்குக் குறையாமல் ஆடிக்கொண்டிருக்கும். நட்ட கொம்புகள் தெற்கு வடக்கா யிருப்பதாக நினைத்துக்கொள்வோம். ஆனல் உத்தரமுனையிலிருந்து பார்த்தால் எப்படிப் பார்த்தாலும் தெற்குத்தான். ஆறுமணிகாலம் அந்தப் பெண்டுலம் ஆடிக்கொண்டே யிருந்தால் தெற்கு வடக்காய் ஆட்டிவிடப்பட்டது கொஞ்சங் கொஞ்சமாய்த் திசை மாறி ஆறுமணி முடிவில் மேற்கு கிழக்காயாடும்!

இதன் காரணம் பூமி சுழல்வதால் நம்முடைய தெற்கு வடக்கானது நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண் டிருக்கிறது. அதனல் தெற்கு வடக்காய்க் காணப்பட்ட கொம்புகள் 6-மணிக்கெல்லாம் தெற்கு வடக்கு மாறிவிடுகிறது. பெண்டுலமோ பழையபடியே ஆடிக்கொண்டிருக்கிறது. இந்தப் பரிக்ஷையை நாமிருக்குமிடத்திலும் செய்து பார்க்கலாம். நாமிருக்கும் அறையின் கீழண்டைச்சுவரில் ஒரு ஆணி அடித்து அதில் சுமார் ஆறு அடி நீளமுள்ள ஒரு பெண்டுலத்தை, ஆட்டும்பொழுது சுவற்றில்படாமலிருக்கும்படியான தூரத்தில் கட்டி ஜாக்கிரதையாய் ஆட்டிவிடுவோம். சுமார் கால்மணிநேரம் பார்த்துக்கொண்டிருந்தால், சுவற்றிலிருந்து சமதூரத்தில் ஆட ஆரம்பித்த பெண்டுலமானது, வடபுறம் சுவற்றை நெருங்கிக்கொண்டும், தென்புறம் சுவற்றிலிருந்து விலகிக்கொண்டும் வந்து கடைசியில் வடபுறம் போகும் போது சுவற்றில் மோதும். ஆதலால் இந்தக்ஷணத்தில் நாம் தெற்கு வடக்கு என்று சொல்லும் திக்கானது ஆறு மணிக்குப் பிறகு பூமியில் கால்பகுதி சுழன்று மேற்கு கிழக்காய்விடுகிறது. அதாவது ஆறுமணிக்கெல்லாம் நாம் கிழக்கேபோய் முந்திய வடக்கைக் கிழக்கென்கிறோம். பூமிக்குச் சம்பந்தப்படாமல் அதற்கு வெளியில் ஒருவன் நிற்கக்கூடுமானல், முதலில் நாம் பெண்டுலத்தைத் தெற்கு வடக்காயாட்டி விடுவதையும், அது அந்தத் திக்கிலேயே சத்தியமாயாட நாம் கிழக்காய்ப் பெண்டுலம் கோணுகிற தென்று விழிப்பதையும் பார்க்கலாம். பெண்டுலம் கட்டப்பட்டிருக்கும் ஆணியும்கூட 6-மணியில் காலவரிசை சுழலவில்லையோ வென்றல், அதனல் பெண்டுலத்தின் திக்கு மாருது. ஏனென்றல் பெண்டுலத்தின் கயிற்றை இருவிரல்களில் பிடித்திறுக்கிப் பார்த்தாலும் அது திக்கு மாருது. இதனுண்மையைப் பின்வருமாறு செய்துபார்க்கலாம். ஒரு பலகையில் இரண்டு துவாரங்கள் செய்து, அல்லது எப்படியாவது இரண்டு சிறு கொம்புகளை நட்டு அந்தக் கொம்புகளின் முனைகளை வேறொரு கொம்பு சேர்த்துக்கட்டி, அந்தக் குறுக்குக்கொம்பின் மத்தியில் ஒரு பெண்டுலத்தைக்கட்டிக் கொம்புக்குக் கொம்பு ஆடும்படியாய் ஆட்டிவிடுவோம். அது ஆடிக்கொண்டிருக்கும்பொழுதே மெதுவாய்ப் பலகையை ஒருதிக்கு (அதாவது முழுச் சுழலிற் காற்பங்கு) சுழற்றினல் கொம்புக்குக் கொம்பு ஆடிக்கொண்டிருந்த பெண்டுலம் குறுக்காக ஆடும். எந்த விஷயத்தையும் கண்ணல் பார்த்தால், நம்பலாமாகையால் இந்தப் பெண்டுல நியாயத்தை எல்லாரும் செய்துபார்த்துப் பூமியானது கிழக்கு முகமாய் மேற்குறித்தபடி வேகத்துடன் சுழல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுதல் சாத்தியம்.

(இன்னும் வரும்).




ராட்டண தூலி

# புஸ்தக விமர்சனம்

தெய்வபக்தி விவேக விளக்கம்.—ஸ்ரீமான்-தங் கக்காசிம் சாகிபு அவர்களாலியற்றப்பட்டது. சுதே சாபிமானி அச்சுக்கூடம், சேலம்.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்கனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். பல தேசங்களிலும், பல காலங்களிலும் விவேகிகள் மதவிஷயமாயும், ஆசார விஷயமாயும், சொல்லிவந்திருக்கும் அரிய ரகசியங் களை இவ்வளவு மட்டில் சுருக்கி யெழுதியது அற்புதமே. எழுதியவர் மசம்மதீயராகிலும், இதரவகுப்பினருடைய மதம், ஆசாரமுதலியவற்றைச் சமரசமாகப் பாவித்தது வெகுதூரம் மெச்சத்தக்கது. தமிழ்நடை வெகுதிறம். வெகுசாய்ச் செய்யுளானுலும், பழைய சதகங்கள் போன்று, யாரும் பொருள் எளிதிலுணருமாறு, அரும்பதங்களை யொழித்து, நடை ஆற்றொழுக்காகவே போயிருக்கிறது. இக்காலத்தில் பள்ளியில் கொஞ்சம் கற்றவருக்குள்ள துரபிமானங்களையும், அதற்குப் பரிகாரமாக விவேகிகளுடைய கோட்பாடுகளையும், நன்கு விளக்கியிருப்பதால், ஐஸ்கூல் பிள்ளைகள் இதையும், இனிவரும் இரண்டாம் பாகத்தையும் படித்துத் தமிழ் வசன நடையை அப்பியசித்துக்கொள்ள நல்ல துணைக்கருவியாக இதைக் கொள்ளலாம். நூலாசிரியர்மட்டும் 'பிதாகோராஸ்,' 'புத்தன்,' முதலியோரைப்பற்றிப் பேசுவதில் ஏகவசனத்தை யொழித்துவிடுவது நலமென்பது நமது கோட்பாடு. எச்சாதியாராகிலும், 'சீரியரை' மரியாதை வைத்துப் பேசுதல் நன்றெ௷ நமக்குக் காணும்.

2. ஞானரதம்.—ஸ்ரீமான்-வி. சுப்பிரமணிய பாரதி அவர்களாலியற்றியது.

பாரதியார் தமிழ்ப்பத்திரிகை படிப்பவருக்கு நன்ருய்த் தெரிந்தவராகவே, அவரைக்குறித்து நாம் ஏதும் எழுதவேண்டியதாகக் காணவில்லை. இச்சிறு புஸ்தகம் இங்கிலீஷ் சம்பிரதாயத்தில் 'கனவு' என்று பொருள்படும் ஒருமுறையை அனுசரித்தெழுதியதாகக் காணுகிறது.

முக்கியக்கருத்து, இக்காலத்தில் நமது தேசத்திற்கு வந்திருக்கும் துர்த்தசையையும், நமது நாட்டிலுள்ள ஸ்ரீமான்களுடைய சில துர்லக்ஷணங்களையும் விளக்கிப் படிப்பவர் தாமாகவே பரிகாரம் தேடிக்கொள்ளும்படி விட்டதாகவும் காணுகிறது, கனவாதலால் அதற்கு இதுதான் போக்கு, என்கிற நியமமில்லையாயிற்று. சிருங்கார ரஸமாகக் கந்தருவ லோகமும், கந்தருவ யுவதியும், வந்து சேருகிறார்கள். வேறு ரஸங்களும் காணுகின்றன. சாஸ்திரம், அனுபவம், சுருதி, யுக்தி, சிரிப்பு, அழுகை, எல்லாம் சேர்ந்து, 'ராஜஸமான' நடையில் எழுதியிருப்பதால் படிக்க வெகு காரசாரமாகவேயிருக்கிறது. பாரதியாரவர்கள் உட்கருத்தை யறிவது எல்லோருக்கும் எளிதன்ருயினும் ருசியுடன் படிப்பது யாராலும் ஆகக்கூடிய காரியமேயாம்.

### பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்.—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, ரஞ்சித போதினி.

மாதம் இருமுறை பதிப்புகள்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்.—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யபாஸ்கரன்.

வாரம் இருமுறைப் பதிப்புகள்.—மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

'சாரதா' என்னும் மாதாந்தர மலையாளப் பத்திரிகையை நடத்திவரும் ஸ்ரீமதி-கல்யாணி அம்மாள், இங்கிலாந்தில் 'ராயல் ஆசியா சொஸைட்டி'க்கு மெம்பராகியிருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். இந்த அம்மாள் குழந்தைகளுக்காகச் சிறு புஸ்தகங்கள் அனேகம் எழுதியிருப்பதுடன், 'மகாராணிவிக்டோரியா'வின் ஜீவன சரிதமொன்று வெகு நேர்த்தியாக எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறே தமிழுக்கும் நல்ல தசை யுண்டாகவேண்டுமென்பது நமது கோரிக்கை. ஆண்மக்கள் வல்லினமாதலால், 'மெல்லினமாக' எழுதிக் குழந்தைகளுக்கும், சாமான்னியருக்கும் ருசியுண்டாக்குவது தாய்மாருக்கே சிறந்துள்ள சாமர்த்தியம். 'தாய்ப்பாஷை' யன்ருே நாம் காரிய விஷயத்திலெல்லாம் பேசுவது. தமிழ்கற்றவர்களில் இரண்டொரு 'ஸ்ரீமதிகள்' வல்லினமாகப் பேசுவதையும், எழுதுவதையும் நாம் கேட்டும்,

பார்த்திருக்கிறோமென்பது மெய்யே. என்றாலும் மொத்தத்தில் நாம் சொல்வது நிசம். நெறிதப்பும் இரண்டொருவரும் தெரியாத்தனத்தினாலேயே அங்கனம் செய்கிறார்களல்லது, வேண்டுமென்றல்ல.

"வாஸ்தவத்தில் இந்தியா ஈசுவரனுக்குச் சர்வசிரேஷ்டமான உடைமை. ஈசுவரன் விசேஷித்துப்பிரசன்னராயிருக்கும் இடம். அதினின்றும் விக்ஞான பானு மறைவதேயில்லை," என்று 'தீயாஸபி இந்தியாவில்' கூறுகிறது. நமக்கும் இம்மாதிரிச் சொல்லிக் கொள்ளுவதில் சந்தோஷம் தான். ஆனால் பிரத்தியக்ஷமாக நடக்கும் காரியங்கள் அனேகங்களைப் பார்க்கும்போதும், அவைகளைப்பற்றிச் சிந்திக்கும் போதும், நமக்குப் பலவாறு சந்தேகமுண்டாகிறது. "தம்பினுங் கற்றாரைநோக்கிக் கருத்தழிக," என்பது கல்வி, ஒழுக்கம், முதலியவற்றிற்கெல்லாம் பொருந்தும். ஆதலால் நமது ஒழுக்கங்களிலுள்ள குறைகளையே நாம் கவனித்து, குணங்களை வேண்டுமானால், பிறர்பார்த்து மெச்சும்படி விட்டு விடுவது நமக்கு உத்தமமாகக் காணுகிறது.

***

'கடையைக்கட்டுவது நலமா, விரிப்பது நலமா,' என்பதை ஒரு பெரியவர் விசாரித்து, 'கட்டுவது நலமன்று,' எனத் தீர்மானிக்கிறார். ஏனெனில் 'கடையைக்கட்டு,' என்றால் 'நீ ஏதோ உனக்குத் தெரிந்ததாகப் பேசுகிறாயே அதை நிறுத்து,' என்று தாற்பரியம். இது அன்னியாயம். அவனவன் தான் தெரிந்ததையோ, அல்லது தெரிந்ததாக எண்ணியிருப்பதையோ பற்றிப் பேசுவது தான் அழகேயல்லது, முற்றும் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேசுவது அழகன்று. பிறர் கேட்கவு மாட்டார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் 'கடையைவிரிக்கும்படி,' நாம் அனுமதிகொடுத்தால் அவர் பேசும் விபரீதங்களும் நமக்கு அறிவையோ, சந்தோஷத்தையோ, அதிகரிக்கச் செய்யும். ஆதலால் அதற்குக் கட்டைபோடுவது சரியன்று.

***

நமக்குச் சில வருஷங்களுக்குமுன் கவர்னராக விருந்த ஆம்டில் பிரபு சென்ற வாரத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கொடி விருதொன்று பிரத்தியேகம் வேண்டுமென்று பிரஸ்தாபம் செய்திருந்தார். அதையொட்டி நமது நண்பரொருவர் சமீபகாலத்தில் ஒரு பத்திரிகையிலெழுதி, 'இந்திரவச்சிர' மென்னும் பழைய சித்திரத்தை அதிற் சித்திரிக்கவேண்டுமென்று கூறி, அதற்குப் பிரமாணமாக மகாபாரதம் முதலிய பழைய கிரந்தங்களிலிருந்து வச்சிரத்தினுடைய பெருமையை விளக்கி யெழுதுகிறார்.

***

இந்திய வர்த்தக மகா சங்கங்களைக் குறித்து முன்னொருக்கால் நாம் பேசினோமல்லவா? இதுவரை ஐரோப்பியச் சங்கங்களுக்கும், நமது சங்கங்களுக்கும் விசேஷ பரிசயமிருக்கவில்லை. ஏனெனில் நம்முடைய வர்த்தக நோக்கம் வேறாகவும், அவர்களுடையது வேறாகவுமிருந்ததுகொண்டு, வாஸ்தவத்தில் ஒற்றுமையிருப்பது அசாத்தியம். என்றாலும் சமீபகாலத்தில் இத்தேசத்தில் நடக்கும் கலகங்களாலும் 'வெடிகுண்டு' வகையரா உபத்திரவங்களாலும், உண்டாகக்கூடிய நஷ்டம் எல்லோருக்கும் ஒரே வகைத்தாதலால், கல்கத்தாவிலுள்ள சுதேசிய, விதேசிய வர்த்தக சங்கங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து கலகத்தை யடக்க வகை தேடுவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

***

மதிராசுக் கண்ணாடிப் பாத்திரத் தொழிற்சாலைக்குச் சென்றமீ நமது கவர்னரவர்கள் போய்ப் பார்த்தார். வேலை ஆரம்பமாகி நன்றாய் நடந்துவருவதாகக் கேட்டு நமக்கு மெத்தவும் சந்தோஷம். சோடா புட்டிகள் மேனாட்டுச் சரக்கைவிடத் திடமென்றும், கண்ணாடி ஓடு முதலிய சாமான்கள் நேர்த்தியாகச் செய்கிறார்களென்றும் தெரிகிறது. நமக்குள் நாகரிகம் பிரபலிக்குமளவிற்குக் கண்ணாடிப் பாத்திரங்களும், ஏனங்களும் வேண்டிவருவது நிச்சயம். இதற்குப் பத்தாயிரமயில் தூரத்திலிருந்து சரக்குத் தருவிப்பது எப்போதும் நல்லதல்ல. ஆதலால் இப்போது ஆரம்பித்தது கிரமமாய் நடந்து பெருகுமென்றும், வேறு நடக்கக்கூடிய இடங்களில் ஷாப்புகள் ஏற்படுமென்றும் நம்புகிறோம்.

***

இங்கிலாந்துக்கு வெகுகாலம் முதன் மந்திரியாக விருந்து புகழ்பெற்ற கிளாட்ஸ்டன் துரையவர்கள், எத்தனையோ சாமான்னியரைப் பிரபுக்களாக்கியும், தனக்குமட்டும் அந்தப்பதவி வேண்டாமென்றும், தான் கடைசிவரை சாமான்னியர்களான மகா ஜனங்களில் ஒருவராகவேயிருந்து போகவேண்டுமென்றும் சொல்லிவந்து, அப்படியே முடிவுபோக நடத்தியும் செய்தார். அவர் மகன் ஸ்ரீமான்-ஹெர்பர்ட்டு கிளாட்ஸ்டன், தென் ஆப்பிரிக்கா ஐக்கிய மாகாணங்களுக்குக் கவர்னர் ஜனரலாகப்போகிறார். அவருக்கு ஏதோபட்டம் கிடைத்திருப்பதாகவும், அவரும் அதை ஒப்புக்கொண்டிருப்பதாகவும் வதந்தி. இதையவரவர் தத்தம் மனோதருமப்படி யோசிப்பார். பட்டவர்த்தனரிடத்தில் நமக்கு விசே

க்ஷபக்தியில்லை பென்றுதான் இக்காலத்தில் அனேக விவேகிகள் சொல்லிவருவது.

இங்கி யில்லாமல் அச்சிடுவதற்கு ஒரு யுக்தி கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக 'சேம்பர்ஸ்' பத்திரிகையால் அறிகிறோம். அணிமாதி அஷ்டசித்திகளும் நமது நாளில் 'வைத்தியுதம்' என்னும் மின்சாரத்தினால் கிடைப்பதனால், இது ஒரு அதிசயமல்ல. இத்தனைநாள் இது உண்டாகாமலிருந்தது தான் அதிசயம். மின்சாரக் கம்பிகளைப் பாரத்துடன் சேர்த்து, ஒரு நொடியில் கறுப்பிலோ, வேறு வர்ணத்திலோ வேண்டியபடி அச்சிட்டுவிடலாம். செலவும், சிரமமும் சுருங்கும். வருணங்கள் பல சேர்ந்து ஒரேபக்கத்தில் அச்சிடுவது இப்போது வெகு கஷ்டசாத்தியம். அதுவிஷயத்தில் தான் இந்த உபாயம் வெகு உபகாரமாக விருக்கும்.

ஆஸ்திரியத் தலைமைப்பட்டணமாகிய வியென்னாவில் கோ ஆபரேடிவ் முறையில் ரொட்டிக்கிடங்கு ஏற்பட்டு வெகு சீராக நடந்துவருகிறதாம். 50000-முழுரொட்டிகள் அதில் தினசரி தயாராகிறதாம். அதில் 70000-பெயருக்கு மேலேயே மெம்பர்களிருக்கிறார்கள். யந்திரக்கருவிகள், சரக்குகள், எல்லாம் முதல்தரமானவைகள். முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அந்த யந்திரச்சாலையிலுழைக்கும் வேலைக்காரருடைய தசை. சாமான்னியமாய் முதலாளிகள் பணம்போட்டுக் கூட்டு வியாபாரம் அல்லது தொழில் நடத்துவதில், கூலிக்காரருக்கு லாபத்தில் ஒருகாசு கிடையாததுடன், வேலை சரியாக வாங்கிவிடுகிறார்கள். இதிலோ, கூலிக்காரரே முதலாளிகளுமாதலால், வேலை, தேகசௌக்கியம், கூலி, முதலிய எல்லா விஷயங்களும் அவர்களுடைய க்ஷேமத்தைக் கோரியே ஏற்படுகின்றன. ஓ நண்பர்களே, இதைக்கவனியுங்கள், சுகமடையுங்கள்.

'விஹாரிணி' முதல் நெம்பரில் சொல்லிய ஸ்ரீபுத்த பகவானுடைய எலும்புகளைப் பர்மாவுக்கு அனுப்பிக்கொடுக்கும்படி அவ்விடத்திய பக்தர்கள் கேட்டதாகவும், அதற்கு இந்தியாகவர்ன்மெண்டார் சம்மதித்ததாகவும் முந்தியே தெரிந்திருந்ததில், சமீபத்தில் அவ்விடமிருந்து ஒரு புத்தகோஷ்டி கல்கத்தாவுக்குப் போனதாகவும், அவர்களிடம் மேற்கண்ட எலும்புகளைச் சம்புடத்துடன் ராஜப்பிரதிநிதியவர்கள் ஒப்புவித்ததாகவும் கேள்விப்படுகிறோம். இந்தியாவில் புத்தர்களையும், புத்தமதத்தையும், புத்தபகவானுடைய எலும்புவகைராக்களையுங் கவனிப்பாரில்லாமையால், இவைகள் மந்தலேக்குப்போவதில் யாரும் ஆக்ஷேபிப்பாரில்லை. சட்டப்படி நடக்கவேண்டிய சடங்குகள் நடந்தாகிவிட்டன.

பம்பாய் யூனிவர்ஸிட்டிப் பரீக்ஷையில் தேறிய குமாரர்களுக்குப் பதிவுபோல் ஆசீர்வாதம் செய்கையில், கவர்னரவர்கள் சொல்லியது :—" ஓ குமாரர்களே, நீங்கள் அவசரப்படாதேயுங்கள். இந்தியாவைக் கட்டியாளுவது எவ்வளவு சிரமமென்பது உங்களுக்குத் தெரியாது. சுற்றிலுமுள்ள ராச்சியங்களில் என்ன நடக்கிறது, அவைகளால் உங்கள் ராச்சியத்திற்குக் கிடைக்கக்கூடிய லாப நஷ்டங்கள் என்ன, என்பதைக் கவனியுங்கள். தவிர இந்நாட்டிலேயே வேலிகள் பயிரைத்தின்பது சாத்தியம். அதையும் கவனியுங்கள்," என்கிறார். இது சரியே. ஆதலால்தான் நம்மவர்களில் விவேகிகள், "ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு துரைத்தனம் நடத்தினால், அதிலுள்ள கஷ்டநிஷ்டூரங்கள் ஜனங்களுக்கு நன்றாயுறைக்கும். வாய்ச்சளுவாகப் பேச்சுப்புறப்படாது," என்று வாதாடி வந்திருக்கிறார்கள்.

மதிராசில் வியாபாரம் முதலியவற்றில் தேர்ந்து கைவலுத்திருப்பவர்கள், தரும புத்தியுடன் கூலிக்காரர் விஷயத்திலும் அவர் மக்கள் விஷயத்திலும் சிரத்தை வைத்து உழைத்து வருவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். பிப்ரவரிமீ 14-தேதி இவர்கள் ஒரு மகாநாடு கூடி ஸ்ரீமான்-ரங்கைய கவுண்டர் சபா நாயகராகவிருந்து நடவடிக்கை நடத்தினார்கள். ஸ்ரீமான்-எம். மாசிலாமணி முதலியார் கூலிக்காரருடையவும், சம்பளம் குறுகிய வேலையாட்களுடையவும், தசையை வருணித்து, இத்தன்மையோருடைய மக்களுக்குக்கல்வி, தொழிற்பயிற்சி முதலியவற்றிற்குத் தற்காலம் ஒருசவுகரியமுமில்லாமலிருப்பதாலும், அதனால் இம்மக்கள் கெட்டுத் துஷ்டராகி நமக்குக் கீழ்வயிற்றுக் கழலைகளாகிவிடுவதாலும், இவர்களுக்கு எலிமெண்டரி தரபுவரை இலவசமாகப் படிப்பும், ஏதாவது தொழிலும் கற்பிக்கவேண்டி நடக்கும் பிரயத்தனத்தை விவரித்தார். இந்தச் சபைக்கு ஐரோப்பிய வியாபாரிகளும் வந்திருந்து ஆமோதித்தது ஒரு விசேஷம்.

கொல்லத்திலிருந்து திருவனந்தபுரம் சுமார் 40 மைல். இந்த 40-மைல் போவதற்கு இப்போதிருக்கிறபடி சுமார் 20-மணி நேரமாகிறது. இது பெரிய உபத்திரவமென்பதில் சந்தேகமில்லை. இதற்கு ஒரே பரிகாரந்தான் உள்ளது. அதாவது கொல்லம்வரை வந்தரயிலை மீதியுள்ள 40-மைலுக்கும் கொண்டுபோவதாம். ஆகவே இந்தக்காரியத்தை இப்போது தொடங்கியிருப்பதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம.

சமீபகாலத்தில் காணும் ஹாலிதூமகேதுவைக் குறித்து இலங்கையிலுள்ள பலருக்கு, "அதிக அச்சமும், வருங்கால ஸ்திதியைப்பற்றிச் சில அங்கலாய்ப்பான எண்ணங்களும் உண்டாயிருக்கின்றன. முன்பு ஒரு முறை வால்வெள்ளி தோற்றியகாலத்தில் மீன்கள் புழுத்தனவாகையால், இம்முறையும் அவ்வாறேயாகும் என்பது அவர்களுக்குண்டாயிருக்கும் பொதுவான எண்ணம். அதனால் அவர்கள் மீன்கள் இறைச்சிகளை இப்போதே தள்ளி மரக்கறிகளைப் பாவிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்."



Photo by Carnatic Studio.]

பரமஹம்ஸ பிரேமானந்த பாரதி சுவாமிகள்